REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 13 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 62 | March 13,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

இன்னும் 2 தினங்களில்...

## ஜெனீவாவில் தீர்வு காண்பதற்காக படையினரை அரசு காட்டிக் கொடுக்காது

### பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜெனீவா விவகாரத்தில் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் ஒரு போதும் இராணுவத்தை காட்டிக் கொடுக்காது. அதேநேரம் இலங்கையின் மனித உரிமை தொடர்பாக கருத்துரைக்கும் தார்மீக உரிமை மேற்குலக நாடுகளுக்கு இல்லையென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் மனித உரிமை தொடர்பில் கருத்துரைப்பதற்கு மேற்குலக நாடுகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் எவ்வித மனித உரிமை மீறல்

06

ஜெனீவா மாநாட்டு நேரத்தில்

## பிம்ஸ்டெக் மாநாடு குறித்து போலி செய்திகள்

### அமைச்சர் தினேஷ் விளக்கம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ஜெனீவா மாநாடு நடைபெற்றுக்கொண்டிக்கு தருணத்தில் நாட்டை சிக்கலுக் குட்படுத்தும் நோக்கில் பிம்ஸ்டெக் மாநாடு தொடர்பில் போலியான செய்திகள் பரப்பப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், பிம்ஸ்டெக் என்பது பங்களாதேஷ், இந்தியா, பூட்டான், மியன்மார், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளின் கூட்டமைப்பாகும். அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த மாநாட்டை நடத்த முடியும்.

06

## இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

### நல்லூரில் வழிபாடு; நல்லை ஆதீனத்துடன் சந்திப்பு



வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த அவர், நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச்

06

# சீனி வரி குறைப்பினால் அரசுக்கு நிதி இழப்பு என்பது பொய்யானது

### அடிப்படையற்ற குற்றச்சாட்டு; நாட்டு மக்களுக்கே அதிக பயன்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

சீனி இறக்குமதிக்கான வரி 25 சதமாக குறைக்கப்பட்டமையால் 1.59 பில்லியன் நிதி இழப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றதாகும். அரச வரிக் கொள்கையின் பிரகாரம் எவ்வித இழப்பும் ஏற்படவில்லையென்பதுடன் மக்களுக்கே வரி குறைப்பின் பயன் கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல நேற்றுத் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சீனி இறக்குமதிக்கான வரி குறைப்பு நாட்டில் கடந்த சில தினங்களாக பேசுபொருளாகியுள்ளது. அரச வரிக் கொள்கை தொடர்பில் தெளிவில்லாதவர்கள்தான் இவ்வாறு கூறுகின்றனர். கால சூழ்நிலைகளுக்கேற்ப எந்தவொரு பொருளுக்கும் வரி குறைப்பை அல்லது அதிகரிப்பை அரசாங்கத்தால் மேற்கொள்ள முடியும்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 13ஆம் திகதி 50 ரூபாவாகவிருந்த சீனி இறக்குமதிக்கான வரி 25 சதமாக குறைக்கப்பட்டது. அத்தருணத்தில் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகமாக இருந்தமையால் அத்தீர்மானத்தை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. சீனிக்கு மாத்திரமல்ல வெங்காயம், பருப்பு, டின் மீன் உட்பட 06 அத்தியாவசியப் பொருட்களுக்கு இறக்குமதி வரி

06





பேலியகொடை மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள நவீனமயப்படுத்தப்பட்ட மொத்த விற்பனைப் பிரிவை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகியோருடன் இணைந்து வறுமை ஒழிப்பு, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ நேற்று (12) அங்குரார்ப்பணம் செய்தபோது....

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; மிகுதி அறிக்கை சட்ட மா அதிபரிடம்

### 22 அத்தியாயங்கள் நேற்று கையளிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் மேலும் 22 அத்தியாயங்கள் நேற்றையதினம் ஜனாதிபதியின் சட்ட விவகார பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹண தீரவினால் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேராவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்தமாதம் 25ஆம் திகதி ஜனாதிபதியின் சட்ட விவகார பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்தா

06

## ச.தொ.ச.வில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

### நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது



ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் சின்ன வெங்காயம், சிவப்பரிசி, உள்ளூர் உருளைக் கிழங்கு உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி தற்சமயம் 300 ரூபாவுக்கு விற்கப்படும் ஒரு கிலோ சின்ன வெங்காயத்தை 195 ரூபாவுக்கும், ஒரு கிலோ உள்ளூர்

06

## நாட்டின் தேசியக் கொடியை அவமதிக்கும் வகையிலான பொருட்கள் விற்பனைக்கு

### தூதரகங்கள் ஊடாக உதவி பெறப்பட்டு உரிய விசாரணை

**நமது நிருபர்**



இலங்கையின் தேசிய கொடி பொறிக்கப்பட்ட கால் விரிப்புக்கள், மேசை விரிப்புக்கள் மற்றும் பாதணிகள் இணையவழி சந்தையில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து அது தொடர்பாக சர்வதேச வர்த்தக சபையூடாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

உலகின் முன்னணி இணையவழி சந்தையான அமேஸொனில் (Amazon) இலங்கை தேசியக் கொடியில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது அதனை உள்ளபடியே அச்சிட்டு தயாரிக்கப்பட்ட கம்பளம் ஒன்று 12 அமெரிக்க டொலர்களுக்கு (சுமார் 2,500 இலங்கை ரூபா) விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன்,


06

இராகலை தோட்ட தொடர் குடியிருப்பில்

## தீ விபத்து; 16 வீடுகள் முற்றாக தீக்கிரை 14 குடும்பங்களை சேர்ந்த 61 பேர் நிர்க்கதி



பாடநூல்கள், ஆவணங்கள், பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

இராகலை தோட்டம் 2ஆம் பிரிவில் 16 வீடுகளைக்கொண்ட தொடர்குடியிருப்பில் நேற்று (12) அதிகாலை 3.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 வீடுகள் முற்றாக எரிந்து

06

## இலங்கையில் தென்னாபிரிக்க B1–351 கொரோனா வைரஸ்

### ஒருவருக்கு நேற்று தொற்று உறுதியானது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தென்னாபிரிக்காவில் பரவிவரும் மிக வேகமாக பரவக்கூடிய B1.351 புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று நோயாளி ஒருவர் இலங்கையில் இனங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மீள் சக்தி விஞ்ஞான மற்றும் உயிரியல் விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் சந்திம ஜீவந்தர இத்தகவலை தெரிவித்துள்ளார்.

தன்சானியாவில் இருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தல் மத்திய நிலையமொன்றில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வந்த கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவருக்கே இவ்வாறு தென்னாபிரிக்க வீரியமிக்க கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை நாட்டில் நேற்றைய தினம் வரை 86,989 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

06

யாழில். தாயால் சித்திரவதை செய்யப்பட்ட குழந்தை

## தத்தெடுக்க நூற்றுக்கும் மேற்பட்டோர் விருப்பம்




யாழ். மணியந்தோட்டத்தில் குழந்தையை துன்புறுத்திய தாய் பற்றிய செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட குழந்தையை தத்தெடுப்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட

06

## இரு தடுப்பூசிகளையும் பெற்று நாடு திரும்புவோருக்கு சலுகை

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனியிடம் மனோ கோரிக்கை



தாம் வாழ்ந்த நாட்டில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று, நாடு திரும்பும் இலங்கையரை 14 நாட்கள் கட்டாய தனிமைக்காக, அரசு நடத்தும் நிலையங்களுக்கோ அல்லது சொந்த நிதியை செலுத்தச் சொல்லி நட்சத்திர விடுதிகளுக்கோ அனுப்பப்படக்கூடாது. இந்த நடைமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களது சொந்த வீடுகளில் சுயதனிமைக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென மனோ கணேசன் எம்பி, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இதுபற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என இராஜாங்க

06

## சீனிக்கான வரி குறைப்பு மூலம் அரசுக்கு ரூ.15.9 பில்லியன் இழப்பு

### ஹந்துன்னெத்தி அடிப்படை உரிமை மீறல் மனு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட சீனி மீதான வரிகளை குறைத்ததன் ஊடாக, மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதுடன் அரசாங்கத்திற்கு 15.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து அவர் இந்த மனுவை தாக்கல்

06

## மியன்மார் அமைச்சருக்கான அழைப்பை மீளப் பெறுக

### அவரது வரவு சர்ச்சையை ஏற்படுத்தும் அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரல்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கையில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு மியன்மார் வெளிவிவகார அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை மீள பெற வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பிம்ஸ்டெக் நாடுகளின் அமைச்சரவைக் கூட்டத்தில் மியன்மாரின் தற்போதைய வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளமை சிக்கலானதெனவும்

06

விக்கல் வீராச்சாமி



வர்த்தமானியில அறிவிச்சு 1,000 ரூபாவை அரசு வழங்கினாலும் நம்முடைய ஆட்கள் அதை வழங்க விடமாட்டாங்கள் போலக் கிடக்கு....!

உண்மைதான், அவங்களுக்கு 1,000 ரூபாய விடவும் அவங்கட அரசியல்தான் முக்கியமா கிடக்கு...!!!

# கிராமிய வீடமைப்பு செயற்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் ஆலோசனை





கிராமிய வீடமைப்பு திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை கூட்டமொன்றை நடத்தியுள்ளார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டட பொருட்கள் தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் விசேட முன்னேற்ற மீளாய்வில் கலந்துக் கொண்ட பிரதமர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தினார்.

நேற்று செத்சிறிபாயவிலுள்ள புத்தசாசன,மத விவகாரம் மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்த விசேட முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நடைபெற்றது.

அனைவரும் வீடு மற்றும் நிலையான நிர்மான வேலைத்திட்டம் என்ற தொனிப் பொருளுக்கமைய தமது இராஜாங்க அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெளிவுபடுத்தினார்.

கிராமிய வீடமைப்புக்கு மேலதிகமாக நிர்மாணத்துறை மற்றும் கட்டடத்துறையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தினார்.

'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' என்ற வீடமைப்பு திட்டத்துக்கமைய 2020ஆம் ஆண்டில் 6,745 கிராமிய வீடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக அரசாங்கம் 5,257 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டுள்ளது.

கிராமிய வீடமைப்பு திட்டத்தின் கீழ் 2021ஆண்டில் 14,022 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றிவ் 1,917 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக மகா சங்கத்தினரது பெற்றோருக்கான மிஹிது வீடமைப்பு செயற்திட்டம் குறித்தும் பிரதமர் கவனம் செலுத்தினார். இதற்கமைய, அந்த செயற்திட்டத்தின் கீழ் 2,000 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவற்றில் 50 வீடுகளின் நிர்மாணிப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் பிரதமருக்கு தெரிவித்தார்கள்.

# சீனாவிடம் இருந்து இலங்கை பெறும் நிதி தொடர்பாக அவதானிக்கிறோம்

## சர்வதேச நாணய நிதியம்




இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான புதிய நிதிப்பெறுகை ஒப்பந்தம் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கிறது.

சீனா 10 பில்லியன் யுவான் (1.54 பில்லியன் அமெரிக்க டொலர்) நிதியை இலங்கைக்குக் கடனாக வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறது. நாட்டில் நிலவும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கு இது உதவியாக அமையும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கூறியிருக்கிறார்.

இந்நிலையில், இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான அண்மைய நிதிப்பெறுகை ஒப்பந்தம் உள்ளடங்கலாக இலங்கையின் பொருளாதார மற்றும் நிதிக்கொள்கைகள் தொடர்பில் கண்காணித்து வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள அதிகாரி கெரி ரைஸ் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி கொரோனா வைரஸ் பரவலினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் எம்மிடம் உடனடி நிதியுதவியைக் கோரியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார ரீதியான சவால்கள் மற்றும் உயர் கடன்சுமை ஆகியவற்றின் காரணமாக கடனுதவி வழங்குவது குறித்து ஆராய்வதற்கு ஏனைய நாடுகளை விடவும் உயர்வான காலம் தேவைப்படுவதாகவும் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

# இந்திய உயர்ஸ்தானிகர் வடக்கு விஜயம்





வடக்கு மாகாணத்துக்கான நான்கு நாள் விஜயமொன்றை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் ஆரம்பித்தார். திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி பூஜைகளில் கலந்துகொண்டார்.

பின்னர் இந்திய அரசாங்கத்தால் அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாணப் பணிகளை உயர்ஸ்தானிகர் பார்வையிட்டார்.இந்த திட்டமானது 326 மில்லியன் ரூபா நன்கொடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல நூற்றாண்டுகளாக இந்தியா இலங்கையை இணைக்கும் பாலமான ராம்சேது (ஆதாம்பாலம்)பகுதியிலும் அன்றையதினம் உயர்ஸ்தானிகர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தார்.

மன்னார் ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர்மஸ்தான், குலசிங்கம் திலீபன் ஆகியோரின் பிரசன்னத்திற்கு மத்தியில் மன்னார் புனித மடுமாதா ஆலயத்தில் யாத்திரிகர்களுக்கான144 இடைத்தங்கல் வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான அடிக் கல்லினை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்னரணதுங்க அவர்களுடன் இணைந்து உயர்ஸ்தானிகர் நாட்டி வைத்தார்.

இந்தவீட்டு அலகுகள் இந்தியாவினால் வழங்கப்படும் 300 மில்லியன் ரூபா பெறுமதியான நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளன. வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் மாகாணத்தின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளுடன் மதியபோசன சந்திப்பிலும் உயர்ஸ்தானிகர் கலந்துகொண்டிருந்தார்.

கல்வி, ஆளுமை விருத்தி, சுகாதாரம், விவசாயம், நீர் மற்றும் மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிகவும் ஆழமான ஈடுபாடு குறித்து பரந்தளவிலான கலந்துரையாடலில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவர் எஸ்பாலச்சந்திரன் உயர்ஸ்தானிகரைக் கௌரவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இராப்போசன விருந்துபசாரம் ஒன்றிலும் கலந்து கொண்டிருந்தார்.


இதன்போது, அரசியல், பொருளாதாரம், கல்வி, சமூகம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த முன்னணி பிரமுகர்களுடன் உயர்ஸ்தானிகர் சம்பாஷணையினை மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவினால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் அதிகளவான முதலீடுகள் போன்றவற்றினூடாக வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு தொடர்பாக இராப்போசன விருந்துபசாரத்தில் இடம்பெற்றிருந் தகலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டது.

வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி, கைத்தொழில் அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறுதுறைகளில் இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டிருந்தமைக்கான வரலாற்றினை இந்திய அரசாங்கம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் -ஐக்கிய தேசிய கட்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்தி மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது என ஐக்கிய தேசிய கட்சி கண்டி மாவட்ட தலைவி சாந்தினி கோன்காகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

மாகாணசபை தேர்தலை நடத்தி அதற்கான மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அரசாங்கம் மாகாண சபைக்கு உரித்தான நிறுவனங்களின் நிர்வாகத்தை அரச அதிகாரிகளுக்கு கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றது. மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டிய நிறுவனங்களை அரச அதிகாரிகளை நியமித்து, அரசாங்கத்துக்கு தேவையான முறையில் இதன் நிர்வாகத்தை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது. அதனால் மாகாணசபை தேர்தலை நடத்துவதை தொடர்ந்தும் காலம் கடத்தாமல் விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது. சர்வதேச பெண்கள் தினத்திலே இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மேலும் 2017ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு 25 வீத கோட்டாவை அறிமுகப்படுத்தியது ஐக்கிய தேசிய கட்சியாகும். அதேபோன்றதொரு பிரேரணையை மாகாண சபையிலும் உள்வாங்க மாகாணசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் பிரேரித்திருக்கின்றோம் என்றார்.

# மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்தினது

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்ற மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான தூதுவர்கள் ஒன்றிணைந்து வலியுறுத்தியுள்ளனர்.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த எட்டு நாடுகளிலுள்ள மனித உரிமை தூதுவர்கள் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கைது செய்யப்பட்டு, தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பெரிதும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 10 மாத காலமாகத் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர், தற்போது ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மீது அவரால் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைவாழ் முஸ்லிம்கள் உள்ளடங்கலாக சிறுபான்மை சமூகத்தவரின் உரிமைகளுக்காகவும் பிரிவினைக் கொள்கைகளுக்கு எதிராகவும் முன்நின்று செயற்பட்டவர்களில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா முக்கியமானவராவார்.

நாடொன்றில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். எனவே மனித உரிமை செயற்பாட்டாளர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் நிலைப்பாட்டை ஏற்பதுடன், ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்ற மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

# சீனாவிலுள்ள இலங்கை தூதரகமூடாக நடவடிக்கை



இலங்கை தேசியக் கொடி வடிவில் கால்மிதியொன்றுக்கான விளம்பரம் இணையத்தில் வெளியாகிய சர்ச்சை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமேஸான் இணையத்தளத்தில் இந்த விளபரம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை 12 அமெரிக்க டொலர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன நிறுவனமொன்று இக் கால்மிதியை தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இக் கால்மிதியை தயாரித்த சீன நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு பெய்ஜிங் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பே அறிவுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கையின் மின்னுற்பத்திக்கு துருக்கி உதவத் தயாராகவுள்ளது

## இலங்கைக்கான தூதுவர் உறுதியளிப்பு



இலங்கை பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் டீசல் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு மாறாகத் தேசிய மின் கட்டமைப்பின் 70 வீதம் மீள் பிறப்பாக்க சக்தியின் ஊடாக உற்பத்தி செய்வதற்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கமைய மின்சக்தி அமைச்சினால் இயங்கிவரும் தேசிய மின்சார திட்டத்திற்குத் தேவையான சகல ஒத்துழைப்புகள் வழங்குவதற்கு தமது நாடு தயாராகவுள்ளது என இலங்கைக்கான துருக்கி நாட்டுத் தூதுவர் தெரிவித்தார்.மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் மின்சக்தி அமைச்சில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக இருநாட்டுக்குள் இருக்கும் நட்புறவை பலப்படுத்து முகமாக நடைபெற்ற இச் சந்திப்பின்போது இலங்கை மின்சார துரையில் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

தேசிய மின் கட்டமைப்புக்காக மீள் பிறப்பாக்க சக்தியின் பங்களிப்பு 17 வீதம் வரை உயர்த்திச் செய்வதற்காகவும் 2025 ஆண்டின் போது டீசல் பயன்படுத்தி மின்னுற்பத்திச் செய்வதை 5 வீதம் வரை குறைப்பதற்கும் மற்றும் 2030 ஆண்டாகும் போது அதை முற்றிலும் நிறுத்தப்படுவதற்காகவும் திட்டமிட்டுள்ளதென்பதைத் தெரிவித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும அதற்காக பயன்படுத்தக்கூடிய இயற்கை வளங்களை அபிவிருத்திச் செய்வதற்கும் மற்றும் புது வளங்களை ஆராய்ச்சி செய்வதற்காகவும் திட்டமிட்டுள்ளதென்பதையும் குறிப்பிட்டார்.

# ஹிஜாஸ் ஹிஸ்புல்லாக்கு எதிராக குற்றப்பத்திரம்

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் அல் சுஹாரியா மத்ரஸா பாடசாலை அதிபர் சலீம் கான் மொஹமட் ஸாகீர் ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

புத்தளம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்வதற்காக சட்ட மாஅதிபரால் இந்த குற்றப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரின் இணைப்பதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் சர்வதேச குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் இந்த குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



நாட்டில் இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் சம உரிமை இயக்கத்தினரினால் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தின் போது...

# சடலமாக மீட்கப்பட்ட இளம் வர்த்தகர் தொடர்பில் பொலிசார் தீவிர விசாரணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொஹுவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆசிரி மாவத்தையில், தீக்கிரையான காருக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் வர்த்தகர் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, காரிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் இளம் வர்த்தகர் நசார் மொஹம்மட் அப்வான் என அடையாளம் காணப்பட்டுள்ள போதும், சடலம் தீயில் கருகியுள்ளதால் ஆள் அடையாளத்தை உயிரியல் கூறுகளைக் கொண்டு உறுதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் டி.என்.ஏ. பரிசோதனைகளை முன்னெடுக்க கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இரு பொலிஸ் குழுக்கள் இவ்விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன கூறினார்.

இந் நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ள இளம் வர்த்தகரின் மரணம், குற்றச் செயல் ஒன்றினால் ஏற்பட்டதா (கொலையா) அல்லது வேறு காரணங்களால் (விபத்து) ஏற்பட்டதா என்பதை உறுதி செய்ய அறிவியல் தடயங்களை வைத்து தற்போது விசாரணைகள் இடம்பெறுவதாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண கூறினார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய முடிவதாவது, நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில், கொஹுவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆசிரி மாவத்தையில் கார் ஒன்று தீ பற்றி எரிந்துள்ளது.

வெகன் ஆர் ரகத்தை சேர்ந்த குறித்த கார் தீயினால் முற்றாக கருகியிருந்த நிலையில், பொலிசார் சோதனையிட்ட போது காருக்குள் கருகிய நிலையில் சடலம் ஒன்று உள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து விசேட குற்றவியல் விசாரணைகளை கொஹுவளை பொலிசார் ஆரம்பித்தனர். எரிந்த காரை அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் சிறப்பு குழுவினர் பார்வையிட்ட நிலையில், கார் எவ்வாறு எரிந்தது என்பது தொடர்பில் அவர்கள் சிறப்பு விசாரணைகளையும் சோதனைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெளிவான விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண, இந்த சம்பவம் குற்றச் செயல் ஒன்றின் பெறுபேறா என்பதை கண்டறிய தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கூறினார்.

நேற்று முன்தினம் மாலையாகும் போதும், இந்த விடயம் தொடர்பில் 6 வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. உயிரிழந்துள்ளதாக நம்பப்படும் நபரின் மனைவி, மனைவியின் தந்தை, உயிரிழந்துள்ளதாக நம்பப்படும் நபரின் தாய், மனைவியின் தந்தையின் சாரதி உள்ளிட்ட 6 பேரிடமே வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 13 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் மாசி 29

ராகுகாலம் : காலை : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: அமாவாசை



**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பிரீதி |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | ஆர்வம் |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | பாராட்டு |
| கன்னி | பாசம் |
| துலாம் | முயற்சி |
| விருச்சிகம் | சுகம் |
| தனுசு | வரவு |
| மகரம் | ஓய்வு |
| கும்பம் | பரிசு |
| மீனம் | நிம்மதி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

புதிய தேசிய வர்த்தகக் கொள்கை தயாரிப்பு

# எதிர்வரும் வாரங்களில் பொது மக்களின் கருத்துக்கள் பெறப்படும்

## அமைச்சர் பந்துல குணவர்தன



புதிய தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரிப்பதற்கான பொது மக்களின் கருத்துக்கள் எதிர்வரும் வாரங்களில் பெறப்படுமென அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் (10) தெரிவித்தார்.

தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரிப்பதற்கு நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும், இந்தக் குழு கூடுவதற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் தனியான அறையொன்று ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இந்த நிபுணர்கள் குழுவின் தலைவராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவுத் துறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் கூட்டுறவுக் கொள்கையொன்றை விரைவில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

புதிதாக சதொச விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும்போது சாத்தியக்கூற்று ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

06



## தவக்கால சிந்தனை

### கடவுள் யாவும் அறிவார்

நாம் கடவுள் அல்ல. கடவுளால் படைக்கப்பட்டவர்கள். எம்மைப் படைத்த கடவுளுக்கு நாம் யார் என்று நன்றாகத் தெரியும். எமது நாளாந்த ஜெபத்திலோ அல்லது வழிபாட்டிலோ நாம் கடவுளுக்கு முன்பாக எம்மைப் பற்றி தவறான அல்லது pபொய்யான சான்றிதழ் கொடுக்க முடியாது.

பிழையானவற்றை செய்துவிட்டு, நாம் செய்தது சரி என்று கடவுளை ஏமாற்ற முடியாது. எமது வாழ்வில் நாம் செய்கின்ற தான தர்மங்கள், கடவுளுக்கு காணிக்கை இடுதல் போன்றவற்றை வைத்துக் கொண்டு அவ்வாறு செய்யாதவர்களை நாம் பிழையாக எமது உள்ளத்தில் எண்ணுதல் கூடாது. அவர்களது உள்ளத்தையும் கடவுளே அறிவார்.

நாம் பாவங்களை விலக்கி வாழ்பவர்களாக இருந்தாலும், உள்ளத்தில் எம்மைப்பற்றி பெருமிதமாக எண்ணி கர்வம் கொள்ளுதல் கடவுளுக்கு அருவருப்பானது. ஆலயத்திற்கு இந்நாட்களில் அதிகமாக செல்லும் நாம், அங்கு வருபவர்களைப் பற்றி உள்ளத்தில் விமர்சிக்க கடவுள் எமக்கு அனுமதி தரவில்லை.

நாம் அருவருப்பாக எண்ணுபவர்கள் கடவுளுக்குப் பிரியமானவர்களாக இருக்கலாம். எம்மைப்பற்றி நேர்மையானவர்களாக எண்ணுகின்ற எமது உள்ளம் கடவுளுக்கு அருவருப்பானதாக இருக்கலாம். தவக்காலமானது, எமது உள்ளம் கடவுள் முன் தாழ்ச்சியுடன் உள்ளதா என்று பரிசீலிக்கவே அன்றி,

மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பதற்காக அல்ல.

"தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவர்; தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்" (லூக்கா 18,14).

அருட்சகோ நீகன் லோகு...

# திடீரென தீப் பற்றி எரிந்த ஆட்டோ



## பொகவந்தலாவையில் சம்பவம்

பொகவந்தலாவை நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியொன்று திடீரென பற்றி எரிந்துள்ளது.

பொகவந்தலாவை நகர தபாலகத்திற்கருகில் நிறுத்தி வைக்கப்பட்ட முச்சக்கரவண்டியே (12) நேற்றுக் காலை 08.30 மணியளவில் தீப் பற்றி எரிந்துள்ளது. உடனடியாக பொலிஸாரும் அருகிலுள்ளவர்களும் தீயை அணைத்துள்ளனர்.

குயினா தோட்டத்திலிருந்து பொகவந்தலாவை

06



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான கரிசனைகள் அடங்கிய 'ஜெனீவா நெருக்கடி முன்னோக்கிச் செல்லும் பாதை ' நூல் நேற்று (12) வெளியுறவு அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா எரம்பேபொல மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. இந்நூல், தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் தோறும் மின்னூல் வடிவில் விநியோகிக்கப்படும். (படம்: கயான் புஷ்பிக்க)

# யாழ்.- சென்னை நேரடி விமான சேவை; விரைவில் ஆரம்பிக்க திட்டம்



**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 நோய்த்தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்னா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இரத்மலான, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு இடையேயான உள்நாட்டு விமான சேவையை விரைவில் தொடங்கவும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களை சர்வதேச விமான நிலையங்களாக அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். இந்திய அரசாங்கத்தின் 300 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் மடு தேவாலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்காக அமைக்கப்படும் இடைத்தங்கல் வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றுமுன்தினம் மடுவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய அரசாங்கத்தின் ஆதரவோடு மன்னாரில் உள்ள மடு தேவாயல மைதானத்தில் இடைத்தங்கல் வீட்டுவசதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

06

பேலியகொடை மீன் சந்தை

# நவீன மயப்படுத்தப்பட்ட மொத்த விற்பனை பிரிவு பயனாளிகளிடம் கையளிப்பு

பேலியகொடை மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள நவீனமயப்படுத்தப்பட்ட மொத்த விற்பனைப் பிரிவை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (12) இடம்பெற்றது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜயசேகர ஆகியோருடன் இணைந்து வறுமை ஒழிப்பு, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கொரோனா பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் நவீன வசதிகள் உள்ளடக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள பேலியகொடை சந்தையின் மொத்த விற்பனை பிரிவின் பணிகளை கடற்றொழில் அமைச்சரின் அழைப்புக்கமைய பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

கடந்த வருடம் பேலியகொடை மீன் சந்தையில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக சந்தையின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இருப்பினும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசகர ஆகியோர் அமைச்சு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளை தொடர்ந்து சுகாதார முறைகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட முறையில் சந்தையின் வியாபார நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், மொத்த விற்பனையை விரிவுபடுத்தும் வகையில் நவீன வசதிகளுடனான கட்டிடத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளதுடன், நேற்று அது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஏழு அமீரகங்களில் ஒன்றான ராஸ் அல் கைமாவின் ஆட்சியாளர் Saud bin Saqr Al Qasimi யை சந்தித்து உரையாடியபோது..

கைப்பேசி, சிம் அட்டைகள், போதைப் பொருள்;

# சிறைச்சாலை சுற்றிவளைப்பில் சட்டவிரோத பொருட்கள் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது கையடக்கத்தொலைபேசி உட்பட மேலும் சில உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவிக்கையில்; பொலிஸ் விசேட செயலணியினரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.

06

நாட்டின் புதிய சூழலுக்கேற்ப

# வரித் திருத்தங்களுடன் கூடிய புதிய வர்த்தமானி அறிவித்தல் அடுத்தவாரம் வெளியீடு

## உள்ளூர் உளுந்து உற்பத்தி 10 மெ.தொன்னாக அதிகரிப்பு

- நிதி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டின் புதிய சூழலுக்கேற்ப வரித் திருத்தங்களுடன் கூடிய புதிய வர்த்தமானி அறிவித்தலொன்று அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளதாக நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல தெரிவித்தார்.

சினிமாத்துறை, தகவல் தொடர்பாடல் துறையினர், விளம்பர தொழில் துறையினர் உட்பட பல்வேறு தரப்பினரும் முன்வைத்துள்ள கோரிக்கைகளையும் அடிப்படையாக கொண்டே வரித் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் உளுந்து, மஞ்சள் உள்ளிட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி தடையால் நாட்டின் நுகர்வுக்குத் தேவையான அளவில் இவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசியப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமையளிக்கும் அரச கொள்கையின் பிரகாரம் இந்தவிடயத்தில் எம்மால் சாதிக்க முடிந்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

நிதி அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பல்வேறு தரப்பினரும் கொவிட்19 நெருக்கடியை அடிப்படையாக கொண்டு தாம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் வலியுறுத்தி வரிச் சலுகைகளை கோரியுள்ளனர்.

புதிய அரசாங்கம் அமையப்பெற்றதும் வற் வரி 15 சதவீதத்திலிருந்த 08 சதவீதமாக குறைக்கப்பட்டது. அதன் பின்னர் 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்திலும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. என்றாலும் கொவிட்19 நெருக்கடியால் பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக சுற்றுலாத்துறை வருமானம் பூச்சியமாக இருந்தது. அதேபோன்று சினிமா துறையில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

சினிமாத் துறையினர்,

06

# நாட்டில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டில்



## டாக்டர் சுகத் சமரவீர தகவல்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் டாக்டர் சுகத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் முறையான விதத்தில் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறதென்றும் இதன் மூலம் நோய் கட்டுப்படுத்தப்படுவதாகவும் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் டாக்டர் சுகத் சமரவீர தெரிவித்துள்ளார்.

# 'மூதறிஞர் சித்திலெவ்வை' முதல் கலாநிதி ஷுக்ரி வரை'

## தொடர் சொற்பொழிவு

மூதறிஞர் முஹம்மது காஸிம் சித்திலெவ்வை தொடக்கம் கலாநிதி ஷுக்ரி வரை முஸ்லிம் கல்விக்கு அளப்பெரும் பணி செய்த கல்வியாளர்கள் பற்றி பன்னூலாசிரியரும் அறிஞருமான ஏ.எம். நஹியாவின் தொடர் பேச்சு நிகழவிருக்கின்றது.

அதன் முதலாவது சொற்பொழிவு எம்.ஸி.சித்திலெவ்வையின் முஸ்லிம் சமூக கல்விச் சிந்தனை பற்றியதாக அமையவிருக்கிறது. வாப்பிச்சி மரிக்கார், ஐ.எல்.எம் அப்துல் அஸீஸ், ஒறாபி பாஷா, நீதியரசர் எம்.ரி. அக்பர், சேர் ராஸீக் பரீத், எ.எம்.எ அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூத், எஸ்.எல்.எம் ஷாபி மரிக்கார், கலாநிதி ஷுக்ரி முதலானோர் பற்றியும் முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக்குப் பங்களிப்பு செய்த சுவாமி விபுலானந்தர் பற்றியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழவிருக்கின்றன.

06

# கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் வழங்கல் நிறுத்தப்படமாட்டாது

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தடுப்பூசி வேலைத்திட்டத்தை நாட்டில் நிறுத்துவதற்கு அல்லது ஒத்திப் போடுவதற்கு எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ராசெனேகா தடுப்பூசி தொடர்ச்சியாக நாட்டு மக்களுக்கு வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் மாசி மாதம் 29ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 28

## குறள் தரும் சிந்தனை



அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்

ஒருவன் தவறான நெறியில் சென்று
தீயசெயல் செய்யாதிருப்பானானால் அவன்
கேடு இல்லாதவன் என்று அறியலாம்.

# சின்னஞ் சிறார்களை இம்சைப்படுத்தும் காட்டுமிராண்டித்தனம் ஒழியட்டும்!

இலங்கையில் சமீப வாரங்களாக இடம்பெற்றுள்ள துயரம் மிகுந்த ஓரிரு சம்பவங்கள் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்திருந்தன. வன்னி பிரதேசத்தின் கிளிநொச்சி பகுதியில் தாயார் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளை கிணற்றில் வீசி கொலை செய்து விட்டு, தனது உயிரையும் மாய்த்துக் கொள்வதற்காக கிணற்றில் குதித்திருந்தார். அச்சம்பவத்தில் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்தன. தாயார் கிணற்றில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டார்.

இப்பெண்ணின் கணவன் குடிபோதைக்கு அடிமையாகி, குடும்பப் பொறுப்பை முற்றாக மறந்த நிலையில் துன்பத்தைக் கொடுத்ததன் காரணமாகவே இந்த முடிவுக்கு வந்ததாக அப்பெண் கூறியிருந்தார். கணவனின் பொறுப்பற்ற தன்மையினாலும், அப்பெண்ணின் தவறான முடிவினாலும் மூன்று பிள்ளைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் கணவனும் மனைவியுமே தவிர அக்குழந்தைகள் அல்ல.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள சம்பவமொன்றில் தனது எட்டு மாத குழந்தையை அடித்து கொடுமைப்படுத்தியது தொடர்பாக தாயார் கைது செய்யப்பட்டுள்ளார். அக்குழந்தையை பாதுகாக்கும் நோக்கில், நீதிமன்றம் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அப்பெண்ணின் கணவன் வெளிநாட்டில் தொழில் புரிவதாகவும், குடும்பச் செலவுக்கான பணத்தை ஒழுங்காக அனுப்பாததன் காரணமாக ஆத்திரமடைந்தே அப்பெண் தனது குழந்தையை அடித்துத் துன்புறுத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எட்டு மாதக் குழந்தையை அடித்துத் துன்புறுத்திய காட்சியின் காணொளி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டிருந்ததாலேயே அப்பெண் கைது செய்யப்பட்டு, குழந்தையும் காப்பாற்றப்பட்டிருந்தது. தனது கஷ்டத்தை கணவனுக்கு தெரியப்படுத்தி, அவருக்கு பாடம் புகட்ட வேண்டுமென்ற நோக்கத்தினாலேயே இவ்வாறான காரியத்தில் தான் ஈடுபட்டதாகவும் அப்பெண் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மற்றொரு பரிதாப சம்பவம் கம்பஹா மாவட்டத்திலுள்ள மல்வானையில் சமீபத்தில் நடந்துள்ளது. தனது மகளுக்கு பேய் பீடித்திருப்பதாகக் கூறி, அப்பெண்ணைக் குணமாக்குமாறு மந்திரவாதி ஒருவரிடம் ஒப்படைத்துள்ளார் பெண் ஒருவர். அச்சிறுமிக்கு பேயோட்டுவதாகக் கூறி தாயாரும் மந்திரவாதியும் சிறுமியை பல மணி நேரம் பிரம்பால் அடித்துள்ளனர். இறுதியில் அச்சிறுமி பரிதாபமாக இறந்து போனாள்.

இம்மூன்று சம்பவங்களையும் எடுத்து நோக்குகின்ற போது, சிறு பராயத்தினரில் பலர் பாதுகாப்பற்றதும், பரிதாபமானதுமான சூழலில் வாழ்ந்து வருகின்றனரென்ற உண்மை எமக்குப் புலப்படுகின்றது. சிறுவர் பாதுகாப்புக்கான வலுவான சட்டங்கள் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள போதிலும், அச்சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளதென்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

பெரியோர்கள் தங்களது துன்பங்கள், விரக்திகளைத் தீர்த்துக் கொள்ளும் பரிகாரமாக தமது சின்னஞ்சிறார்களை சித்திரவதை செய்யத் தலைப்படுகின்ற மடைமையை இங்கே காண்கின்றோம். சிறுவர்களின் உரிமைகள் முற்றாக மீறப்படுவதையும், அவர்கள் ஆதரவற்ற நிலையில் துன்புறுத்தப்படுதையும் இங்கே காண முடிகின்றது.

இவ்வாறான பரிதாப நிலைமையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. சிறுவர் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்களை இயற்றிக் கொள்வதனால் மாத்திரம் பயன் கிடைத்து விடப் போவதில்லை. அச்சட்டத்தின் ஊடாக கிடைக்கின்ற தண்டனைகள் பற்றி சமூக மட்டத்தில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம்.

அதேசமயம், சிறார்களின் அடிப்படை உரிமைகள் எவையென்பது குறித்தும், அவர்களுக்கான பாதுகாப்பின் அவசியம் தொடர்பாகவும் கிராமம் தொடக்கம் நகரம் வரை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளை அவதானமாக கண்காணித்து வளர்க்கின்ற பொறுப்பு பெற்றோருக்கு உள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் கண்டிப்பு அல்லது தண்டனை என்பதன் பேரில் தங்களது பிள்ளைகளை துன்புறுத்துவதற்கு பெற்றோருக்கு உரிமை கிடையாது. சட்டமும் அதனை அனுமதிக்கப் போவதில்லை. ஐ.நா சமவாயத்தின்படி 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட அனைவருமே சிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறார்களுக்கு பாலியல் ரீதியில் இம்சை கொடுத்தல் மற்றும் துன்புறுத்தல் புரிவது என்பதெல்லாம் கொடிய குற்றங்கள் மாத்திரமன்றி அவையெல்லாம் நாகரிக சமுதாயம் ஏற்றுக் கொள்ளத்தக்கவையும் அல்ல. 18 வயதுக்கு உட்பட்டவர்களின் பிஞ்சு உள்ளத்தையும், அவர்களின் அப்பாவி சுபாவங்களையும் புரிந்து கொள்ளாத காட்டுமிராண்டித்தனத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

சிறு பிள்ளைகளுக்கு கொடூரமான தண்டனைகளை வழங்குவதனால் அப்பிள்ளைகள் மனம் திருந்தி வாழுமென நினைப்பது மடைமை. தண்டனைக்குப் பயந்து அப்பிள்ளை தவறு செய்யாமல் இருக்கக் கூடும். அல்லது பெற்றோருக்குத் தெரியாமல் தவறுகள் செய்யக் கூடும். ஆனால் தண்டனைகளால் அப்பிள்ளை மனம் திருந்தப் போவதில்லை. உள்ளத்தில் வன்மமே வளரும்.

அன்பினாலும் அரவணைப்பினாலும், மனம் திறந்து பேசி அறிவுரைகளை கனிவாக எடுத்துக் கூறுவதனாலுமே ஒரு பிள்ளையை நெறிப்படுத்த முடியுமென்பதே சிறுவர் உளவியல் நிபுணர்களின் கருத்தாக உள்ளது. கொடிய தண்டனைகளும், இம்சைகளும் பிஞ்சு உள்ளங்களில் வன்மத்தையே வளர்க்கும்.


சிறுவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் மாத்திரமன்றி சமூகநல நிறுவனங்களும் போதிய அக்கறையுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகின்றது. சிறார்களை துன்புறுத்துகின்ற எந்தவொரு சம்பவத்தையும் அனுமதிக்கலாகாது!

editor.tkn@lakehouse.lk

# யாழ் மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளில் 'கிராமத்துக்கு மைதானம்'

## ரூபா 22.5 மில்லியன் ஒதுக்கீடு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் கீழ் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 'செம்மையான முன்னேற்றமிக்க இளைஞர்களை உருவாக்குவோம்' என்ற செயற்றிட்டத்தின் அடிப்படையில் அண்மையில் தேசிய ரீதியில் நாடு பூராகவுமுள்ள 332 பிரதேச செயலகங்களில் கீழ் உள்ள கிராமங்களில் மைதானம் அமைக்கும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.



அவ்வகையில் யாழ் மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் உள்ள கிராமங்களில் ஒவ்வொரு மைதானம் அமைக்கும் செயல் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள 'விண்மீன் விளையாட்டுக்கழக மைதானம்' அமைக்கும் நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வு காலை 10.25 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாநகர முதல்வர், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர், யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் உட்பட அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலர் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள ஏனைய 14 பிரதேச செயலகப் பிரிவுகளின் 14 மைதானங்களுக்குமான அங்குரார்ப்பண நிகழ்வும் அன்றைய தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வட மாகாண இணைப்பாளர் குலேந்திரன் சிவராம், பிரதேச செயலாளர்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் உட்பட கிராம மக்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




இதன்படி நெடுந்தீவு பிரதேசத்தில் ஜே/01 கிராம சேவகர் பிரிவிலுள்ள ஐக்கிய தீபம் விளையாட்டுக் கழகத்திலும், வேலணை பிரதேசத்தில் ஜே/114 கிராம சேவகர் பிரிவிலுள்ள ஐயனார் விளையாட்டுக் கழகத்திலும், ஊர்காவற்றுறை பிரதேசத்தில் ஜே/154 கிராம சேவகர் பிரிவிலுள்ள இருதய ராஜா விளையாட்டுக் கழகத்திலும், காரைநகர் பிரதேசத்தில் ஜே/47 கிராம சேவகர் பிரிவிலுள்ள கலாநிதி விளையாட்டுக் கழகத்திலும், யாழ்ப்பாணம் பிரதேசத்தில் ஜே/61 கிராம சேவகர் பிரிவிலுள்ள விண்மீன் விளையாட்டுக் கழகத்திலும், நல்லூர் பிரதேசத்தில் ஜே/91 கிராம சேவகர் பிரிவிலுள்ள காந்தி சனசமூக நிலையம் மற்றும் அரியாலை விளையாட்டுக் கழகத்திலும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஜே/133 கிராம சேவகர் பிரிவிலுள்ள யூனியன் விளையாட்டுக் கழகத்திலும், சங்கானை பிரதேசத்தில் ஜே/165 கிராம சேவகர் பிரிவிலுள்ள சங்கானை வை.எம்.எச்.ஏ வட்டு விளையாட்டுக் கழகத்திலும், உடுவில் பிரதேசத்தில் ஜே/210 கிராம சேவகர் பிரிவிலுள்ள குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்திலும், தெல்லிப்பளை பிரதேசத்தில் ஜே/125 கிராம சேவகர் பிரிவிலுள்ள மாவை கலட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகத்திலும், கோப்பாய் பிரதேசத்தில் ஜே/273 கிராம சேவகர் பிரிவிலுள்ள வளர்மதி விளையாட்டுக் கழகத்திலும், சாவகச்சேரி பிரதேசத்தில் ஜே/341 கிராம சேவகர் பிரிவிலுள்ள நவா சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகத்திலும், கரவெட்டி பிரதேசத்தில் ஜே/356 கிராம சேவகர் பிரிவிலுள்ள வல்வெட்டி யுனிட்டி விளையாட்டுக் கழகத்திலும், பருத்தித்துறை பிரதேசத்தில் ஜே/412 கிராம சேவகர் பிரிவிலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக உள்ளக அரங்கிலும், மருதங்கேணி பிரதேசத்தில் ஜே/418 கிராம சேவகர் பிரிவிலுள்ள மணற்காடு சென். அந்தோனி விளையாட்டுக் கழகத்திலும் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நடைபெற்றன.



# உண்மைக்கு புறம்பான தகவல்களை பரப்புவதால் சமூகங்களிடையே இடைவெளியே உருவாகும்

## பாராளுமன்றத்தில் ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி

போலியான தகவல்களை வெளியிடுவது சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் பாரிய இடைவெளிகளையே ஏற்படுத்துமென பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் கடந்த 10 ஆம் திகதி உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த ஒரு வருட காலமாக முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட விடயத்தில் கவலை ஏற்பட்டது மாத்திரமன்றி, புரளிகளும் கிளப்பப்பட்டன. அந்தப் புரளிகளுக்கு கடந்த 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக அனுமதி வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்த விடயத்தில் உதவி புரிந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார உட்பட பலருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

கடந்த ஒக்டோபர் 22ஆம் திகதி நாங்கள் இந்த அரசுக்கு ஆதரவு அளித்ததன் காரணமாக எமது நற்பெயரை களங்கப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த சபையில் இருக்கின்றார்கள். எங்களை மிகவும் கேவலமாக சித்தரித்தார்கள். நாம் ஆதரவளித்ததனாலேயே ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதாகவும் பழி சுமத்தினார்கள். பல்வேறு பொய்யான பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டார்கள்.

கடந்த 05 நாட்களுக்கு முன்னர் கூட ஜனாஸா எரிப்பு விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் எரிக்கப்பட்ட ஜனாஸாக்கள் தொடர்பில் ஒரு பிழையான தகவலை கூறினார். இதுவரை கொரோனாவால் மரணமடைந்து எரிக்கப்பட்ட 497 பேரில் 334 பேரின் ஜனாஸாக்கள் முஸ்லிம்களுடையது என்றார். நிச்சயமாக அவ்வாறில்லை;

எரிக்கப்பட்ட உடல்களில் 181 ஜனாஸாக்களே முஸ்லிம்களுடையவை. இது ஒரு கவலையான விடயம். இவ்வாறு நடந்திருக்கக் கூடாது. இவ்வாறான விடயங்கள் இனிமேலும் நடக்கக் கூடாதென நாம் பிரார்த்திக்கின்றோம். அதேவேளை பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பும் போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் அதிகரிக்கும் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்நாட்டிலே இவ்வாறான முரண்பாடுகள் இனிமேலும் உருவாகக் கூடாது.



சிறிய சிறிய பிரச்சினைகளே பெரிய பிரச்சினைகளாகி இனங்கள், துருவயமயப்படுத்தப்பட்டு, கலவரங்கள் வெடிக்கின்றன. நாட்டிலே இனங்கள் தனித்தனியாக பிரிந்து சின்னாபின்னமாகும் நிலை உருவாகின்றது.

இந்த மாதம் 05 ஆம் திகதி ஒரு ஜனாஸாவை அதாவது அசனத்தும்மா என்பவரின் ஜனாஸாவை எடுத்துக் கொண்டு குருநாகல் சென்று அங்கு குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த எனது நண்பனான கலீலின் ஜனாசாவையும் எடுத்துக் கொண்டு ஓட்டமாவடிக்கு அடக்கம் செய்வதற்காகச் சென்றோம். ஜனாஸாவை கொண்டு செல்வதிலும் அதனைத் தொடர்ந்த பணிகளிலும் இராணுவத்தின் பங்களிப்பையும், அர்ப்பணிப்பையும் என்னால் இந்த இடத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது.

அந்த ஜனாஸாக்களை கண்ணியமாகவும், பக்குவமாகவும் கையாள்வதில் இராணுவம் நடந்து கொண்ட விதத்தை நான் நன்றியுடன் பார்க்கின்றேன். கொழும்பு ஐ.டீ.எச் வைத்திய சாலையிலிருந்து அதிகாலை 05.48 க்கு ஜனாஸாவை எடுத்துக் கொண்டு வெளியேறிய நாங்கள், குருநாகல் சென்று அங்கிருந்து 10.14 க்கு அடுத்த ஜனாஸாவையும் எடுத்துக் கொண்டு ஓட்டமாவடி சூடுபத்தினசேனைக்கு சென்றோம். அதுவரை எங்களுடன் பயணித்த கப்டன் செனிவிரத்ன ஒன்றுமே உண்ணாமல் இருந்ததை நான் கூறியாகவே வேண்டும்.

கொரோனாவில் மரணமடைந்தவர்களின் ஜனாஸாக்கள் ஒரு வருடத்திற்குப் பின்னர், முதன் முதலாக சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்படுகின்றன. கப்டன் செனிவிரத்ன, பிரிகேடியர் பிரதீப், மேஜர் ஜெனரல் கொஸ்வத்த போன்றவர்கள் இந்த ஜனாஸாக்களை அடக்குவதில் காட்டிய அக்கறையையும் அவர்களின் அர்ப்பணிப்பையும் நன்றியுணர்வுடன் மெச்சுகின்றேன்.

அது மாத்திரமன்றி ஓட்டமாவடி பிரதேச சபையினர், சுகாதார அதிகாரிகள், ஓட்டமாவடி உலமா சபை மற்றும் வாழைச்சேனை, ஓட்டமாவடி பொதுமக்கள் ஆகியோரும் ஜனாஸா அடக்கும் விடயத்தில் தமது பங்களிப்பை நல்கினார்கள்.

இந்த சபையிலே நான் இன்னும் ஒன்றைக் கூறியாக வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இன்று வரை 39 ஜனாஸாக்கள் அடக்கப்பட்டுள்ளன. இன்னும் அநுராதபுரத்தில் மாத்திரம் ஒரு ஜனாஸா இருக்கின்றது. அவை தவிர சிலர் முகநூலில் கூறுவது போன்று 11 ஜனாஸாக்கள் இன்னும் வருகின்றன எனக் கூறுவது பிழையானது".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(பாராளுமன்ற உறுப்பினரின் ஊடகப்பிரிவு)

# கல்வியின் ஊடாக இராணுவ, சிவில் உறவுகளை ஊக்குவித்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்

## பாதுகாப்புச் செயலாளர்

**கல்வியின் ஊடாக இராணுவ, சிவில் உறவுகளை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு நாடு பின்னடைவதைத் தவிர்க்க முடியும் என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.**

மனித கௌரவம், ஒருமைப்பாடு, ஜனநாயக பிரசன்னம், நிலையான வளர்ச்சி, பொருளாதார சமத்துவம், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் சமத்துவ வாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியின் முக்கிய பெறுமதிகளை பல்கலைக்கழக கல்வியினூடாக வளர்க்க முடியும் என்பதை நாம் எப்போதும் நமது மனதில் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிவில் இராணுவ உறவுகளின் வெளிப்பாடு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய பெறுமானங்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வகிபாகம் தொடர்பாக சுட்டிகாட்டிய அவர், கல்வியின் மூலம் சிவில் இராணுவ உறவுகளை ஊக்குவிப்பதனூடாக ஒரு நாடு தனது நிலைகளை உயர்த்தி, தேசிய வளர்ச்சியின் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.


இரத்மலானையில் உள்ள கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்பு செயலாளர், அங்கு விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இந்தக் கருத்துகளை தெரிவித்தார்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ஒரு நிறுவனமாகும். கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக வளாகத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்பு செயலாளருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் பாதுகாப்பு செயலாளரை வரவேற்றார்.

மேலும், கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 40வது ஆண்டு நிறைவு தின உத்தியோக பூர்வ இலச்சினை வைபவ ரீதியாக பாதுகாப்புச் செயலாளரினால் வெளியிட்டு வைக்கப்பட்டது

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் குறுகிய காலத்திற்குள் அதன் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளை மேற்படி பல்கலைக்கழக முகாமைத்துவ சபையின் தலைவர் என்ற வகையில பாதுகாப்புச் செயலாளர் பாராட்டியதுடன், நாட்டிலும் பிராந்தியத்திலும் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பதன் முக்கியத்துவத்தை மேலும் விளக்கினார்.

மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் எதிர்காலத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பில் பாதுகாப்பு செயலாளருக்கு விளக்கமளித்தனர்.



அணிவகுப்பு சதுக்க பார்வையாளர் பகுதி (பெவிலியன்), அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுகூட கட்டடம், புதிய மரைன் என்ஜின் சிமுலேட்டர் மற்றும் புத்தாக்க ஆய்வுகூடம், விளையாட்டு பார்வையாளர் கட்டடத் தொகுதி, படைவீரர்களுக்கான ஓய்வுநேர தங்குமிட வசதிகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கிளப் ஹவுஸ் ஆகியவை பாதுகாப்புச் செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டன.

இந்த விஜயத்தின் போது புதிதாக திறந்து வைக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் தொடர்பாக பாதுகாப்பு செயலாளருக்கு அந்தந்த கல்விபீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களினால் விரிவாக விளக்கமளிக்கப் பட்டது.











கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தனித்துவமான அடையாளமாக கருதப்படும் அதன் பிரதான கேட்போர் கூட தொகுதியின் நிர்மாணப் பணிகளை ஆய்வு செய்த பாதுகாப்பு செயலாளர், நிர்மாணப் பணிகளை குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

“நாட்டின் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துவதில் மகத்தான பங்களிப்பைச் செய்த சிறந்த ஆளுமைமிக்க அதிகாரிகளை உருவாக்கிய கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பெருமை, முப்படை சேவைகளுக்கு முன்மாதிரியான அதிகாரிகளை உருவாக்கியமை அதன் கற்பித்தல் தரத்திற்கு சான்றாக அமைவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய முப்படையினருக்கு ஜெனரல் குணரத்ன தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மேலும் இந்த விஜயத்தினை நினைவு கூரும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) பி. பி. எஸ். சி. நோனிஸ், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக தெற்கு வளாகத்தின் அதிகாரி பிரிகேடியர் பிரசாத் எதிரிசிங்க, பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பல்கலைக்கழக பதிவாளர், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள், மற்றும் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஸாதிக் ஷிஹான்...**

# ஈஸ்டர் தாக்குதலுக்காக இஸ்லாத்தின் மீது பழி சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது!

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அதன் அறிக்கையில் பரிந்துரைத்துள்ள பல விடயங்கள் பல்லின சமூகங்கள் வாழும் மக்கள் மத்தியில் அமைதியான சகவாழ்வை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, மோசமான ஒரு சூழ்நிலையையே உருவாக்கும். அத்தகைய ஒரு நிலைமை தோன்றுவதை யாருமே அனுமதிக்க மாட்டார்கள்.**

இங்கு பிரச்சினைக்கு மூலவேராக இருப்பது, 1992 ஆண்டு முதல் மேற்கத்தேய உலகில் காணப்படும் வலதுசாரி தீவிரவாதிகளால் பரப்புரை செய்யப்படும் போலியான, ஆதாரங்களற்ற, ஊகங்கள் நிறைந்த மற்றும் புனைந்துரைக்கப்பட்ட கதைகளை மையமாகக் கொண்ட இஸ்லாம் விரோத பிரசாரங்களாகும்.

தேசிய தௌஹீத் அமைப்பின் வழிபிறழ்ந்த பயங்கரவாதக் கும்பல்கள் செய்த குற்றங்களுக்காக இஸ்லாத்தையோ அல்லது முஸ்லிம்களையோ அல்லது காலம் சான்றுபகரும் அதன் சீர்திருத்த நிறுவனங்களையோ தண்டிப்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

மத தீவிரவாதிகள் என அடையாளப்படுத்தப்படுபவர்களை தடுப்புக் காவலில் வைக்க வேண்டும் என (பக்கம் 454) ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைக்கிறது.

நாட்டின் குற்றவியல் சட்ட விதிகளின்படி ஐ.ஆர்.சி என்று அழைக்கப்படும் மோசமான இலங்கை குற்றவாளிகளை வெளிநாட்டு பிரமுகர்களின் வருகை மற்றும் தீவிர அவசரகால நிலைகளின் போது தடுப்புக்காவலில் வைப்பதற்கு அனுமதிக்கிறது. மதத் தலைவர்களை அல்லது தீவிர மத ஈடுபாடு கொண்டவர்களை ஐ.ஆர்.சி குற்றவாளிகளுக்கு இணையாக நடத்த முடியுமா? வன்செயல்களோடு தொடர்பான தீவிரவாதங்களை தவிர்த்து, தீவிரமான கருத்துக்களை கொண்டிருப்பது கருத்துச் சுதந்திரத்தின் ஒரு அங்கமாகவே நோக்க வேண்டும். காரணம் இத்தகைய கருத்துச் சுதந்திரங்களை உலகமே அங்கீகரிக்கின்றது.

இத்தகைய பரிந்துரைகளை வாசிக்கும் போது காயப்படாத உள்ளங்கள் இருக்கவே முடியாது. மனம் வேதனைப்படுகிறது. எனவே இதனை கண்டிப்பாக தடுத்து நிறுத்த வேண்டும். இந்த ஆணைக்குழு அறிக்கை ஏப்ரல் 21இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு மீதான தாக்குதல்களுக்கு இஸ்லாத்தை குற்றம் சுமத்த முனைவது முற்றிலும் தவறாகும். இது ஒரு அதிர்ச்சியூட்டும் உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டாகும். இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்.

இத்தகைய பரிந்துரைகள் நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் மோதல்களையே உருவாக்கும். இது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல நிச்சயமாக சர்வதேச தளங்களில் பிரச்சினையை ஊதிப்பெருப்பிக்கவே உதவும். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் ஒரு சர்வதேச சதியே அன்றி அது வெறுமனே இஸ்லாமிய தீவிரவாதிகளின் வேலை அல்ல என்று கொழும்பு பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித் ஆண்டகை கட்டுவாபிட்டியவில் உலகளவில் மேற்கோள் காட்டப்பட்ட அவரது உரையில் கூறியிருந்தார். மேலும் சர்வதேச அரங்கில் குழப்பங்களை தோற்றுவிப்பதற்காக இஸ்லாமிய கோட்பாடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற உண்மையையும் அவர் தனது உரையின் போது குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாத்தை அநியாயமாக சாடுவதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆணைக்குழு 'பிரத்தியேகவாதம்' பயங்கரவாதத்தின் முதல் படியாகும் என குறிப்பிட்டுள்ளது (பக்கம் 11). குறிப்பிட்ட ஒரு விடயத்தில் ஒரு சிலரை அல்லது சில தரப்பினரை ஒதுக்கி தம்முடன் மாத்திரம் வைத்துக் கொள்வதே இங்கு பிரத்தியேகவாதம் என அழைக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களை மேற்கோள்காட்டிகாத்தான்குடியில்உள்ள சூபிஸமும் அதன் தியானத்திற்கான மத்திய நிலையமும் தாக்கப்பட்டதாக ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது (13). சூபித்துவம் என்பது இஸ்லாம் அங்கீகரிக்கும் ஒரு அங்கம்.

முஸ்லிம்களை சூபிகள் என்றும் தௌஹீத்வாதிகள் என்றும் தப்லீக் என்றும் அல்லது வேறு ஜமாஅத்கள் என்றும் இலங்கையில் உள்ள முஸ்லிம்களை பிரித்து ஏனைய பயங்கரவாத அமைப்புக்களுடன் முடிச்சுப் போடுவது இஸ்லாம் விரோத மேற்கு நாடுகளின் செயலாகும்.

இனமத மோதல்களை உருவாக்கி இந்த மண்ணின் வளங்களை சுரண்டுவதற்காகவே மேற்குலகம் கனவு காண்கிறது. இலங்கை வாழ் மக்கள் யாவரும் புகழ் பூத்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியுமான கலாநிதி சீ.ஜீ. வீரமந்திரி அவர்களுடைய பல்வேறு உரைகளையும் அவருடைய விலைமதிப்பற்ற படைப்புகளையும் கட்டாயம் வாசிக்க வேண்டும். அல்லது அமெரிக்க எழுத்தாளரான ஜோன் பெர்க்கின்ஸ் அவர்களுடைய 'ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்' என்ற நூலை கண்டிப்பாக படிக்க வேண்டும்.

ஜனாதிபதி சட்டத்தரணி **எம்.எம். ஸுஹைர்**
*(முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)*
**லதீப் பாறூக்**
*(மூத்த ஊடகவியலாளர் மற்றும் எழுத்தாளர்)*
**மாஸ் எல். யூஸுப்**
*(சட்டத்தரணி, பத்தி எழுத்தாளர்)*
**மன்ஸுர் தஹ்லான்**
*(சமய அறிஞர்)*

# பாரம்பரிய மருத்துவத்துக்கான ஆயுஷ் கவுன்சில் அங்குரார்ப்பணம்

## ஏப்ரல் 16 இல் சென்னையில் இந்திய பாரம்பரிய மருத்துவ ஏற்றுமதி கருத்தரங்கம், ஆயுஷ் மாநாடு நடைபெற உள்ளதாக உலகத் தமிழ் வர்த்தக சங்க தலைவரும், ஆயுஷ் கவுன்சில் அமைப்பாளருமான செல்வகுமார் தகவல்

**உலகத் தமிழ் வர்த்தக சங்கம் தென்னிந்தியாவில் பாரம்பரிய மருத்துவங்களை பிரபலப்படுத்தவும், இயற்கை மருத்துவ முறைகள் மற்றும் மருந்து வகைகளை காட்சிப்படுத்தவும், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்-கழகத்தின் கீழ் செயல்படும் ஆயுர்வேத, சித்த, யுனானி, ஹோமியோபதி, யோகா, நேச்சுரோபதி மருத்துவர்களின் வேலைவாய்ப்பு போன்றவற்றை அடுத்தகட்ட நகர்விற்கு எடுத்துச் செல்லும் விதமாக 'ஆயுஷ் கவுன்சில்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது.**

இவ்வமைப்பு இந்திய மருத்துவ ஹோமியோபதி இயக்குனரகம், மத்திய சித்த ஆராய்ச்சி நிலையம், மத்திய சித்த ஆராய்ச்சி கவுன்சில், தேசிய சித்த மருத்துவம், மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவர்கள் மருத்துவ கல்வி நிறுவனங்கள், மருத்துவ சங்கங்கள், மருந்து உற்பத்தியாளர்கள் போன்றவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட உள்ளது.

கவுன்ஸில் அயல்நாடுகளில் ஸ்மார்ட் கிளினிக், வெல்லனஸ் சென்டர், டெலி மெடிசன் உருவாக்கவும், நம் மருத்துவர்களை, மருந்து வகைகளை தொலைக்காட்சி இணையதள செயலி மூலம் பிரபலப்படுத்தவும், நம் மருந்துகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தனியார் முதலீட்டாளர்கள் உதவியுடன் வேலைவாய்ப்பு மற்றும் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கவுள்ளது.



மலேசியா, இலங்கை, கொரியா மற்றும் வளைகுடா நாடுகளில் உடனடியாக கிளை ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில் முதல் கட்டமாக ஏப்ரல் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை, சென்னை லீலா பேலஸ் நட்சத்திர விடுதியில் இந்திய பாரம்பரிய மருத்துவ ஏற்றுமதி கருத்தரங்கம் ஆயுஷ் கொன்பரன்ஸ் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் பல்வேறு நாட்டு தூதர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் தென்னிந்தியாவில் முன்னணி மருந்து நிறுவனங்களும், இயற்கை மருத்துவ நிறுவனங்கள், இயற்கை மருந்து வகைகள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இதில் மருத்துவ மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு, ஸ்மார்ட் கிளினிக், டெலி மெடிசன், வெல்லனஸ் சென்டர் போன்றவைகளை கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு உலகத் தமிழ் வர்த்தக சங்கம், தலைவர் மற்றும் ஆயுஷ் கவுன்செல் அமைப்பாளர் செல்வகுமார் தெரிவித்தார்.

## ஜெனீவாவில் தீர்வு காண்பதற்காக...

குற்றங்களும் நடைபெறவில்லை.

30 வருட யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளுக்கு அரசாங்கம் புனர்வாழ்வளித்தது. இது உலகிற்கே சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக கருதப்பட்டது.

குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மனித உரிமை பேரவையின் சுயாதீனத் தன்மை கூட விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை பேரவையை கடுமையாக விமர்சித்து 2018ஆம் ஆண்டு அமெரிக்கா பேரவையிலிருந்து வெளியேறியது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை கொண்டு வருவது நகைப்புக்குரியது. ஜெனீவா விவகாரத்தில் தீர்வு காண அரசாங்கம் இராணுவத்தினரை ஒருபோதும் காட்டிக் கொடுக்காது.

இராணுவத்தினரை பாதுகாக்க விசேட பொறிமுறை வகுக்கப்படும். சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என்பது அவசியம். அதற்காக நாட்டின் இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என்றார்.

## பிம்ஸ்டெக் மாநாடு குறித்து...

எவரதும் இணக்கம் இல்லாவிட்டால் மாநாட்டை நடத்த முடியாது. சார்க் அமைப்புக்கும் இதுதான் நடந்துள்ளது. அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்காமையால் பல ஆண்டுகளாக சார்க் மாநாட்டை நடத்த முடியாது போயுள்ளது.

தவறான கருத்துகளை பிரசாரம் செய்யும் சில தரப்பினர் உள்ளனர். அவர்கள் எப்போதும் எமது தாய் நாட்டுக்கு எதிரானவர்களாவர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துடன், பிம்ஸ்டெக் தலைமைத்துவத்தை தாய்லாந்துக்கு நாம் கொடுக்க வேண்டும். மாநாட்டை நடாத்திதான் அதனை கையளிக்க வேண்டும். மாநாட்டை நடத்த முடியாது போனால் தலைமைத்துவத்தில் இன்னும் சில மாதங்கள் இருப்பது குறித்து இலங்கை தீர்மானிக்க வேண்டும். அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறுவது இணைய வழியான மாநாடாகும். எவரும் இலங்கைக்கு வரப் போவதில்லை. எவரையும் நாம் அழைக்கவில்லை. மாநாட்டை பூட்டானிலுள்ள செயலாளர்தான் வழிநடத்துகிறார். பிம்ஸ்டெக்கின் தலைமையகம் பங்களாதேஷில் உள்ளது. ஆகவே, அதற்கு அப்பால் ஒன்றும் நடைபெறவில்லை. மியன்மாரில் உள்ள இலங்கைத் தூதுவர் தினமும் தமது செயற்பாடுகள் கொண்டு செல்கிறார். தலைமைத்துவத்தை தாய்லாந்துக்கு கொடுக்க வேண்டிய காலத்திலேயே நாம் உள்ளோம்.

மியன்மார் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது எதிர்கால பிரச்சினையாகும் என்றார்.

## இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்...

சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் நல்லை ஆதீனத்திற்குச் சென்று ஆதீன குருமுதல்வரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்பின்னர், இந்திய உதவியில் அமைக்கப்படும் யாழ். கலாசார மத்திய நிலையத்திற்குச் சென்று நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்குச் சென்று நூலகத்தைப் பார்வையிட்டதுடன் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதர் பாலச்சந்திரன், மாநகரசபை உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கையில்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 397 கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் நேற்று பூரணமாக குணமடைந்துள்ள நிலையில், குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 958 ஆக அதிகரித்துள்ளதாகவும் மேலும் 2,908 வைரஸ் தொற்று நோயாளிகள் பல்வேறு மருத்துவமனைகளிலும் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது (ஸ)

## தத்தெடுக்க நூற்றுக்கும் மேற்பட்டோர்...

தொலைபேசி அழைப்புக்கள் பொலிஸாருக்கு கிடைத்திருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டிலும் அதேபோல வெளிநாடுகளிலுமிருந்தும் இவ்வாறு தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்ததாக யாழ்.பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

குழந்தைகள் இல்லாத பெற்றோரே இவ்வாறு அந்தக் குழந்தையை பொலிஸாரிடம் கேட்டுள்ளனர்.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தவர்களும் இவ்வாறு குழந்தையை தத்தெடுப்பதற்குக் கோரியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

## ச.தொ.ச.வில் அத்தியாவசிய...

உருளைக்கிழங்கை 150 ரூபாவுக்கும், 93 ரூபாவுக்கு விற்கப்படும் ஒரு கிலோ சிவப்பரிசியை 89 ரூபாவுக்கும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விலைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். கடந்த பெப்ரவரி முதல் 27 அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## சீனிக்கான வரி குறைப்பு மூலம்...

செய்துள்ளார். சீனி இறக்குமதி மீதான வரியை 25 சதங்கள் வரையில் குறைத்ததன் ஊடாக இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிட்டுள்ள அவர், அரசாங்கத்திற்கு நெருக்கமான வர்த்தகர்களுக்கு சலுகை வழங்கும் விதமாக இவ்வாறு வரி குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு...

ரோஹணதீர மேற்படி அறிக்கையின் பிரதிகளை சட்ட மாஅதிபருக்கு கையளித்திருந்தார்.

அதற்கிணங்க மேற்படி அறிக்கையின் அனைத்து பிரதிகளும் சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்டுவிட்டதாக அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் அதில் 22 அத்தியாயங்கள் உள்ளடக்கப்படவில்லையென சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் நிஷாரா ஜயவர்தன தெரிவித்திருந்தார். அதற்கிணங்க அந்த 22 கோவைகளும் நேற்றைய தினம் சட்ட மாஅதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான சாட்சிகளின் முக்கிய தன்மையை கருத்திற்கொண்டு இதற்கு முன்னர் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்ட மேற்படி அறிக்கையின் பிரதிகளில் இந்த 22 அத்தியாயங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை அதனையடுத்து சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் மேற்படி 22 அத்தியாயங்களும் கோரப்பட்டிருந்தன.அதனை சட்ட மாஅதிபருக்கு கையளிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.அதற்கமையவே நேற்றைய தினம் அவை சட்ட மாஅதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்ட விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## நாட்டின் தேசியக் கொடியை அவமதிக்கும்...

இலங்கையின் தேசியக் கொடி பொறிக்கப்பட்ட கம்பளங்கள், பாதணிகள், முகக்கவசங்கள் உள்ளிட்ட பொருட்களும் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், இவ் விடயம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் படங்கள் வைரலாகிய நிலையில் பலரும் தமது விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இலங்கையின் கௌவரத்துக்குரிய தேசியக் கொடிக்கு இவ்வாறான அவமதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போது, இது தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், இது தொடர்பாக உச்சளவில் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக இவ்வாறான உற்பத்திகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டால் அது தொடர்பாக நாம் நேரடியாக தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுப்போம்.ஆனால், தற்போது இவை சர்வதேச வர்த்தக சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் இதற்கு எதிராக சர்வதேச வர்த்தக சபை மற்றும், அந்தந்த நாட்டு தூதுவர்களூடாக தொடர்பு கொண்டு இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## எதிர்வரும் வாரங்களில்... (03ஆம் பக்கத் தொடர்)

சதொசவில் ஊழல் மோசடி இடம்பெறுவது வழக்கமான தொன்றாக மாறியிருப்பதாகவும், அனைத்து விற்பனை நிலையங்களையும் கணினி வலையமைப்பின் கீழ் கொண்டுவருவதன் ஊடாக இந்த நிலைமையை மாற்ற முடியும் என்றும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் சுட்டிக் காட்டப்பட்டது. இடம்பெற்ற மோசடிகள் குறித்து அமைச்சு மட்டத்தில் விசாரணை நடத்துமாறும் இங்கு தெரிவிக்கப்பட்டது. உற்பத்தியாளர்கள் மற்றும் நேரடி இறக்குமதியாளர்களிடமிருந்தே சதொசவுக்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இந்த நடைமுறை தற்பொழுது வெற்றியளித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். 57 புதிய சதொச விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், இதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. புதிய சதொச விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்போது அவை ஒரே பொருளாதார சூழ்நிலையைக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் ஆரம்பிக்க முன்னர் பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி ஜயதிலக, அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பங்கு குறித்து சிறியதொரு விளக்கவுரையொன்றை வழங்கியிருந்தார். இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, ரோஹன திஸாநாயக்க மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## சிறைச்சாலை சுற்றிவளைப்பில்... (03ஆம் பக்கத் தொடர்)

இதன்போது 28 போதைப்பொருள் பக்கட்டுக்கள், 5 கையடக்கத்தொலைபேசிகள், பத்து சிம் கார்டுகள், 10 கையடக்கத்தொலைபேசிக்கான பற்றறிகள் மற்றும் கையடக்கத்தொலைபேசி சார்ஜர்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்த அவர், மேலும் கத்தரிக்கோல்கள், புகையிலை மற்றும் சந்தேகத்திற்குரிய சில பொருட்களையும் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.(ஸ)

## கொரோனா வைரஸ்... (03ஆம் பக்கத் தொடர்)

தடுப்பூசிகள் வழங்குவது தொடர்பில் முன்வைக்கப்பட்டு வரும் பல்வேறு கருத்துக்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் சார்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதேவேளை, நாட்டில் நேற்றுவரை 07 இலட்சத்து 60,000 பேருக்கு ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சுமார் 7,500 பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டதாகவும் தொடர்ச்சியாக தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்தது. மேற்படி தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் 30 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திடீரென தீப் பற்றி... (03ஆம் பக்கத் தொடர்)

தபாலகத்திற்கு சென்றவரின் முச்சக்கரவண்டியே இயந்திர கோளாரினால் இவ்வாறு தீ பற்றியுள்ளது.

## வரித் திருத்தங்களுடன் கூடிய புதிய... (03ஆம் பக்கத் தொடர்)

தகவல் தொடர்பாடல் துறையினர், விளம்பர வர்த்தகத்துறையினர் உட்பட பல்வேறு துறைசார்ந்தவர்களும் பிரதமரை சந்தித்து தாம் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் தெரிவித்துள்ளனர். 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் சினிமா துறையினருக்கு படத் தயாரிப்புக்கு வரிச் சலுகை இருந்தது. ஆகவே, பல்வேறு தரப்பினரும் முன்வைத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் நாட்டின் புதிய சூழலுக்கு ஏற்பவும் வரித் திருத்தங்களுடன் கூடிய புதிய வர்த்தமானி அறிவித்தலொன்று அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது.

அதேபோன்று உளுந்து, மஞ்சள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டமையால் உள்நாட்டில் இவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது. குறிப்பாக உளுந்து உற்பத்தி 10 மொற்றிக்தொன்னாக உள்ளது. தேசியப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமையளிக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய இந்த விடயத்தில் நாம் வெற்றிகண்டுள்ளோம்.

அத்துடன், வாகன இறக்குமதிக்கான தடையை நீக்குவது தொடர்பில் இன்னமும் அரசாங்கம் கொள்கை ரீதியான எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. வாகன இறக்குமதி தொடர்பில் உரிய தரப்பினரிடம் வேலைத்திட்டமொன்றை முன்வைக்குமாறு கோரியுள்ளோம். அவர்கள் இன்னமும் எவ்வித வேலைத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என்றார்.

## ‘மூதறிஞர் சித்திலெவ்வை... (03ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நிகழவிருக்கும் இத்தொடர் சொற்பொழிவுகளின் முதலாவது சொற்பொழிவு எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

மூதறிஞர் எம்.ஸி சித்திலெவ்வையின் சமூகப் பின்புலம், கல்விப் பணியில் அவரை ஊக்கிய காரணிகள், ஒறுாபி பாஷாவுடனான அவரின் தோழமை, கல்விக்கருத்தும் சிந்தனையும், பெண் கல்விப் பங்களிப்பு, கற்றல் கற்பித்தல் கொள்கை, பாலருக்கென அவர் எழுதிய பாடநூல்கள், அவர் நாடெங்கும் ஆரம்பித்த பெண் பாடசாலைகள், கொழும்பில் அவர் தாபித்த புதிய சோனகர்தெருப் பாடசாலை, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, அவரின் மொழிக் கொள்கை, நாவல் இலக்கியத்துக்கு அவரின் பங்களிப்பு, பத்திராதிபதிராக அவரின் பணி, மெய்ஞ்ஞானப் பங்களிப்பு, அரபுமொழி மேம்பாட்டுபணி, வரலாற்றுப்பார்வை என்பன பற்றியெல்லாம் இவ்வுரையில் கருத்துக்கள் முன்வைக்கப்படவிருக்கின்றன.

இச்சொற்பொழிவை நிகழ்த்தவிருப்பவர் ஏ.எம் நஹியா. அவர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் உதவி அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியை 16ஆம் திகதி காலை 10.00 மணி முதல் YouTube மற்றும் Facebook இணைப்பினூடாக பார்வையிடலாம்.

## யாழ். சென்னை நேரடி... (03ஆம் பக்கத் தொடர்)

இது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்பை மேலும் வலுப்படுத்துகிறது.

இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். தற்போது, கொவிட் தொற்றுநோய் காரணமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதை நிறுத்திவிட்டனர். இந்திய உயர்ஸ்தானிகராலயம் மாற்றுத் திட்டமொன்றை இதற்காக பரிந்துரைத்துள்ளது. அதற்கு நாமும் அனுமதியை வழங்கியுள்ளோம்.

இதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் சுற்றுலாவை விரைவில் தொடங்க எதிர்பார்க்கிறோம்.

இரத்மலான, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்புக்கு உள்நாட்டு விமான சேவைகளைத் தொடங்குவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளோம். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களை சர்வதேச விமான நிலையங்களாக உருவாக்குவதே எங்கள் குறிக்கோள்.

யாழ் விமான நிலையத்தின் வளர்ச்சிக்கான இந்தியாவின் பங்களிப்பை நாங்கள் பாராட்டுகிறோம்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மற்றும் சென்னை இடையேயான நேரடி விமான சேவையை விரைவில் தொடங்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

## சீனி வரி குறைப்பினால் அரசுக்கு...

25 சதவீமாக குறைக்கப்பட்டிருந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் உருளைக் கிழங்குக்கான வரி குறைக்கப்பட்டது.

இந்தத் தரவுகள் அடங்கிய அறிக்கையொன்றை பொது நிதிக்குழுக்கு நாம் அனுப்பியுள்ளோம். அதில் கூறப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாக கொண்டு சீனி இறக்குமதியில் அரசாங்கத்துக்கு 1.59 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறான எவ்வித இழப்பும் அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை.

கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதிமுதல் பெப்ரவரி 10ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 65,000 மெட்றிக்தொன் சீனியே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் தினமும் 55 மெட்றிக் தொன் சீனி நுகரப்படுகிறது. ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி சீனி ஒரு கிலோவின் விலை 135 ரூபாவாகவிருந்தது. ஆனால், இன்று 114 ரூபாவாகவுள்ளது. வரி குறைப்பின் பயன் மக்களுக்கே சென்றடைந்துள்ளது. அதேபோன்று ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி சீனி ஒரு கிலோவின் சீ.ஐ.எப் விலை 72 ரூபாவாகவிருந்தது. ஆனால், தற்போது 90 ரூபாவாக உள்ளது. அவ்வாறெனின் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். என்றாலும் நாம் வழங்கியுள்ள வரி சலுகையால்தான் சீனியின் விலை குறைவாக உள்ளது.

06 பிரதான இறக்குமதியாளர்கள்தான் சீனியை இலங்கைக்கு இறக்குமதி செய்கின்றனர். அவர்கள்தான் சீனியின் விலையையும் நிர்ணயம் செய்கின்றனர். அதில் மாற்றுக்கருத்தில்லை. இவர்கள்தான் 2015ஆம் ஆண்டிலும் இருந்தனர்.

வரி குறைப்பு இடம்பெறுவது இது முதல் தடவையல்ல . பல சந்தர்ப்பங்களில் வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு ஜுலை 19ஆம் திகதி 30 ரூபாவாகவிருந்த சீனியின் வரியை 25 சதமாக குறைத்திருந்தனர். மீண்டும் இரண்டு மாதங்களில் சீனியின் வரியை 15 ரூபாவாக உயர்த்தியுள்ளனர். அத்தருணத்திலும் இந்த இறக்குமதியாளர்களே இருந்தனர். ஆகவே, சில சந்தர்ப்பங்களில் இறக்குமதியாளர்கள் பயனடையக்கூடும். அல்லது வரி குறைப்பு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அதிகமாக சீனியை இறக்குமதி செய்யக்கூடும். என்றாலும் அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பு மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக்கொடுப்பதும் வாழ்க்கைச் செலவை குறைப்பதுமாகும்.

ஆகவே, சீனி இறக்குமதியில் அரசாங்கத்துக்கு எவ்வித இழப்பு ஏற்படவில்லை. வரி குறைப்பால் அரசாங்கத்துக்கு இழப்பு என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. பொதுமக்களுக்குஅது எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்ற அடிப்படையிலேயே அரச வரிக் கொள்கை அமையும் என்றார்.

## மியன்மார் அமைச்சருக்கான...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மியான்மாரின் தற்போதைய இராணுவ அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவே இதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகிறதெனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

மியன்மாரியல் ஜனநாயகத்தின் மூலம் உருவான ஆங் சாங் சூச்சி தலைமையிலான அரசாங்கம் ஒழிக்கப்பட்டு இராணுவத்தின் சர்வாதிகார ஆட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் நடந்த இராணுவமயமாக்கல் மற்றும் சர்வாதிகார வெறிக்கு மத்தியில், பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டின் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய வெளிவிவகார அமைச்சரால் மியன்மார் வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்புவிடுத்து கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இது சர்வதேச உறவுகளில் அடிப்படையில் நடைபெறும் மாநாடாகும். சர்வதேச உறவுகளைப் பற்றி போதிய அறிவு இல்லாமையின் காரணமாகவே அரசாங்கம் இந்த பாரதூரமான தவறைச் செய்துள்ளது. சர்வதேச அங்கீகாரம் தொடர்பில் எமது நாட்டு அரசாங்கத்துக்கு போதிய அறிவு அவசியமாகும். இராஜதந்திர உறவுகளில் சர்வதேச அங்கீகாரம் என்றதொரு பிரிவு உள்ளதென்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மியன்மார் வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் இராணுவ ஆட்சிக்கு ஒருவகையில் இலங்கை அங்கீகாரம் வழங்கியதாகவே கருதப்படும். மியன்மாரில் நடைபெற்றுள்ள இராணுவ ஆட்சிக்கு எதிராகவே உண்மையாக அரசாங்கம் செயற்பட்டிக்க வேண்டுமென்பதுடன், மீண்டும் ஜனநாயக வழியில் ஆங் சாங் சூச்சி தலைமையில் அரசொன்றை அமைய வலியுறுத்தி அறிக்கையை வெளியிட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது வெளிவிவகார அமைச்சர் இராணுவ ஆட்சியின் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சமகால அரசாங்கம் மியன்மாரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இராணுவ ஆட்சியை அங்கீகரிக்கிறதா என தெரியவில்லை. உடனடியாக விடுத்திருக்கும் அழைப்பை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சரவை கோருகிறோம் என்றார்.

## இரு தடுப்பூசிகளையும் பெற்று...

அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தன்னிடம் தெரிவித்தார் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது,

தொழில் காரணமாகவோ அல்லது விடுமுறை நோக்கிலோ வெளிநாடு சென்றுள்ள இலங்கையர், தாம் வாழும் நாட்டில் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்று இருப்பார்கள் எனில், அவர்கள் இன்று தாய் நாடு திரும்பும் போது, அவர்களை தமது சொந்த வீடுகளிலேயே சுய தனிமைக்கு உள்ளாக்க வேண்டும்.

ஐந்து மற்றும் மூன்று நட்சத்திர விடுதிகளில் தங்க வைப்பது, அதற்கான கட்டண நிர்ணயம், வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பும் விமான பயணசீட்டு கட்டணம் ஆகியவவை தொடர்பில் பெரும் திட்டமிட்ட முறைகேடுகள் நடைபெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அதுபோல், அரசு நடத்தும் நிலையங்களில் 14 நாட்கள் தங்க வைக்கப்படும் நாடு திரும்பும் இலங்கையர்களும், அங்கே முறையாக கவனிக்கப்படுவதில்லை.

எல்லா இடங்களிலும் முறைகேடுகள் இடம் பெறுகின்றன.

இவற்றால், வெளிநாடுகள் சென்று உழைத்து அதன்மூலம் இந்நாட்டுக்கு அந்நிய செலவாணியை பெற்று தந்து, இன்று தொழில் இழந்து, பெரும் பொருளாதார சிக்கல்களில் மாட்டி இருக்கும் நம் நாட்டு மக்கள் பெரும் அவதியில் தள்ளப்பட்டுள்ளனர்.

நோயுற்றவர்கள் உடனடியாக வைத்திய நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். ஏனையோர் சொந்த வீடுகளில், கண்காணிப்பின் கீழ் சுய தனிமைக்கு உள்ளாகப்பட வேண்டும். உலகின் பல நாடுகளில் இந்த முறை இப்போது அமுலுக்கு வந்துள்ளது.

எனது இந்த யோசனைபற்றி இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயிடம் வினவிய போது, இதுபற்றி, இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என அவர் நேற்று பாராளுமன்றத்தில் என்னிடம் தெரிவித்தார்

எது எப்படி இருந்தாலும், நம் நாட்டு அப்பாவி மக்களின் நிர்க்கதி நிலைமையை பயன்படுத்தி பணம் பண்ணும் கோஷ்டிகளுக்கு இடமளிக்கும் முறையில் அரசின் சட்ட திட்ட விதி முறைகள் ஒருபோதும் அமைய கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

## தீ விபத்து; 16 வீடுகள் முற்றாக தீக்கிரை...

தீக்கிரையாகின. வீடுகளில் குடியிருந்த 14 குடும்பங்களை சேர்ந்த 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 26 பேரும், பெண்கள் 32 பேரும், 05 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 03 பேரும் அடங்குகின்றனர்.

இத்தோட்டத்தில் முதலாம் இலக்க தொடர்குடியிருப்பிலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர், மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர். இதற்கிடையில் அப்பகுதியில் மக்கள் குவிந்ததால், சமூக இடைவெளியை பின்பற்றி உரிய வகையில் இருக்குமாறு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட் தேசங்கள் ஏற்பட்டுள்ளன.


வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன. ஒரு சில பொருட்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்கக்கூடியதாக இருந்தது.

இவர்களை தோட்ட ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிதங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் நுவரெலியா பிரதேச சபை ஆகியன ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லையென தெரிவிக்கும் இராகலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

# மலைச்சாரல்



## ராகலை தொடர் குடியிருப்பில் திடீர் தீ





நுவரெலியா ராகலை தோட்ட இரண்டாம் பிரிவில் லயன் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் 14 குடியிருப்புகள் முற்றாக சேதமாகியதுடன் 54 பேர் நிர்கதியாகியுள்ளனர். தோட்ட ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி பூஜையில் கலந்து கொண்டு வீடுதிரும்பும் போதே தீடீரென நேற்று அதிகாலை தீ விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீப்பரவலையடுத்து பொதுக்களும் பொலிஸாரும் இணைந்து கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதையும் பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்புகளையும் படத்தில் காணலாம்.

(படங்கள்: நோட்டன் பிரிட்ஜ், ஹற்றன் சுழற்சி நிருபர்கள்)

## தென்னக்கும்புர அல்-ஹிலால் வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை




**(ஹேவாஹெட்ட தினகரன் நிருபர்)**

கண்டி தென்னக்கும்புர அல் ஹிலால் வித்தியாலயம் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். நீண்ட வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலை அண்மைக்காலமாக மாணவர் வருகையிலும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. கட்டிடங்கள் பல தூர்ந்து காணப்படுவதாக பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார். கண்டி பல்லேகல பிரதான பாதையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பாடசாலை துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென பாடசாலை அதிபர் தெரிவித்தார். இதன்மூலம் கண்டி நகரப் பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத தமிழ். முஸ்லிம் மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையுமென பெற்றோர் கருத்து தெரிவிக்கின்றனர்.

பல்லேகல. திகன. தென்னக்கும்புர. குண்டசாலை ஹீஜ்ரபுர அம்பக்கோட்டை குருதெனிய பகுதி மாணவர்களின் நலன்கருதி ஆரம்ப பிரிவு முன்மாதிரி பாடசாலையாக இப்பாடசாலையை மாற்றியமைக்க கல்வித் திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள். சமூகநல இயக்க பிரமுகர்கள் காத்திரமான பங்களிப்புகளை வழங்கப்படல் வேண்டுமென பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

## போலி ஆவணங்களை தயாரித்து பெருந்தோட்டக்காணிகள் அபகரிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**



பெல்மதுளை பிரதேசத்தில் போலி ஆவணங்களை தயாரித்து பெருந்தோட்ட காணிகள் அபகரிக்கப்பட்டுவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன் பெல்மதுளை கனேகம பிரதேசத்தில் பொது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிலரால் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அரச மற்றும் பெருந்தோட்ட காணிகளில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பெல்மதுளை பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்தில் பெருந்தோட்ட காணிகளை பொலிஸ் நிலையம் மற்றும் சுகாதார மத்திய நிலையம் என்பன அமைப்பதற்கு ஒதுக்குவதற்கு பெல்மதுளை பிரதேச இணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே, பொது பணிகளுக்கான கட்டடங்களை அமைக்குமாறும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொது மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூட இப்பிரதேசத்தில் காணி வழங்குவதற்கு கூட மறுக்கப்பட்டதை சுட்டிக்காட்டும் பொதுமக்கள் இவ்வாறு சட்டத்திற்கு முரணாக காணிகள் அபகரிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## 15 இலட்சம் ரூபா செலவில் திப்பிட்டிய மைதானம் அபிவிருத்தி

சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் அரசாங்கத்தினால் 332 மைதானங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்சவினால் ரூபாய் 1.5 மில்லியன் நிதிஒதுக்கீட்டில் திப்பிட்டிய மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ச, அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன், உட்பட சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் பெருமளவிலான பிரதேசவாசிகளும் கலந்து கொண்டனர்.

## நாவலப்பிட்டி- கண்டி ரயில் சேவை தற்காலிமாக இடைநிறுத்தம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

கண்டி நாவலப்பிட்டி இடையிலான பயணிகள் ரயில் சேவை தற்காலிகமாக தடம்புரண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 11/03/2021 மதியம் 12.30 மணியளவில் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டுள்ளது. 142 ஆம் இலக்க பயணிகள் ரயில் நாவலப்பிட்டி ஜயசுந்தஓவிட்ட பகுதியில் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டாவது பயணத்தை ஆரம்பிக்கவிருந்த ரயில் எஞ்சின் பகுதி திருப்ப முற்பட்ட போதே இவ்வாறு தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டுள்ளது.

நாவலப்பிட்டி ரயில்வே ஊழியர் திருத்தப்பணியில் ஈடுபட்டு வருவதுடன் பணி நிறைவடைந்தவுடன் மீண்டும் வழமை போல சேவை இடம்பெறும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமசோன் நிறுவனத்தின் செயற்பாடு கண்டனத்துக்குரியது



இலங்கையின் தேசியக் கொடியை அவமதிக்கும் வகையில் உற்பத்திகளை இணையவழி விற்பனைக்கு விட்டுள்ள அமசோன் நிறுவனத்தின் செயற்பாடுகளை இலங்கையில் தடைசெய்ய வேண்டுமென்று, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் அமசோன் நிறுவனம்

இலங்கையின் தேசிய கொடியைக் கால் துடைப்பானாகவும் அக்கொடியின் சின்னம் அடங்கிய செருப்புகளையும் விற்பனை செய்வதற்கான புகைப்படங்களைத் தனது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. அமசோன் நிறுவனம், குறித்த பொருள்களுக்கான விலைகளையும் அதில் காட்சிப்படுத்தியுள்ளது.இது தொடர்பில் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள செந்தில் தொண்டமான், "உலகின் மிகவும் பிரபலமான இணைய வணிக நிறுவனமாகிய அமசோன் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ விற்பனை தளத்தில் இலங்கையின் தேசியக் கொடி இவ்வாறு அவமதிக்கப்படுவதை, ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவோ மன்னிக்கவோ முடியாத குற்றமாகும்" என்று தெரிவித்துள்ளார்.

"இணையவழி விற்பனையை முன்னெடுத்துவரும் மேற்படி நிறுவனம், இலங்கையின் தேசிய கொடியிலான கால் துடைப்பான்களை, சிங்கப்பூரிலிருந்தே உலகம் முழுவதுக்கும் விநியோகித்து வருகின்றது. இலங்கையில் இந்த கால்துடைப்பான்களை விநியோகிப்பதற்காக, 9.20 அமெரிக்க டொலர்களை, கப்பல் கட்டணமாகவும் அறவிடுகிறது.

"12 இலட்சத்து 98 ஆயிரம் ஊழியர்களைக் கொண்டு, வருடமொன்றுக்கு 21 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டிவரும் இவ்வாறானதொரு நிறுவனம், ஒரு நாட்டின் தேசிய சின்னங்களை அவமதிக்கும் வகையில் இவ்வாறான உற்பத்திகளை விற்பனைக்கு விடுவது கண்டனத்துக்குரியது" என்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.



கண்டி இந்திய உதவித்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள பழமை வாய்ந்த நூல்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் விசேட சேகரிப்புகளை பார்வையிட்டதோடு நூலகர் ஆர். மகேஸ்வரனிடம் இணைச்செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதன்போது ஒரு தொகை நூல்களை இந்திய உதவித்தூதுவர் அன்பளிப்பு செய்தார். அதுமட்டுமின்றி இருவரும் நினைவு பரிசில்களை பரிமாரிக் கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## பொகவந்தலாவ கிவ் பாதையை புனரமைக்க நடவடிக்கை

**ஹற்றன் விசேட நிருபர்**



பொகவந்தலாவ மேல் பிரிவு, கிவ் பாதையை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய பொகவந்தலாவ பிரதான வீதியினை இணைக்கும் பொகவந்தலாவ மேல் பிரிவு ஊடாக கிவ் தோட்டத்திற்கு செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமான பாதை 46 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் இப்பாதை கடந்த காலங்களில் நடந்து கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

ஆகவே இதனை அபிவிருத்தி செய்து தருமாறு நோர்வூட் தலைவர் விடுத்த வேண்டுக்கோளுக்கமைய 15 கிலோ மீற்றர் காபட் பாதை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தலைவர் கே.கே. ரவி தெரிவித்தார்.

குறித்த பாதையினை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை வீதிபோக்குவரத்து அதிகார சபை முன்னெடுத்துள்ளது. சுமார் எட்டு மாத காலப்பகுதியில் நிறைவு செய்யப்படவுள்ளது.

## பலாங்கொடை அரச வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

### அறுவை சிகிச்சைகள் நிறுத்தம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை அரச வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் தட்டுப்பாட்டினால் வைத்தியசாலையின் அறுவை சிகிச்சைகள் கடந்த 5 நாட்களாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் இவ்வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி இரேஷா பதிரகே தகவல் தருகையில் வைத்தியசாலையில் 9 அறுவைச் சிகிச்சை வைத்தியர்கள் தற்போது கடமையில் உள்ளனர் எனினும் அனைத்து அறுவை சிகிச்சைகளையும் மேற்கொள்ள போதுமான வைத்தியர்கள் இன்மையால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலைமையால் தீவிர மற்றும் சிசேரியன் அறுவை சிகிச்சைகள் மாத்திரம் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மகா சிவராத்திரி விசேட பூஜை



**ஹற்றன் விசேட நிருபர்**

ஹட்டனில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான லிங்க நகர் ஸ்ரீ ராஜராஜேஸ்வர ஆலயத்தில் விசேட சிவராத்திரி பூஜை நிகழ்வுகள் நேற்று மிக சிறப்பாக நடைபெற்றது.

விநாயகர் வழிபாட்டை தொடர்ந்து சிவலிங்கப்பெருமானுக்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வர பெருமானுக்கு பால், பழம், தேன், தயிர்,சந்தனம் இளநீர், பூக்கள், விபூதி, குங்குமம் உள்ளிட்ட 17 அர்ச்சினை பொருட்கள் கொண்டு விசேட அபிஷேகம் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து கொரோனா தொற்றிலிருந்து விடுபடுவதற்கு உரிய விசேட ஔடதங்கள் அடங்கிய அக்கினி யாகமொன்றும் இடம்பெற்றது.

# கிழக்கின் குரல்



# மாகாண சபை முறைமை முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும்

**தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அரசியலமைப்புக்கு யோசனை**

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

மாகாண சபை முறைமை முழுமையாக அமுல் படுத்தப்பட்டால் சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமென தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தமது முன்மொழிவுகளை புதிய அரசியல் யாப்புக்கான முன்மொழிவுகளாக முன் வைத்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டத்தில் புதிய அரசியல் யாப்புக்கான முன்மொழிவுகளை முன் வைக்கின்ற நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தமது முன்மொழிகளை முன் வைத்துள்ளன.

இதன் போதே மாகாண சபை முறைமை முழுமையாக அமுல் படுத்தப்பட்டால் சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என அதில் சுட்டிக்காட்டியுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொருளாளர் ஏ.தேவராஜ் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், பதில் பொதுச் செயலாளர் ஜெ.ஜெயராஜ், பொருளாளர் ஏ.தேவராஜா, கொள்கை பரப்புச் செயலாளர் ஆசாத் மௌலானா, செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், கட்சியின் சட்ட ஆலோசகரும் பிரமுகருமான சட்டத்தரணி திருமதி மங்கலேஸ்வரி சங்கர் ஆகியோர் இதன் போது கலந்து கொண்டு கட்சியின் முன்மொழிவுகளை முன்வைத்தனர். விஷேடமாக சிறுபான்மை மக்களுக்கு இப்போதுள்ள அரசியல் யாப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சிறுபான்மை மக்களுக்கு இருக்கின்ற அதி கூடிய அதிகாரமுள்ள முறைமை இந்த மாகாண சபை முறைமையாகும்.

இந்த முறைமையை முழுமையாக அமுல்படுத்தினாலே சிறுபான்மை மக்களை திருப்திப்படுத்தக் கூடிய வகையில் பல விடயங்கள் நிறைவேறும் என்ற அடிப்படையில் முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தத்தையும் தாண்டி இந்த முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் தமது கட்சி இம் முன்மொழிவுகளை முன்வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சம்மாந்துறை தனியார் வங்கியில் கொரோனா கிளை மூடப்பட்டது

*காரைதீவு குறூப் நிருபர்*

சம்மாந்துறை தனியார் வங்கி (HNB) கிளையின் உதவி முகாமையாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து கிளை நேற்று (12) வெள்ளிக்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. சம்மாந்துறையைச் சேர்ந்த குறித்த உதவி முகாமையாளரின் தந்தையாருக்கு தொற்று ஏற்பட்டதாகக் கூறி கடந்த வெள்ளி முதல் (5) அவர் கிளைக்கு வரவில்லை. கடந்த திங்கள், செவ்வாய், புதன் ஆகியதினங்களில் அவர் கிளைக்கு வரவில்லை. எனினும் பிசிஆர் சோதனை செய்து பார்த்தபோது 10ஆம் திகதி புதனிரவு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

மறுநாள் வியாழன் விடுமுறை. ஆதலால் நேற்று (12) வெள்ளியன்று கிளை மூடப்பட்டது.

அதேவேளை கிளையிலுள்ள முகாமையாளர் ஊழியர்கள் பாதுகாப்பு ஊழியர்கள் உள்ளிட்ட 11பேரும் அவரவர் வீடுகளில் சுயதனிமைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

அவர்களில் காரைதீவைச் சேர்ந்த நால்வர், மட்டு. நகரைச் சேர்ந்த மூவர் கல்முனை மற்றும் கல்லாற்றைச் சேர்ந்த இருவரும் அடங்குகின்றனர்.

## ஓட்டமாவடியில் மூன்று மாதங்களில் 212 டெங்கு நோயாளர்கள் இனங்காணல்

*கல்குடா தினகரன் நிருபர்*

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 11ம் திகதி வரை 212 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மார்ச் மாதம் மாத்திரம் 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மாஞ்சோலை கிராமத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையில் நுளம்பு குடம்பிகள் காணப்படுகின்ற இடங்களை அடையாளப்படுத்தி மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையும், வீட்டு வளாகம் பரிசோதனை செய்யும் நடவடிக்கையும் நேற்று இடம்பெற்றது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் ஓட்டமாவடி பிரதேச செயலகம், பிரதேச சபை, சமூகமட்ட அமைப்புக்கள், பொலிஸ் நிலையம் என்பன ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து சேவையாற்றி வருகின்றனர்.

அத்தோடு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்; ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 11ம் திகதி வரை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு வசதியாக இடங்களை சுத்தம் இல்லாமல் வைத்திருந்த 96 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், 10 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் மேலும் தெரிவித்தார்.

### ஒரு மாதத்திற்கு மேல் நிலுவை;

## அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப் பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை

*ஒலுவில் விசேட நிருபர்*

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய காரியாலயத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒரு மாதத்திக்கு மேல் மாதாந்த நீர்ப் பாவனை கட்டண நிலுவையை செலுத்தாத நீர்ப் பாவனையாளர்கள் நிலுவை கட்டணத்தை செலுத்துமாறு, அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் எம்.ரீ.ஏ. வாவா அறிவித்துள்ளார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய அதிகார எல்லைக்குட்பட்ட அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் பல மாதங்களாக மாதாந்த நீர்ப் பாவனை கட்டணம் செலுத்தப்படாமலுள்ளதாகவும், இவர்களுக்கு நீர் துண்டிப்பு தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். ஒரு மாத கால நிலுவைத் தொகைக்கு மேற்பட்ட பாவனையாளர்களின் நீர்த் துண்டிப்பே மேற்கொள்ளப் படவுள்ளது. இப்பிரதேசங்களில் உள்ள நீர்ப்பாவனையாளர்களின் நிலுவைத் தொகை மற்றும் பாவனையின் அளவு போன்றவற்றைக் கருத்திற்கொண்டே இணைப்பு துண்டிக்கப்படவுள்ளது. நீர் துண்டிப்பு செய்யப்படும் வாடிக்கையாளர் நீர்க் கட்டண பட்டியல் தொகையுடன் தண்டப்பணத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே மீளிணைப்பு வழங்கப்படுமெனவும் பிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்கப்பட்ட பழி



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி யாரோ ஒருவர் இருக்கையில் இது முஸ்லிம் சமூகத்தின் மீது வேண்டுமென்று திணிக்கப்பட்ட பழி என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு அ.இ.மு. காங்கிரசின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஸரப் முதுநபீன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

உலகம் முழுவதிலும் இஸ்லாம் போபியா என்ற போர்வையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அதுபோல இலங்கையிலும் இத்தாக்குதலை மையப்படுத்தியதாக ஒரு நாடகம் அரங்கேறியிருக்கிறது. அதுவும் முஸ்லிம்கள் மீது குறிவைத்து தாக்கப்படும் பழிவாங்கல் செயற்பாடாகப் பார்க்கிறோம்.

இத்தாக்குதலின் சூத்தரதாரி யார் என்பதை அரசாங்கம் இந்த உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும். குறிப்பாக முஸ்லிம்கள் பற்றிய புரிதல் ஏனைய இனங்களிடையே பிழையாக தோற்றுவிக்கப்பட்டது.

குற்றவாளியாக்கப்பட்டிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி தாக்குதலையிட்டு நன்கு தெரிந்திருந்தும் பதில் பாதுகாப்பு அமைச்சரையும் நியமிக்காமல் அவர் அக்காலப்பகுதியில் சிங்கப்பூர் மற்றும் இந்தியா சென்றிருக்கிறார். எனவே உண்மையான சூத்திரதாரி யார் என்பதை உலகறியச் செய்ய வேண்டும் என்றார்.

### மட்டக்களப்பில் அபிவிருத்தி

## வேலைத்திட்டங்களுக்காக 109.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு

*வெல்லாவெளி தினகரன் நிருபர்*

பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் 109.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பில் அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுப்பு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம், கால்நடை, சிறு நீர்ப் பாசனம் தொடர்பாக அமுல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய அமைச்சு மற்றும் பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினூடாக அமுல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி.எஸ். அமலநாதன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கடந்த வரவு செலவுத்திட்டத்திற்கமைய பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு பசளை தயாரிப்பு மற்றும் தொடர்பான உபகரணங்கள் கொள்வனவு, பால் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, இஞ்சி உற்பத்தி, மஞ்சள் உற்பத்தி போன்றவற்றிற்கு தலா 100 மில்லியன் ரூபாயும், உழுந்து உற்பத்தி, பயறு உற்பத்தி போன்றவற்றிற்கு தலா 50 மில்லியன் ரூபாயும் நாடளாவிய ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ளன.

## ஐம்பது கிலோ மரைஇறைச்சியுடன் இருவர் கைது

*கந்தளாய் தினகரன் நிருபர்*

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி ஐம்பது கிலோ மரை இறைச்சியை கொண்டு சென்ற இருவரை (11) மாலை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் வான்எல மற்றும் ஜயந்திபுர பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயது இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்கள் ஹதரஸ்கொட்டுவ பகுதியிலிருந்து கந்தளாயிக்கு டிப்பர் வாகனமொன்றில் ஐம்பது கிலோ மரை இறைச்சியை கொண்டு சென்ற போதே அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும், சந்தேக நபர்கள் பயன்படுத்திய டிப்பர் வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





படங்கள் அன்புவழிபுரம் தினகரன் நிருபர்
திருகோணமலை அருள் மிகு மாதுமையம்பாள் உடனுறை கோணேசப் பெருமான் ஆலயத்தில் மஹாசிவராத்திரி பெருவிழா நேற்று முன்தினம் (11) சமய அனுஷ்டானங்கள், நான்கு சாம அபிஷேகங்கள், விசேட பூஜைகளுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

படம் வெல்லாவெளி தினகரன் நிருபர்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவராத்தி பூசை நிகழ்வுகள் (11)இரவு ஆலயத்தில் இடம்பெற்றபோது பூசைகள் நடைபெறுவதையும், அடியார்கள் பூசை வழிபாட்டில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.









படம் காரைதீவு குறூப் நிருபர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் அம்பாறை மாவட்ட பிரதான சிவராத்திரி நிகழ்வு நேற்று முன்தினம் (11) காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் காலை முதல் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்....









வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டு அங்கு சென்றிருந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வடக்கில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார். மன்னார் இராமர் சேது கடற்கரையில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டதுடன் மடு திருத்தல யாத்திரிகள் தங்குமிட கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டுவதையும், வட மாகாண ஆளுநருடன் கலந்துரையாடுவதையும், யாழ்.நூலகத்துக்குச் சென்று யாழ்.மாநகர முதல்வர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து அவர்களுடன் குழுப் படம் எடுத்திருப்பதையும் படங்களில் காணலாம்.
படங்கள்: மன்னார் குறூப், யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்

# கிளிநொச்சியில் 80 குளங்களின் கீழ் சிறுபோகம் செய்ய முடியும்

**நீர்ப்பாசன திணைக்களம்**

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள 80 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என நீர்ப்பாசன திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட காலபோக அறுவடை நிறைவு பெற்று தற்போது சிறுபோக செய்கைக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதுள்ள நிலவரத்தின் படி 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 35 அடி 11 அங்குலமாகவும் 26அடி நீர்மட்டத்தை கொண்ட கல்மடுக்குளம் 25அடி 11அங்குலமாகவும் 12 அடி நீர் மட்டத்தை கொண்ட பிரமந்தனாறு குளம் மற்றும் 10 அடி 06 அங்குலம் கொண்ட கனகாம்பிகை குளம் ஆகியன முழுமையாக நீர் தேங்கிய நிலையிலும் உள்ளன.

மேலும் 25அடி நீர்மட்டம் கொண்ட அக்கராயன் குளத்தின் நீர் மட்டம் 24 அடி 6 அங்குலமாகவும் 08 அடி நீர் மட்டம் கொண்ட குடமுருட்டி குளத்தின் நீர்மட்டம் 07அடி 04 அங்குலமாகவும் 09 அடி 06 அங்குலம் நீர் மட்டம் கொண்ட வன்னேரிக்குளத்தின் நீர் மட்டம் 08 அடி 09 அங்குலமாகவும் 19அடி நீர் மட்டம் கொண்ட புதுமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் 18 அடி 10 அங்குலமாகவும் 10 நீர் மட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் மட்டம் 09 அடி 04 அங்குலமாகவும் காணப்படுகின்றன.

கடந்த ஆண்டில் மேற்படி ஒன்பது குளங்களின் கீழுள்ள 13,746.9 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 68.2 வீதமான நிலப்பரப்பில் அதாவது 9,379.4 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டைவிட இவ்வாண்டில் குளங்கள் யாவும் நிறைவடைந்து காணப்படுவதனால் 80 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர்**

# வழக்கில் பொலிசாரின் விண்ணப்பம் முதிர்ச்சியற்றது - சட்டத்தரணி சயந்தன்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பான வழக்கில் பொலிசார் சமர்பித்துள்ள விண்ணப்பம் முதிர்ச்சியடையாத விண்ணப்பம் என சட்டத்தரணி சயந்தன் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேஸ்வர் ஆலயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு நீதிமன்றில் தெரிவித்தார்.

விசாரணையின் போது, வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், முன்னைய வழக்கினை போலவே தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தினார்கள் என்றவாறான சுமத்துதல்கள் செய்யப்பட்டு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட, 'பி' அறிக்கைக்கு மேலதிகமாக மேலும் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு அழைக்கப்பட்ட போது ஆலயத்தின் தலைவர் செயலாளரை நீதிமன்றில் பிரச்சன்னமாகுமாறு அறிவித்தல் அனுப்புமாறு பொலிசார் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்கள். அத்துடன் வழக்கு தொடர்பில் சட்டமாஅதிபரின் ஆலோசனையை பெற வேண்டியிருப்பதாகவும் விண்ணப்பம் செய்தனர்.

இதன்போது சட்டத்தரணி சயந்தன், புரியப்பட்ட குற்றம் என்ன?, அதை புரிந்தவர்கள் யார்?, அவர்களிற்கு எதிராக எவ்வாறான சாட்சியங்கள் இருக்கின்றன. போன்ற விடயங்கள் தெளிவற்று இருக்கின்றமையே வழக்கு தொடுநர்கள் சட்ட மாஅதிபரிடம் ஆலோசனையை பெறுவதற்கு காரணமாகும். இந்நிலையில், பரிபாலன சபையினரை நீதிமன்றில் தோன்றுமாறு அறிவித்தல் வழங்குமாறு கோருவது ஒரு முதிர்ச்சியடையாத விண்ணப்பம் என வாதிட்டார்.

இதனையடுத்து பரிபாலனசபைக்கு அறிவித்தல் அனுப்பும் விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்தார். வழக்கு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் இந்திய அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது

**இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்**

**மன்னார் குறூப் நிருபர்**

இந்தியாவிற்கும் இலங்கைக்குமான நட்பில் அபிவிருத்தி முக்கியமான இடமாகவுள்ளது. எமது திட்டங்கள் நேரடியாக மக்களை சென்றடைந்துள்ளன என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே தெரிவித்தார்.

மடு தேவாலய பகுதிகளில் யாத்திரைக்காக வருகை தரும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் மடு பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்திய அரசின் நன்கொடையின் கீழ் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 144 வீடுகளை கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பு அமைக்க அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்த பின் உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

உலகமே கொவிட்19 தொற்றினால் முடங்கியுள்ள நிலையில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் பாரிய முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.



இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக உறவை பேணி வருகின்றோம். வீட்டுத்திட்டங்களை வழங்கியதுடன், சுகாதார துறைக்கும் பங்களிப்பை மேற்கொண்டுள்ளோம்.

உதாரணமாக சுவசெரிய அம்புலன்ஸ் வண்டிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளோம் இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளமை தொடர்பில் இந்திய அரசாங்கம் மகிழ்ச்சி அடைகின்றது என்றார்.

இதேவேளை இந் நிகழ்வில் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்ட நிலைமாற்று வீடமைப்புத் திட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, இலங்கைக்கான இந்திய துணைதூதுவர் எஸ்.பாலசந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், கே.திலீபன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய உயர்ஸ்தானிகர் எம்மை சந்திக்காமை ஏன்?

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய உயர்ஸ்தானிகர், நீதி வேண்டி தொடர் போராட்டத்தில் ஈடுபடும் தங்களை சந்திக்காமல் சென்றது ஏன் என போராட்டத்தில் ஈடுபடுவோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 13வது நாளாக நேற்றும் தொடர்கின்றது.

நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் நல்லை ஆதீனம் அருகாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்கலே மரியாதை நிமித்தமாக நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்திருந்தார்.



சந்திப்பினை முடிந்து திரும்பும் வழியில், உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவோரால் கோஷங்கள் எழுப்பப்பட்ட போதிலும் போராட்டத்தில் ஈடுபடுவோரை இந்திய உயர்ஸ்தானிகர் சந்திக்காமலேயே சென்றிருந்தார்.

# த.வி. கூட்டணியின் பொது சபை கூட்டத்தை கூட்டுங்கள்

**கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு உறுப்பினர்கள் கடிதம்**

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டத்தை 14 நாட்களுக்குள் கூட்டுமாறு உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரிக்கு அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

பொதுச் சபைக் கூட்டத்தை கூட்டுமாறு தமிழர் விடுதலை கூட்டணியின் நிர்வாக செயலாளர் இரா. சங்கையாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும், இன்று வரை நடவடிக்கை எடுக்காதது வேதனைக்குரிய விடயமாகும்.

24/2/2019 அன்று கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளின் பதவிக்காலம் 2021 காலாவதியாகி உள்ளது என்பதை தங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

தற்போதைய கொவிட் 19 நெருக்கடியான கால கட்டமாக இருப்பினும் 150 நபர்களுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி உண்டு. கொவிட் 19 காரணம் காட்டி காலத்தை இழுத்தடித்து கட்சியின் நலன் கருதி 14 நாட்களுக்குள் கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கட்சியின் உறுப்பினர்களாக பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு செவிமடுக்காது கட்சியோடு சம்பந்தப்படாத கட்சி உறுப்பினர்களும் ஆதீனத்திற்கு விரோதமாக செயற்பட்ட அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக ஏதோ உள்நோக்கத்துடன் 28/1/2020 அன்று கிளிநொச்சியிலும் 22/1/2021 யாழ்ப்பாணம் அரியாலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு தொடர்பில்லாதவர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றீர்கள்.

பிறகு ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான கூட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளது.

# படுத்திருந்த இளைஞன் மீது கொடூரத் தாக்குதல்

**யாழ். பருத்தித்துறையில் சம்பவம்**

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ். பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் கடற்கரை கொட்டிலில் படுத்துறங்கிய இளைஞனை இரும்பு கம்பிகளால் தாக்கியதுடன் காலில் பிடித்து வீதியால் இழுத்து சென்ற கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேகநபர்கள் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் நேற்று முன்தினம் பி.ப 03 மணியளவில் அதே பகுதியை சேர்ந்த 22 வயதுடைய ஜெகதீசன் நீகன் என்ற இளைஞன் கடற்கரை கொட்டிலில் படுத்துறங்கிக் கொண்டிருந்த நிலையில், அங்குவந்த 3 பேர் கொண்ட கும்பல் இரும்பு கம்பிகளால் மூர்க்கத்தனமாக தாக்கியதுடன் மயங்கி கிடந்த இளைஞனின் காலை பிடித்து வீதியால் இழுத்து சென்றுள்ளனர். முன் பகையின் காரணமாகவே இந்த கொடூரத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞனின் கை மற்றும் கால்கள் முறிந்த நிலையிலேயே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தாக்குதல் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வவுனியாவில் ஆலய உண்டியல் உடைத்து திருட்டு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் ஆலய உண்டியல் திருட்டு சம்பவம் தொடர்பில் மூன்று சிறுவர்களைத் தேடி வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தின் உண்டியல் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆலயப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட சீ.சீ.ரீ.வி வீடியோ காட்சிகளை சோதனையிட்ட பொலிசார் சம்பவத்தில் மூன்று சிறுவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

14 தொடக்கம் 16 வயதுக்குட்பட்ட சிலரே குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளமை சீ.சீ.ரீ.வி ஊடாக அறிய முடிவதாக தெரிவித்துள்ள பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கலைக் கதம்பம்

சைத்திரியன்

"என் நெற்றிப் பசலைக்கே அஞ்சுபவர் பிரிதலாகிய சிறுமைச்செயல் செய்வாரா?"

# குறிஞ்சித் திணையில் கபிலர் வருணிக்கும் இலட்சியக்காதல்



குறிஞ்சித் திணையை மிகச்சிறப்பாக பாடிய கபிலர் குறிஞ்சி கபிலர் என்றே அழைக்கப்பட்டார். புலவர்கள் போற்றும் புலவராக பாரியின் ஆருயிர் நண்பனாக சங்கப் புலவர்களுள் மிகுதியான பாடல்களை வடித்தவராக கபிலரை வரலாறு கூறுகிறது.

"சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கி வள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே (சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்குவது போல இவள் உயிர் மிகச் சிறியது.ஆனால் இவள் காதலோ மிகப் பெரியதாய் உள்ளது என்பது இதன் பொருள்)

இது போன்ற சிறப்பான உவமைகளும் குறிஞ்சி நில வர்ணனைகளும் நுட்ப உணர்வு வெளிப்பாடுகளும் கபிலர் கவிதையை தனித்து எடுத்துக் காட்டுவன.

குறிஞ்சித் திணையில், பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது என்ற பொருளில் வரும் பகுதி இது.

தலைவன் பிரியக் கருதியதை அறிந்த தோழி தலைவியிடம் அதனை தெரிவிக்கிறாள். தலைவனது அன்பையும் மனப்போக்கையும் நன்கு அறிந்திருக்கும் தலைவி அவன் பிரிய மாட்டான் என உறுதியாகக் கூறுகிறாள்.

தலைவி தோழியை நோக்கி கூறுகிறாள்,

தோழி! என் தலைவர் நிலைத்து நிற்கும் வாய்மை உடையவர். பழகப்பழக நீடிக்கும் இனிமை உடையவர்.ஒருநாளும் என் தோள்களைப் பிரிந்தறியாதவர். அவரைப் போன்ற மேலானவர்களுடைய நட்பு தாமரைத் தாதையும் சந்தனத் தாதையும் ஊதி எடுத்து சந்தன மரத்தில் அமைத்த தேன் இறால் போன்ற மேன்மையுடையது. நீரில்லா உலகம் வாழ முடியாதது போல அவர் இல்லாமல் நான் வாழமுடியாது என்பதை அவர் அறிவார்.

பிரிவினால் ஏற்படும் என் நெற்றிப் பசலைக்கே அஞ்சுபவர் என்னை பிரிதலாகிய சிறுமை செயல் செய்வாரா சொல்?என்கிறாள் தலைவி.

தலைவியின் உவகை தலைவன் மீது அவள் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியது. தலைவனது சொல்லும் செயலும் உணர்வும் மேலானது என்பதை அவள் சொற்கள் உணர்த்துகின்றன. இலட்சியக் காதல் எப்படி இருக்கும் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. (ஸ)

## இப்படிக்கு நான்..!



எண்ணை வைத்து
என்னை எண்ண வேண்டாம்
முள்ளில் பதிந்த

முழுமுகிலின் முளைவடிவம்
பனியில் படிந்த

நுரையின் நுதல்
எறும்பு எடுக்கும்

தீனியின் திண்ணத்தை
காட்டிலும் மீச்சிறு மடங்குதான்
ஒற்றின் ஓராயிரம் இணைந்தால்
அதுவும் ஓர் வட்டமே...
கருமையின் கண்கள் இணைந்தால்
அதுவும் ஓர் காரிருளே...
காற்றைக் களவாட

எவனுமில்லை அவனியில்
அப்படியே நானும்.
தோற்றுப் போகவில்லை
ஏற்றிக் கொள்வதற்காக

தேற்றிக் கொண்டிருக்கிறேன்

இப்படிக்கு,
நான்.

அதிரா

# ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் ஏற்பாட்டில் மாபெரும் இலக்கியப் போட்டி; ஆக்கங்கள் கோரப்படுகின்றன

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் மார்ச் மாத இதழ் வெளிவந்துள்ளது.வழமைபோன்று கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நூல் அறிமுகம், பத்தி எழுத்து, வாசகர் பேசுகிறார் என பல்வேறு அம்சங்களை சுமந்து இம்முறை இதழ் வெளிவந்துள்ளது.

அதேவேளை ஞானம் சஞ்சிகை அதன் ஆசிரியர் தி.ஞானசேகரனின் எண்பதாவது அகவையை முன்னிட்டு மாபெரும் இலக்கியப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை வெளிவந்த சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான இந்த போட்டி 6 பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

**முதல் பிரிவு:** நாவல் மற்றும் குறுநாவல். இரண்டாம் பிரிவு: சிறுகதை ஆகக்குறைந்தது ஒன்பது சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுப்பாக அமைந்திருத்தல் அவசியம்.

**மூன்றாம் பிரிவு:** கவிதைத் தொகுப்பு, மரபுக்கவிதை புதுக்கவிதை, காவியம்.

**நான்காம் பிரிவு:** கட்டுரை. பொருட்பரப்பு எதுவாகவும் இருக்கலாம்.

**ஐந்தாம் பிரிவு:** ஈழத்துப் பழந்தமிழ் ஆய்வு. பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது.

**ஆறாம் பிரிவு:** ஈழத்து சிற்றிதழ்.

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். ஆனால் ஒரு பிரிவுக்கு ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போட்டி முடிவு திகதி 30. 6. 2021.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,ஞானம்,3B, 46வது ஒழுங்கை, கொழும்பு 6.

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி பரிசுகள் உண்டு.முதற்பரிசு 25,000 ரூபா, இரண்டாம் பரிசு 15,000 ரூபா, மூன்றாம் பரிசு 10,000 ரூபா. என பரிசுத் தொகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (ஸ)

# 'பூக்கள் அற்ற தேசத்தில் உன் பாதச்சுவடுகளை விதைத்து விட்டுப் போ....'

கவிஞர் அன்பு சிவாவின் சின்னச் சின்ன காதல் கவிதைகள்



"காதல் கவிதைகள் எழுத காதல் அனுபவம் அவசியமில்லை அன்பை பரிமாறிக்கொள்ளும் உன்னதமான உணர்வுதான் காதல்.

அதை கவிதையாக எழுதும்போது இலக்கியமாகி விடுகிறது என்கிறார் பெயரிலேயே அன்பை வைத்திருக்கும் அன்பு சிவா"



பூக்கள் அற்ற தேசத்தில் உன் பாதச்சுவடுகளை விதைத்து விட்டுப் போ...பட்டாம் பூச்சிகள் பசியாறட்டும்! இப்படி பூக்களின் மேல் படிந்து இருக்கும் சிறு பனித்துளிகள் போல சின்னச் சின்ன காதல் கவிதைகளை எழுதி வருகிறார் தமிழக கவிஞர் அன்புசிவா. இவர், ஒவ்வொரு ஆண்டும் பெபரெவரி 14ஆம் திகதி காதலர் தினத்தன்று ஒரு கவிதை நூலை எழுதி வெளியிட்டு வருகிறார்.

இவ்வாறு கடந்த, 14 ஆண்டுகளில் தவறாமல் 14 காதல் கவிதை நூல்களை வெளியிட்டிருக்கிறார். இவ்வாண்டும் 'உன் அழகின் கீழ் படிந்த மாணவன்' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

''காதல் பற்றி கவிதை எழுதப்பிடிக்கும். ஆனால், எனக்கு காதலித்த அனுபவம் கிடையாது. வீட்டில் பெற்றோர் பார்த்த பெண்ணைத்தான் திருமணம் செய்திருக்கிறேன். காதல் கவிதைகள் எழுத காதல் அனுபவம் அவசியமில்லை.

காதலைப் பற்றி கவிதைகள் எழுதாத கவிஞர்களே இல்லை. அவர்கள் எல்லோருக்கும் காதல் அனுபவம் இருந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், அந்த உணர்வுகள், அவர்களின் மனதுக்குள் இருந்திருக்கும்'' என்கிறார் அன்பு சிவா.''சரி...இப்போதெல்லாம் உண்மையான காதல் எங்கே இருக்கிறது,'' '

ஒருஆணும், பெண்ணும் அன்பை பரிமாறிக்கொள்ளும் உன்னதமான உணர்வுதான் காதல். அதை கவிதையாக எழுதும்போது, இலக்கியமாகி விடுகிறது.

சங்க இலக்கியங்களில் உள்ள அகநானூறு பாடல்கள் எல்லாம் அதையே பதிவு செய்துள்ளன.

நமது பண்பாடு, கலாசாரத்தை சீரழிக்கும் மேலை நாட்டுக் காதலை வரவேற்கக்கூடாது.

அன்பையும், பாசத்தையும் வளர்க்கும் இயற்கையான நமக்கு காதல் தேவை'' என்கிறார் இவர். பெயரிலேயே அன்பை வைத்திருக்கும், சிவாவின் காதல் பற்றிய பார்வை மிகச் சரியாகதானிருக்கும்.

# காதலும் பறவைகளின் தொடர்பும்
## பட்டினப்பாலை கூறும் இனிமை காதல்

**(கடந்த வாரத் தொடர்)**

ஆனால் நாம் நம்மை அவர் மறந்தார் என்ற காரணத்தால் நாம் அவரை மறக்க மாட்டோம். என்கிறார்.'அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள் நமை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' (சிலம்பு)

பறவைகள் தன் குறை கேட்கும் தோழிகளாக இருக்கலாம்.

ஆனால் சிலசமயம் சில பறவைகளை விரட்ட வேண்டிய அவசியமும் பெண்டிருக்கு ஏற்படும். காவிரியின் கருணையாலும் கடும் உழைப்பாலும் விளைந்த நெல் வீட்டின் முன் காய வைக்கப்பட்டு இருக்கிறது. காவல் வேண்டாம் தான் யார் வந்து அள்ளிக் கொண்டு போய்விடுவார்கள் ஆனாலும் அந்த இல்லத்தின் குறும்புக்கார பெண்ணுக்கு ஏதேனும் பணி தர வேண்டும் என்பதற்காகவே அவளின் நெல்லுக்கு காவல் வைக்கிறாள் தாய்.

கொத்தித் தின்ன கூலியா? ஏனைய சில பறவைகளும் வருகின்றனவாம். அப்பெண்மணி அவற்றினை விரட்ட மனம் ஒப்பவில்லை. சிறு தடி எடுத்து வீசவும் துணியவில்லை. உடனே தனது காதில் இருக்கும் கடுக்கன் ஒன்றை எடுத்து பறவையை விரட்டி விட்டாளாம்.தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் பறவையின் மூலமாக தூது விடுவது செய்தி அனுப்புவதும் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் புலவர் ஒருவர் ஒரு செய்தியை கூறுகின்றார்.

வடக்கிலிருந்து தென்குமரி வந்து கூடு கட்டி குஞ்சு பொறித்து தன் பெற்றோருடனும் குஞ்சுகளுடன் வடக்கு நோக்கி பயணிக்கும் அனைத்து பறவைகளுக்கு புலவர் ஒரு செய்தி சொல்கிறார். செல்லும் வழியில் சோழ நன்னாட்டுப் கோப்பெருஞ்சோழனின் மாளிகை தெரிந்தால் அதனுள் சென்று மன்னனிடம் உனக்கு பிசில் என்னும் புலவனை தெரியும் என்று சொல்வாய் அவன் உனது அன்பான பெண் துணைக்கு பொன்னாபரணங்கள் தந்து அனுப்புவான் என்றான் அந்தப் புலவன்.

பண்டைத் தமிழ்ச் சமூகம் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தது என்பதற்கு இது போல நூற்றுக்கணக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன.

இரா. கதிரவன்

# தமிழ் இலக்கியப் பேரவையை உருவாக்கி ஒன்றிணைந்து புது யுகம் படைப்போம்

## 'எதிரியையும் ஜெயிக்கலாம்' நூல் வெளியீட்டு விழாவில் மூத்த கவிஞர் மு.சடாட்சரன்



கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த கலைஞர் அகரம் செ.துஜியந்தனின் 'எதிரியையும் ஜெயிக்கலாம்' நூல் வெளியீட்டு விழா கல்முனை வடக்கு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் மூத்த கவிஞர் மு.சடாட்சரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், டாக்டர் இரா.முரளீஸ்வரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். ஆசி உரையினை சிவஸ்ரீ மு.சபாரெத்தினம் குருக்களும் நூல் சிறப்புரையினை எழுத்தாளர் எஸ்.அரசரெத்தினமும் நூல் முதற் பிரதியினை ஓய்வு நிலை அதிபர் மு.சுபைந்திரராஜா பெற்றுக்கொண்டார்.



விழாவிற்கு தலைமை தாங்கிய மூத்த கவிஞர் மு.சடாட்சரன் தமதுரையில்.

நூலாசிரியர் அகரம் செ.துஜியந்தன் பல துறைகளில் ஆற்றல் மிகுந்த கலைஞர். நமது எழுத்தாளர்கள் நூலை எழுதி முடித்து அதனை பதிப்பித்து வெளியிடுவதும் அவற்றை விற்பனை செய்வதற்கும் பல நிலைகளில் ஓடி உழைக்கவேண்டியுள்ளது.

இந் நிலையை மாற்றியமைத்து வெற்றிகாண நமது எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எல்லோரும் வாசிப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கல்முனை தமிழ் இலக்கியப் பேரவையை உருவாக்கி நாம் ஒன்றிணைந்து இயங்கிவந்தால் இந்நிலைமை மாறி புதுயுகம் பிறக்கும்.

அடிக்கடி நூல்களை இங்கு வெளியிடவும் முடியும். எதிரியையம் ஜெயிக்கலாம் என்ற நூலை வெளியிடுகின்றோம்.



எதிரியையும் ஜெயிக்கலாம் என்றால் நமக்கு யார் எதிரிகள்? எல்லோருக்கும் எதிரிகள் அதிகம் தான்.

நம் மனதை திடமாக்கி புதிய உற்சாகத்தோடு ஒவ்வொன்றையும் அணுகி கூர்ந்த நோக்கில் பெருமனதோடு சிந்தித்து முயன்றால் எல்லோரும் தங்கள் எதிரிகளை ஜெயிக்கலாம்.

என்று நூலாசிரியர் அழகான முறையில் விளக்கியுள்ளார்.

இந் நூலிலே இருபது அம்சங்களை ஆராய்ந்து தெளிவுபடுத்தி விளக்கியிருக்கின்றார். சிந்தியுங்கள், நல்வழியில் செல்லுங்கள். எதிரியை வென்று சிறப்பாக வாழ்வோம் என்றார்.






பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றும் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி ஆலயத்தில் வியாழக்கிழமை (11,12) மாலை முதல் வெள்ளிக்கிழமை அதிகாலை வரை மஹா சிவராத்திரி வழிபாடுகள் இடம் பெற்றன.
(படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# வன்முறைகளால் எதையும் சாதித்து விடமுடியாது; இராதாகிருஷ்ணன் எம்.பி.

**( நுவரெலியா தினகரன் நிருபர்)**

வன்முறைகளால் எதையும் சாதித்து விடவும் முடியாது. அகிம்சை வழியில் பேசி எடுக்கப்படும் தீர்வே நல்ல முடிவாக அமையும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் (11) வியாழக்கிழமை மாலை நடைபெற்ற இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராதாகிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில்

தற்பொழுது நகர் புறத்தில் மாத்திரமல்ல தோட்ட புறங்களிலும் அடக்குமுறைகளை கொண்டுவருகின்றார்கள். இதற்கு நாம் இடமளிக்க கூடாது.கந்தப்பளை மாகுடுகல தோட்டத்தில் ஓய்வு பெற்ற 7 இராணுவ வீரர்களை தொழிலுக்கு அமர்த்தியுள்ளார்கள். இது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தோட்டங்களில் இராணுவ வீரர்களை தொழிலுக்கு அமர்த்த கூடாதென பாராளுமன்றத்திலும் கூறியுள்ளேன்.

அத்தோடு கைத்தொழில் அமைச்சர் ரமேஸ் பத்திரனவின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளேன். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எல்லாமே நிறைவேற்றப்படாவிட்டாலும் ஒரு சில கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. உதாரணமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க வேண்டும். என்று கூறியதாலேயே இன்று ஆயிரம் ரூபா சம்பளத்தை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

# காணாமல் போனவரை தேடி சென்றவர்கள் மீது குளவிக்கொட்டு 6 பேர் பாதிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

பொகவந்தலாவ லிங்ஸ்டன் தோட்டத்தில் மரக்கறி தோட்டத்திற்கு கம்புகள் வெட்டச் சென்று காணாமல் போன இளைஞனை தேடி சென்றவர்கள் மீது குளவிகள் சரமாரியாக தாக்கியுள்ளது.



இதனால் 6 பேர் கடும் காயங்களுடன் பெண் பொகவந்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பிரபாகரன் என்ற 26 வயதுடைய திருமணமாகாத இளைஞர் ஒருவர் கடந்த 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை காலை மரக்கறி தோட்டத்திற்கு கம்பு வெட்டுவதற்காக செல்வதாக கூறி விட்டு வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளார். எனினும் மாலை வரை வீடு திரும்பாமையால் அவரை தேடி காட்டுக்குள் குடும்பத்தினர் சென்றுள்ளனர். அதனை தொடர்ந்து பிரதேச வாசிகளும் தேடிசென்றுள்ளனர்.

இவ்வாறு தேடி போதே குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் கைது

**தெனியாயதெனியாய நிருபர்**

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த மூவரை மாத்தறை கொட்டவில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெனிபிட்டிய வராபிட்டிய குருந்துவத்த பிரதேசத்தில் இரவு வேளைகளிலேயே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

கைது செய்யப்படும் பொழுதும் சந்தேகநபர்களிடமிருந்து கசிப்பு உற்பத்திக்காக பயன்படுத்திய பீப்பா மற்றும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி இரண்டு லட்ச ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் கொட்டவில பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர் .சிஹெட்டியாராச்சி தலைமையில் இடம்பெற்று வருகின்றன.


## இலங்கை வங்கி

**எமது கந்தானைக் கிளையை கந்தானையிலேயே இடமாற்றம் செய்வதற்கான அலுவலக இடப்பரப்புத் தேவை**

## கந்தானைக் கிளை

**உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடமானது பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடமானது சட்டப்படியாக நிர்மாணிக்கப்பட்டதாக இருத்தல வேண்டும் என்பதோடு 10 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் ஆகாது.
- தரைப்பரப்பானது ஆகக் குறைந்தது 3000-3800 ச.அடியாக இருத்தல் வேண்டும். இரு மாடிக் கட்டடமாகவிருந்தால், தரைத்தளமானது 2000 ச.அடியாகவும் மீதியாகவுள்ள இடப்பரப்பானது மேல் மாடியில் இருத்தல் வேண்டும்.
- பிரதான வீதிக்கான முகப்பானது ஆகக் குறைந்தது 30 அடியாக இருப்பதோடு, அது நகர எல்லைகளுக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மின்னுற்பத்தி இயந்திரத்திற்கான அறைக்காக 100 ச.அடி தரைப்பரப்புக் காணப்பட வேண்டும். இவ்வறையானது கட்டடத்தின் பின்பக்கத்தில் அமைந்திருப்பதுடன் அதற்கான நுழைவாயிலும் இருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 04 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய பரந்த, பொருத்தமான வாகனத் தரிப்பிடம் இருத்தல் வேண்டும்.
- தொலைபேசி (ஸ்ரீலங்கா ரெலிகொம், 3 நிலை, 60 அம்பியர் மின்சாரம் போன்ற வசதிகள் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவைகள் அலுவலகத் தேவைப்பாட்டுக்கு அமைய வழங்கப்படல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 1000 லீட்டர் கொள்ளக்கூடிய நீர்த் தாங்கியொன்று உயர்வான இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக, ஆகக் குறைந்தது 3 கழிவறைகள், அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுள் ஒன்றானது கட்டடத்தின் பின்பக்கத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- தரையானது ஓடு பதித்ததாகவும் கூரை அல்லது கொன்கிறீட் ஸ்லாப் சீலிங்கினால் பாதுகாக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- பின்பக்கக் கதவு மற்றும் ஜன்னல்கள் இரும்புக் கம்பிப் பின்னல்கள் (Grills) பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடின், கனரக இரும்புக் கம்பிப் பின்னல்கள் (Heavy-duty Iron Grills) வழங்கப்படல் வேண்டும்.
- கட்டடத்திற்கான தீக் காப்புறுதி இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளோர், கட்டட வரைபடம், நிலஅளவை வரைபடம், உரித்துடமைச் சான்றிதழ், இணக்கச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதியுடன் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுள் பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**(மேல் மாகாணம் - வடக்கு),**
**இலங்கை வங்கி,**
**2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தக கோபுரம்,**
**கொள்ளுப்பிட்டி.**
**தொலைபேசி: 2381366/ 5865151. தொலைநகல்: 2326830.**
**மின்னஞ்சல்: bocwpn@boc.lk**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



ST&IS SINCE 1892

# BMICH
## ஏல விற்பனை

| | | |
|---|---|---|
| KP 3XXX | நிஸான் எக்ஸ்-டிரைல் ஜீப் | 2011 |
| QB 2XXX | பஜாஜ் முச்சக்கர வண்டி | 2006 |
| 18-4XXX | வொல்வோ 940 GL கார் | 1993 |

மற்றும்
**7500 ச.அ பிவிசீ கவருடன் உருக்கு அமைப்பு,** பெருமளவு அலுவலகத் தளபாடங்களும் இணைப்புகளும், **ரெட் செரமோனியல் ப்ஃளோர் ரண்ணர்ஸ் மற்றும் விருந்து மண்டப தரை விரிப்புகள்,** ஹொட்டேல் லினன், பல்லூடக உபகரணங்கள், **தொழில்முறை வீடியோ கமறாக்கள் மற்றும் CCTV கமறாக்கள்,** அலுவலக தானியங்கிகள், **குளிரூட்டிகள்,** சோலார் பெனல்ஸ்கள் மற்றும் பற்றரிகள், **40 அடி கொள்கலன்கள் 03,** கழிவு இரும்புகள் உட்பட மேலும் பல...

## 2021 மார்ச் 18 வியாழக்கிழமை
## BMICH
## மிஹிலக்க மெதுர மண்டபம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

என்னுமிடத்தில்
மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பார்வையிடல் - ஏல விற்பனை நடைபெறும் நிலையத்தில்
16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை)

மேலதிக விபரங்களுக்கு **www.sandslanka.com** என்ற எமது இணைய தளத்தைப் பார்க்கவும்.

விற்பனை நிபந்தனைகள்
- **சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய, முதலில் வந்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.**
- **ஏல நாளில் நுழைவு**: ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 10,000/- ஐ வைப்புச் செய்தல் வேண்டும். காலை 8.30 மணிக்கு கேட் திறக்கப்படும். முதலில் வந்தவர்களுக்கு முதல் சேவை என்ற அடிப்படையில் கொள்வனவாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- **கொடுப்பனவுகள்**: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் **மீளளிக்கப்படாத** 50% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 50% ஐயும் **2021 மார்ச் 22 ஆந் திகதி திங்கட்கிழமை** 3.00 மணிக்கு முன்னர், காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- ஏலவிற்பனை முடிவுற்ற 07 நாட்களுக்குள் பொருட்கள் அகற்றப்பட வேண்டும்.
- பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப முகாமைத்துவத்தின் / ஏலதாராரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®**
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
011 2671468
www.sandslanka.com


## 11.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 694,126
## பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 28,508,290.00
**ரூ. 2,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 27**

NLB NATIONAL LOTTERIES · www.nlb.lk

### சீட்டிழுப்பு இலக்கம் 4423 உத்தியோகபூர்வ முடிவுகள்
## மஹஜன சம்பத
**திகதி: 11-03-2021**

வெற்றி எழுத்து **N** வெற்றி இலக்கங்கள் **6 8 4 1 7 1**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 8 4 1 7 1 | ரூபா. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 8 4 1 7 1 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 4 1 7 1 | ரூபா. 10,000/- | 119 |
| 4 ஆம் பரிசு | 1 7 1 | ரூபா. 1,000/- | 1,230 |
| 5ஆம் பரிசு | 7 1 | ரூபா. 100/- | 12,308 |
| 6ஆம் பரிசு | 1 | ரூபா. 20/- | 121,689 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 8 4 1 7 | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | 6 8 4 1 | ரூபா. 1,000/- | 134 |
| 9ஆம் பரிசு | 6 8 4 | ரூபா. 100/- | 1,221 |
| 10ஆம் பரிசு | 6 8 | ரூபா. 50/- | 12,058 |
| 11ஆம் பரிசு | N | ரூபா. 20/- | 48,568 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 13,244,940.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,108,722.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை · www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

## கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2718 · சீட்டிழுப்பு திகதி 11 / 03 / 2021

ஆங்கில எழுத்து **J** · வெற்றி இலக்கங்கள் **01 04 49 52**

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 192 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 376 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9,654 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,384 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 158,986 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29,122 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 204,720

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,342,920.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,003,123.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය · தேசிய லொத்தர் சபை · NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### உத்தியோகபூர்வ முடிவுகள்
## செவன
உங்களுக்கு வீடு – கைகளில் காசு

திகதி 11/03/2021 · சீட்டிழுப்பு இலக்கம் 321

ஆங்கில எழுத்து **Q** · வெல்லப்பட்ட இலக்கங்கள் **33 47 50 67**

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- வீதம் | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- வீதம் | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- வீதம் | 86 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- வீதம் | 154 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- வீதம் | 3,849 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- வீதம் | 2,157 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 54,466 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 8,492 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 2,068,710.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය · தேசிய லொத்தர் சபை · NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 11/03/2021 · சீட்டிழுப்பு இலக்கம் - 460

ஆங்கில எழுத்து **C** · வெற்றி இலக்கங்கள் **38 49 55 61**

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 90 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 195 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,202 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,419 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 86,294 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,104 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,538,300.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 111,307

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 87,289,604.00

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය · தேசிய லொத்தர் சபை · NATIONAL LOTTERIES BOARD

## Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 787
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 11.03.2021

ஆங்கில எழுத்து **F** · சுப்பர் இலக்கம் **18** · வெற்றி இலக்கங்கள் **60 74 79 80**

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 93 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 223 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,181 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,503 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 86,704 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 15,831 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 122,167,036.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 · அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,313,420.00

தேசிய லொத்தர் சபை · தொலைபேசி: 0112-470662, 0114-607000 · இணையம்: www.nlb.lk
ஐந்து இலட்சம் அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக கேள்வி கோரல் அறிவித்தல் 2021 மார்ச் 13 மற்றும் 15ம் திகதி டெயிலிநியூஸ் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

- Construction of Barbed wire fence along some critical zonal boundary at Seethawaka Export Processing Zone

  **Contract No : BOI/SEPZ/ES/2021/23.09.048**

- Construction of wash room adjoining to panel room of MRC at Seethawaka Export Processing Zone

  **Contract No : BOI/SEPZ/ES/2021/23.09.044**

- Expansion of Driver's room at Seethawaka Export Processing Zone

  **Contract No. :BOI/SEPZ/ES/2021/23.05.029**

- Construction of Vehicle shed at Administrative Building Premises at Seethawaka Export Processing Zone

  **Contract No: BOI/SEPZ/ES/2021/23.05.026**

- Supply & Installation 07 Nos. of Brand new split type Air Condition Units at Seethawaka Export Processing Zone

  **Contract No: BOI/SEPZ/ES/2021/23.05.027**

மேற்படி பெறுகைக்கான குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2021 மார்ச் 13 மற்றும் 15ம் இரு தினங்களிலும் டெயிலி நியூஸ் பத்திரிகையில் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவிக்கிறோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.**

# மக்கள் வங்கி

## வென்னப்புவ கிளை

## பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப்பதிவகப் பிரிவுக்கு உட்பட்ட, வடக்கு பிட்டிகல் கோரளே, யாகம் பத்துவில் அமைந்துள்ள, "இருன்வில"என அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, "இருன்விலவத்த" என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ.லக்ஷ்மன் எச் பெர்னாண்டோ அவர்களால் 2007 ஜனவரி 29ஆம் திகதி அளவை செய்யப்பட்டு, 2007 மே மாதம் 15 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட, 7599ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ–௦௦ : றூ.00 : ப.20**
**அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக 63/226 என்ற இலக்கத்தின் கீழ் சிலாபம் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**
**மக்கள் வங்கியின் வென்னப்புவ கிளை வளாகத்தில்**
**மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2009 செப்டெம்பர் 25ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2009 செப்டெம்பர் 11ஆம் திகதிய டெயிலி நியூஸ் மற்றும் 2009 செப்டம்பர் 14 ஆம் திகதிய தினமின செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணியை சென்றடைவதற்கான வழி:**
மாதம்பே புதிய நகரிலிருந்து குருநாகல் வீதி வழியே சுமார் 2.3 கிலோமிற்றர் வரை சென்று, 61/1ஆம் இலக்க கல்வேட்டைத் தாண்டியதும், இடது பக்கத்திலுள்ள இருன்விலவத்த வீதியில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதும் குறித்த ஆதனத்தை வீதியின் வலது பக்கத்தில் காண முடியும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) முத்திரை கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி வென்னப்புவ கிளை, என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மக்கள்வங்கி, வென்னப்புவ கிளை முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 0312253560/0312255341

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*
**129 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகம்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்டன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

**இணையதளம்: www.sandslanka.com**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

---

### மாநகரசபை - குருணாகல்

## பெறுகைக்கான அறிவித்தல்

குருணாகல் மாநகர சபையினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | வேலைத்திட்டம். | விண்ணப்பம் வழங்கப்படும் கால எல்லை | விண்ணப்ப கட்டணம் | மீளச் செலுத்தப்படும் கட்டணம் | மனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01. | மத்திய சந்தை iii ஆம் கட்டத்திலுள்ள கடைகளை குத்தகைக்கு வழங்குதல் | 2021.03.15 மு.ப.8.30 - 2021.04.08 பி.ப.2.00 வரை | Rs. 2,000.00 + வட் வரி | Rs.10,000.00 | 2021.04.09 பி.ப.2.00 |
| 02. | சிகிச்சை நிலையம் | 2021.03.15 மு.ப.8.30 - 2021.04.23 மு.ப.11.00 வரை | Rs. 2,000.00 + வட் வரி | Rs.10,000.00 | 2021.03.23 பி.ப.2.00 |

- மேற்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான நிபந்தனைகள், முற்பணம் மற்றும் கடைக்கான வாடகை தொடர்பான தகவல்கள் அனைத்தும் விண்ணப்பப்பத்திரத்துடன் வழங்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு 037-4941896 ஐ தொடர்பு கொள்ளவும்.

**நகராட்சி ஆணையாளர்**
**மாநகர சபை**
**குருநாகல்**

---

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

---

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

**தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP)**

*ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்டது*

Loan No.: L0124 A, Country: Sri Lanka

**கொழும்பு, கம்பஹா, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் தாக்கக் குறைப்பு வேலைகள் – பொதி 4ஏ.**

**RFP Reference Number: RLVMMP/WORKS/04A**

1. தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டத்திற்கான ஆகுசெலவிற்காக இலங்கை அரசாங்கமானது ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து ஏற்கனவே நிதியைப் பெற்றுள்ளதுடன் இப்பெறுகைகளின் பகுதியொன்றை கொழும்பு, கம்பஹா, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மண்சரிவை குறைக்கும் வேலைகளின் ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக அவசர பணிகள் மற்றும் பெ.சே.வ. ஆகியன நீங்கலாக 327 மில்லியன் இலங்கை ரூபா (1.65 மில்லியன் ஐ.அ.டொலர்) என்ற மதிப்பீட்டு மொத்த ஆகுசெலவாகும்.

2. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு, கம்பஹா, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் [கம்பஹா மாவட்டத்தில் வெயங்கொட-ருவன்வெல வீதியில் Ch15+740 – Ch 15-790 இற்கு இடையில்; கொழும்பு மாவட்டத்தில் களுவக்கல சந்தி; குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவெல பஸ் நிலையம் மற்றும் வெயங்கொட-ருவன்வெல வீதி (B445) – அமைவிடம் 01 (23 + 100-Ch 23+210 Rhs), கேகாலை மாவட்டத்தில் கேகாலை நீதிமன்ற இடப்பரப்பு, புளத்கொஹுபிட்டிய ஆகிய இடங்களில் அமைந்துள்ள மேலேயுள்ள வேலைக்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து, இப்போது கோருகின்றார். இந்த ஒப்பந்தத்தின் நிருமாணக் காலப்பகுதியானது 365 நாட்காட்டி நாட்களாகுமென்பதுடன் குறைபாடுகள் பொறுப்புக் காலப்பகுதியானது நிருமாண வேலைகளை பூர்த்தி செய்த பின்னர் 365 நாட்களாகும்.

   ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   அ) உள்நாட்டு கேள்விதாரர் நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA/ICTAD- முன்பு ICTAD என்றழைக்கப்பட்டது) கட்டிடம் மற்றும் சிவில் பொறியியலின் கீழ் சி-2 அல்லது மேற்பட்ட தரத்தில் அல்லது soil nailing and Stabilization இன் கீழ் எஸ்பி-1 தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரரும் எவ்வித ''நிருமாண ஒப்பந்தத்தை'' பிரதான/தலைமை தாங்கும் சாராராக மேற்கொள்ள விரும்பினால், அதனது கேள்வியின் வெற்றிதாரராக தெரிவு செய்யப்பட்டால், வெளிநாட்டு ஒப்பந்தக்காரருக்கான தற்காலிக பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும் - 2018.08.23 ஆம் திகதியிடப்பட்டதும் 2085/19 என்ற இலக்கமுடையதும் ''வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்'' என்ற தலைப்புமுடைய வர்த்தமானியை பார்க்கவும் - இதனை **www.documents.gov.lk** என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு **www.cida.gov.lk** என்ற இணையத்தையும் பார்வையிடவும்.

   ஆ) பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே இக்கேள்வியில் பங்குபெறலாம்.

   **A. நிதியிடல்:**

   i. திரவச் சொத்துக்கள், தடைகளற்ற ஆதனங்கள், கடன் வரிசைகள் மற்றும் ஏனைய நிதியிடல் வழிகள் (ஒப்பந்தரீதியிலான முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக) நிருமாண காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 90 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான (0.45 மில்லியன் அ.ஐ.டொ) ஆகியவற்றை கேள்விதாரரின் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக இந்த ஒப்பந்தம்(ஒப்பந்தங்கள்) இற்காக இருப்பதாக கேள்விதாரர் காட்சிப்படுத்தல் வேண்டும் அல்லது அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிகளை முன்வைத்தல் வேண்டும்.

   ii. விலைமனுதாரர் தொழில்தருனரின் திருப்திக்காக தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் மற்றும் எதிர்கால ஒப்பந்த கடப்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான போதுமானளவு நிதி வளத்தைக் கொண்டுள்ளார் என்பதையும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

   iii. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைகள் அல்லது கேள்விதாரரின் நாட்டின் சட்டத்தினால் தேவைப்படாதவிடத்து, தொழில்தருனருக்கு ஏற்புடையதாகவுள்ள ஏனைய நிதியிடல் கூற்றுக்கள் கடந்த 5 வருடங்களுக்கானவை (2015-2016) இலிருந்து (2019-2020) வரையுமானவையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விதாரரின் தற்போதைய நிதியிடல் தன்மையின் நிலைமை அத்துடன் அதனது நீண்டகால இலாபத்தின் வளமையையும் சுட்டிக் காட்டல் வேண்டும். (ஆகக் குறைந்த தேவைப்பாட்டின் பிரகாரம் கேள்விதாரரொருவரின் மொத்த ஆதனங்களினதும் மற்றும் மொத்த கடன்பொறுப்புக்களினதும் வேறுபாடாக கணக்கிடப்பட்ட தேறிய வருமானம் சாதகமாகவிருத்தல் வேண்டும். இலாபத்தன்மையின் பாதகமான பெறுபேறானது கேள்வியின் நிராகரிப்பிற்கு வழிவகுக்கும்.

   iv. கடந்த ஐந்து வருடங்களில் (2015 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து) நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் ஆகக் குறைந்தது சராசரி வருடாந்த பெறுமதி ஆகக் குறைந்தது 562 மில்லியன் இலங்கை ரூபாவாக (2.84 மில்லியன் அ.ஐ.டொலர்) ஆக இருத்தல் வேண்டும்.

   **B. நிருமாண அனுபவம்:**

   **பொதுவான அனுபவம்.**

   i. 2016 சனவரி 1ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து ஆகக் குறைந்தது கடந்த 05 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரர், கூட்டுமுயற்சி அங்கத்தவர், உபஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக நிருமான ஒப்பந்தங்களில் அனுபவமிருத்தல் வேண்டும்.

   **திட்டவட்டமான அனுபவம்:**

   ii. 280 மில்லியன் இலங்கை ரூபா (1.4 மில்லியன் அ.ஐ. டொலர்) ஆகக் குறைந்த பெறுமதியில் ஒரு ஒப்பந்தமாக திருப்திகரமாக, பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி அங்கத்தினராக, முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உபஒப்பந்தக்காரராக 2011 சனவரி 1 ஆம் திகதிக்கும் கேள்விக்கான இறுதி திகதிக்குமிடையில் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   அல்லது

   ஆகக் குறைந்தது 3 ஒப்பந்தக்காரர்கள் நிகரான நிருமான நுட்பங்கள் சமகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டதும் மொத்த பெறுமதி 280 மில்லியன் ரூபாவிற்கு (1.4 மில்லியன் அ.ஐ.டொ. இற்கு மேற்பட்டதிற்கு நிகராகவும் பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டு முயற்சி அங்கத்தவர், முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப-ஒப்பந்தக்காரராக 2011 சனவரி 1 ஆம் திகதிக்கும் கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையிலுள்ளவைகளும் பரிசீலிக்கப்படும்.

   iii. மேலே குறிப்பிட்டுள்ளவைக்கும் வேறேதாவது ஒப்பந்தக்களுக்கும் (கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்) பிரதான ஒப்பந்தக்காரராக அல்லது கூட்டு முயற்சி அங்கத்தவர் அல்லது உபஒப்பந்தக்காரராக 2011 சனவரி 1 அம் திகதிக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையில் பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஆகக் குறைந்தளவு நிருமாண அனுபவத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   - Construction of Soil nails/Soil Anchoring மற்றும் இணைந்த வேலைகள்: வருடத்திற்கு 2,300 மில்லியன்
   - செங்குத்து நிரையிலுள்ள வடிகால்களின் நிர்மாணம்: வருடத்திற்கு 800 மில்லியன்.

   **C. முக்கியமான உபகரணம் மற்றும் ஆளணியினர்:**

   கேள்வி ஆவணத்தின் III ஆம் பிரிவின் 4 மற்றும் 5 இன் அம்சங்களில் பட்டியலிடப்பட்ட அவசியமான உபகரணம் மற்றும் பணியாளர்களை தகுந்த நேரத்தில் கையேற்பதற்கான முன்மொழிவுகள்.

3. 2016 ஜூன் 2 ஆம் திகதியிட்ட பயனாளிக்கான கொள்வனவு பணிப்புரைகளின் AIIB இன் Interim Operational Directive இல் நிருணயிக்கப்பட்ட கேள்விக்கான கோரிக்கையொன்றை பாவித்து சர்வதேச பகிரங்க போட்டிரீதியிலான கேள்வி சமர்ப்பித்தல் ஊடாக கேள்வி நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள சர்வதேச மற்றும் உள்ளூர் கேள்விதாரர்கள் RLVMMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலைப் பெற்று (தொலைபேசி: 011-2559869) வேலை நாட்களில் கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 எமணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கலாம். கேள்வி ஆவணமானது www.nbro.gov.lk என்ற இணையத்திலும் 2021.03.12 ஆம் திகதியிலிருந்து 2021.04.25 ஆம் திகதி வரையும் பரீட்சிக்கலாம். இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. கேள்வியை சமர்ப்பிப்பதற்காக, ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்கள் 2021.03.15 ஆம் திகதியிலிருந்து 2021.04.25 ஆம் திகதி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் கேள்வி ஆவணங்களை வழங்குமாறு கேட்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

   மேலும், பிசிஏ-3 படிவத்தை பெறுவதற்காக **www.drc.gov.lk** என்ற கம்பனிகளின் பதிவாளரின் ஒன்லையின் மூலம் தொடர்பு கொள்ளலாம். பதிவு செய்தல் செயற்பாடானது ஒன்லையின் முறைமைக்கு eroc.dre.gov.lk என்ற இணையத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது.

6. 2021.03.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் நடைபெறும். தள விஜயங்கள் முறையே 2021.03.22 மற்றும் 2021.03.23 ஆம் திகதிகளில் பொல்கஹாவெல பஸ் நிலையம் மற்றும் களுவக்கள சந்தியில் மு.ப. 8 மணிக்கு ஆரம்பமாகும்.

7. கேள்விகள் 2021.04.27 ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரிக்கு பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் கேள்விதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமுகமளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோர் முன்னிலையில் கீழேயுள்ள முகவரியில் பகிரங்கமாக திறக்கப்படும்.

8. அனைத்து கேள்விகளும் 5 மில்லியன் இலங்கை ரூபாவில் அல்லது இலகுவாக வெளிநாட்டு நாணயத்தில் மாற்றக்கூடிய கேள்வி பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   கேள்வி பிணையானது கேள்வி படிவங்களின் IV பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக தொழில்தருனரினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதொரு நிபந்தனையற்ற பிணையாகவிருத்தல் வேண்டும்.

   தேவைப்படும் கேள்வி பாதுகாப்பு தொகையை இலகுவாக மாற்றக்கூடிய நாணயமாக மாற்றுவதற்கு, கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதிக்கு 28 நாட்கள் முன்னராக பிரசுரிக்கப்பட்ட விற்பனை செய்யும் பரிவர்தனை விகிதமானது பிரயோகிக்கப்படும்.

   கேள்விப் பிணையானது இன்னொரு நாட்டிலுள்ள வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டிருந்தால், கேள்வி படிவங்களுக்கான IV பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பொருந்தியுள்ள வங்கியொன்றினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9. கேள்வி ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ள நன்மையபக்கும் உரித்துடமையை காட்சிப்படுத்தும் படிவத்தை பாவித்து ஒப்பந்தம் வழங்கும் அறிவித்தலை ஒரு பாகமாக பாவித்து வெற்றிகரமான கேள்விதாரரின் தகவலை வெளியிடுமாறு பெறுகை ஒழுங்குவிதிகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்து

10. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்றிட்ட முகவரி(முகவரிகளானது) பின்வருமாறு. செயற்றிட்ட பணிப்பாளர், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05, இலங்கை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகை குழு,**
**தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம்,**
**''நில மெதுர'',**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 05,**
**இலங்கை.**

---

# சிறு விளம்பரம்

## வேலைவாய்ப்பு

**325**

### தொழில்துறை
பொது

எமது நிறுவனத்திற்கு திறமையான வாகன ஜெண்டர் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. கொஹுவல, நுகேகொடை. 0777252876.
018812

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சி பெற்ற/ பயிற்சிபெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. ஒருநாள் சம்பளம் ரூ.1200/- முதல் ரூ.1500/- மாதாந்தம் ரூ. 50, 000 வரை வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல. 18, வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300.
019987

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

---

# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Please Contact | MANAGER FRONT OFFICE | Hotline 1949

LAKE HOUSE

# சர்வதேச செய்திகள்

## சூச்சி மீது மியன்மார் இராணுவம் கடுமையான புதிய குற்றச்சாட்டு



மியன்மாரின் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் முக்கியத் தலைவரான ஆங் சான் சூச்சி 6 இலட்சம் அமெரிக்க டொலர்கள் மற்றும் 11 கிலோ தங்கத்தை சட்ட விரோதமாகப் பெற்றதாக மியன்மார் இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 2021 பெப்ரவரி 1ஆம் திகதி மியன்மாரில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கவிழ்த்த பின், சூச்சி மீது இராணுவம் கூறிய குற்றச்சாட்டுகளிலேயே இது மிகப் பெரியது மற்றும் கடுமையானதாக இது உள்ளது.

இதுவரை சூச்சி சட்ட விரோதமாக பணம் மற்றும் தங்கத்தைப் பெற்றதற்கு எந்த ஆதாரமும் வழங்கப்படவில்லை. தேசிய ஜனநாயக லீக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர், சூச்சி மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.


மியன்மாரில் இராணுவம் "மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்களைச்" செய்து வருகிறது என, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆய்வாளர் ஒருவர் குற்றஞ்சுமத்தி உள்ளார்.

"மியன்மார் தற்போது கொலைகார, சட்ட விரோதமான ஆட்சியாளர்களால் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் தொடர்ந்து மற்றவர்களைத் துன்புறுத்துவது, கொலை செய்வது போன்ற குற்றங்களைச் செய்து வருகிறார்கள்" என ஜெனீவாவில் இருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபையிடம் ஐ.நாவின் தோமஸ் ஆண்ட்ரூவ்ஸ் தெரிவித்தார். அவரது கூற்றை மன்னிப்புச் சபை மனித உரிமைகள் குழுவும் உறுதிப்படுத்துகிறது.

மியன்மார் தலைவர்கள் மற்றும் மியன்மார் இராணுவத்துக்குச் சொந்தமான அந்நாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனத்தின் மீது தடை விதிக்க வேண்டும் என ஆண்ட்ரூவ் கூறினார். இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைத் தொடவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே அமெரிக்கா 10 ஆட்சிக்கவிழ்ப்புத் தலைவர்கள் மற்றும் மூன்று நிறுவனங்கள் மீது தடை விதித்திருப்பது நினைவுகூரத்தக்கது. இதில் தற்போதைய பொறுப்புத் தலைவரும் அடக்கம்.

## ஒலி நாடாவை கண்டுபிடித்த லூ ஒட்டன்ஸ் காலமானார்




ஒலி நாடாவை கண்டுபிடித்த நெதர்லாந்து பொறியியலாளர் லூ ஒட்டன்ஸ் தனது 94 ஆவது வயதில் காலமானார்.

1960களில் ஒலி நாடாவை அவர் அறிமுகம் செய்தது தொடக்கம் உலகெங்கும் சுமார் 100 பில்லியன் ஒலி நாடாக்கல் விற்பனையாகி இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

ஒட்டன்ஸின் கண்டுபிடிப்பு மக்கள் இசையை கேட்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியபோதும் அண்மைக் காலத்தில் ஒலி நாடாவின் பயன்பாடு குறைந்து காணப்படுகிறது.

கடந்த வார இறுதியில் ஒட்டன்ஸ் தனது சொந்த ஊரான டுயிசலில் மரணித்தார் என்று அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

1960இல் பிலிப் தயாரிப்பு மேம்பாட்டு திணைக்களத்தின் தலைவராக ஒட்டன்ஸ் இருந்தபோதே, அவர் மற்றும் அவரது குழுவினர் ஒலி நாடாவை மேம்படுத்தினர்.

1963இல் பெர்லின் வானொலி மின்னணு கண்காட்சி நிகழ்ச்சியில் அந்த சாதனம் காட்சிக்கு வைக்கப்பட்ட பின்னர் அது உலகெங்கும் வெற்றி பெற்றது.

பிலிப்ஸ் மற்றும் சோனி நிறுவனங்களுடன் ஒட்டன்ஸ் ஒப்பந்தம் செய்து கொண்ட நிலையில் அவரது வடிவ ஒலி நாடாக்கள் காப்புரிமை பெற்றதாக இருந்தது. தொடந்து ஜப்பானிய நிறுவனங்கள் இதேபோன்று ஒலி நாடாக்களை பல்வேறு அளவுகளில் தயாரித்தன.

குறுந்தகடு உருவாக்கியதிலும் ஒட்டன்ஸ் பங்கேற்றுள்ளார். இந்த குறுந்தகடுகள் உலகெங்கும் 200 பில்லியனுக்கும் அதிகம் விற்பனையாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து:

## இரத்தக் கட்டு ஏற்படும் அச்சத்தால் பல நாடுகளில் பயன்பாடு நிறுத்தம்




அஸ்ட்ராசெனக்கா கொரோனா தப்பு மருந்தால் இரத்தக் கட்டுகள் ஏற்படும் அச்சம் காரணமாக பல நாடுகளும் அந்த தடுப்பு மருந்தை பயன்படுத்துவதை இடைநிறுத்தியுள்ளன.

இந்த ஆபத்து தொடர்பில் உறுதியான ஆதாரங்கள் இல்லாத நிலையிலும் அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தை பெறுவதை தாய்லாந்து ஒத்திவைத்துள்ளது.

நாட்டின் தடுப்பு மருந்து திட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் நேற்று தாய்லாந்து பிரதமர் தடுப்பு மருந்தை போட்டுக்கொள்ளவிருந்த நிலையில் அது பின்னர் ரத்துச் செய்யப்பட்டது.

ஏற்கனவே டென்மார்க் மற்றும் நோர்வே உட்பட பல நாடுகள் இந்த தடுப்பு மருந்து பயன்பாட்டை இடைநிறுத்தியுள்ளன. இதில் முன்னெச்சரிக்கையாக, இத்தாலியும், ஆஸ்திரியாவும் அந்தத் தடுப்பூசியின் சில தொகுதிகளைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டன.

பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட சில நாடுகள் அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசியைத் தொடர்ந்து பயன்படுத்தப்போவதாக அறிவித்துள்ளன.

ஐரோப்பாவில் சுமார் 5 மில்லியன் பேர் அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தை ஏற்கனவே பெற்றுள்ளனர். இதில் இரத்தக் கட்டுக்கள் ஏற்பட்ட 30 சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

எனினும் இந்த தடுப்பு மருந்துதான் இரத்தக் கட்டு ஏற்படுவதற்கு காரணம் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று குறிப்பட்ட ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம், 'இந்த மருந்தின் நன்மைகள் தொடர்ந்து அபாயங்களை விடவும் அதிகமாக உள்ளன' என்று தெரிவித்துள்ளது.

மருத்துவ ரீதியான சோதனைகளில் இந்த மருந்தின் பாதுகாப்பு பற்றி தீவிரமாக ஆராயப்பட்டதாக அஸ்ட்ராசெனக்கா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'அஸ்ட்ராசெனக்காவின் தரம் சிறந்ததாக இருந்தபோதும், சில நாடுகள் அதனை தாமதப்படுத்த கோரியுள்ளன' என்று தாய்லாந்து தடுப்பு மருந்துக் குழுவின் ஆலோசகர் ஒருவரான பியாசகோல் சகொல்சடாயாடோன் ஊடக சந்திப்பு ஒன்றில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'நாம் அதனை தாமதப்படுத்தியிருக்கிறோம்' என்றும் அவர் கூறினார். எனினும் ஐரோப்பாவில் வழங்கப்பட்ட அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தில் இருந்து இது மாறுபட்டிருப்பதாக தாய்லாந்து பொது சுகாதார அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த இரத்தக் கட்டுகள் பிரச்சினை ஆசியாவில் பதிவாகவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவின் 200,000 தடுப்பு மருந்துகளுடன் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி 117,300 அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்துகள் தாய்லாந்தை வந்தடைந்தன.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி தடுப்பு மருந்து போடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் தாய்லாந்தில் 30,000க்கும் அதிகமானவர்களுக்கு அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து போடப்பட்டுள்ளது. எனினும் சீனாவின் கொரோனாவெக் தடுப்பு மருந்து தொடர்ந்து வழங்கப்படுவதாக தாய்லாந்து நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. எனினும் அவுஸ்திரேலியா அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தை தொடர்ந்து பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளது. எனினும் நிலைமையை தீவிரமாக அவதானித்து வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா சுமார் 54 மில்லியன் முறை போடத் தேவையான அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசிகளை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது. அவற்றில் சுமார் 50 மில்லியன் தடுப்பூசிகளை உள்நாட்டிலேயே அவுஸ்திரேலியா உற்பத்தி செய்யவுள்ளது.

எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி பாதுகாப்பானது என்பதை மக்களுக்கு மறுவுறுதிப்படுத்துவது ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்குமுறை ஆணையத்துக்குப் பெரும் சவாலாய் அமைந்துள்ளது.

அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி போட்டால், இரத்தம் உறைந்து போகும் சாத்தியம் அதிகரிக்கலாம் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

## "அரச குடும்பத்தில் இனவாதம் இல்லை"



பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் இனவாதம் இல்லை என்று தமது குடும்பத்தைத் தற்காத்துப் பேசியுள்ளார் இளவரசர் வில்லியம்.

இளவரசர் ஹரி, அவரது மனைவி மேகன் மெர்க்கல் ஆகியோர், அரச குடும்பத்தில் இனவாதத்தை எதிர்நோக்கியதாகக் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து வில்லியம் இவ்வாறு கூறியுள்ளார்.

தொலைக்காட்சிப் பிரபலம் ஓப்ரா வின்ப்ரியுடனான நேர்காணலில், தங்களது மகன் ஆர்ச்சியின் தோல் நிறம் குறித்து அரச குடும்ப உறுப்பினர் ஒருவர் அக்கறை தெரிவித்ததாக ஹரியும் மேகனும் கூறியிருந்தனர்.

அதுபற்றி, ஹரியுடன் இன்னும் பேசவில்லை என்றும் கூடிய விரைவில் பேசவுள்ளதாகவும் இளவரசர் வில்லியம் தெரிவித்தார்.

அந்த விவகாரம், தனிப்பட்ட முறையில் விசாரிக்கப்படும் என பக்கிங்ஹாம் அரண்மனை குறிப்பிட்டுள்ளது.

சர்ச்சை குறித்து ஹரியின் தந்தையான இளவரசர் சார்ல்ஸ் இன்னும் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

## நெருப்பு குழம்பை கக்கிய இந்தோனேசிய எரிமலை



இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள சினாபுங் எரிமலை மீண்டும் நெருப்புக் குழம்பையும் சாம்பலையும் கக்கியுள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து குமுறிக் கொண்டிருக்கும் அந்த எரிமலை இதற்குமுன் இம்மாத ஆரம்பத்தில் வெடித்தது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை நேர்ந்த வெடிப்பில் அது கக்கிய புகையும் சாம்பலும் ஆயிரம் மீற்றர் உயரம் வரை சென்றன.

2,600 மீற்றர் உயரமுள்ள அந்த எரிமலை வட சுமத்ரா மாநிலத்தில் உள்ளது.

அதிலிருந்து வெளியான சாம்பல் தென்கிழக்கே 3 கிலோமீற்றர் வரை பரவியதாக இந்தோனேசிய எரிமலை ஆய்வு நிலையம் தெரிவித்தது.

எரிமலையில் இருந்து 5 கிலோமீற்றருக்கு அப்பால் சென்றுவிடும்படி கிராமவாசிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

வழிந்தோடும் எரிமலைக் குழம்பால் ஏற்படக்கூடிய அபாயம் பற்றி எச்சரிக்கையுடன் இருக்கும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## 1.9 டிரி. டொலர் நிவாரணம்: அமெ. ஜனாதிபதி ஒப்புதல்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 1.9 டிரில்லியன் டொலர் வைரஸ் தொற்று நிவாரண நிதித் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்த வார இறுதிக்குள் பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு நேரடியாக அனுகூலங்கள் சென்றுசேர அது வழிவகுக்கும்.

இதன்படி இந்தத் திட்டத்தால் 85 வீதமான அமெரிக்க குடும்பங்கள் பயன்பெறும். இந்த மாதத்துக்குள் அமெரிக்கர்களுக்கு தலா 1,400 டொலர் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது ஜனநாயகக் கட்சியினரின் கட்டுப்பாட்டில் உள்ள பாராளுமன்றத்தில், ஜனாதிபதி பைடனுக்குக் கிடைத்த முதல் முக்கிய வெற்றியாக அது கருதப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றை உலகளாவிய நோய்ப்பரவலாக உலக சுகாதார அமைப்பு அறிவித்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், இந்த அறிவிப்பு வந்துள்ளது.

பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்று 50 நாட்கள் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் பஸ் வண்டி பள்ளத்தில் கவிழ்ந்து 27 பேர் பலி



இந்தோனேசியாவில் சுற்றுலாப் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஜாவா மாகாணத்தின் சுபங் நகரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தாசிக்மாலயா மாவட்டத்தில் உள்ள புனித தலத்துக்கு சுற்றுலா சென்று விட்டு பஸ்ஸில் ஊர் திரும்பியுள்ளனர். அப்போது, சுமேதங் மாவட்டத்தில் அவர்கள் வந்த பஸ் கடந்த புதன்கிழமை இரவு கட்டுப்பாட்டை இழந்து 20 மீற்றர் ஆழம் கொண்ட பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த கோர சம்பவத்தில், பஸ் ஓட்டுநர் உட்பட 27 பேர் உயிரிழந்தனர். 39 பேர் காயமடைந்தனர். அவர்களில் 13 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அனைத்து உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்த அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதல் கட்ட விசாரணையில் பஸ்ஸின் பிரேக் செயலிழந்ததையடுத்து இந்த விபத்து நிகழ்ந்துள்ளது தெரியவந்தது. இந்த சம்பவத்துக்கான காரணம் குறித்து மேலும் விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2019 டிசம்பரில் 80 மீற்றர் ஆழத்தில் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 35 பேர் பலியாகினர். அதற்கு முன் 2018இல் மேற்கு ஜாவா மலைப் பிரதேசத்தில் சுற்றுலா பஸ் விபத்தில் சிக்கியதில் 27 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அயல்நாட்டு செய்திகள்



**நான்கு இந்திய மீனவர்களின் கொலை வழக்கு**

## மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

நான்கு இந்திய மீனவர்களை கொலை செய்த விவகாரத்தில், இலங்கை கடற்படை அதிகாரிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என தாக்கல் செய்த மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்து, அது தொடர்பான வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் தங்கச்சிமடத்தை சேர்ந்த நான்கு இந்திய மீனவர்களை கடந்த ஜனவரி மாதம் நடுக்கடலில் வைத்து இலங்கை கடற்படையினர் கொலை செய்தனர். இதுமிகப்பெரிய சர்ச்சையாக எழுந்தது. மேலும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்கண்ட சம்பவம் தொடர்பாக கடல்சார் மக்கள் நல சங்கத்தின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெய்சுகின் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்திய இலங்கை கடற்படை அதிகாரிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். இறந்த ஒவ்வொரு மீனவருக்கும் ரூ.5 கோடி இழப்பீடு வழங்க வேண்டும். மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் இருக்கவும், தமிழக மீனவர்களை காப்பாற்றும் விதமாக வழிவகைகளை மேற்கொள்ள மத்திய மாநில அரசுக்கு உத்தரவிட வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இந்த மனுவானது உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்டே அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரிக்க மறுத்த நீதிபதிகள், இது தொடர்பாக வேண்டுமானால் மனுதாரர் உயர்நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம் எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## செங்கல்பட்டு அதிமுக வேட்பாளரை மாற்ற கோரி உண்ணாவிரத போராட்டம்



செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளரை மாற்ற கோரி சிங்கபெருமாள் கோவிலில் அதிமுக நிர்வாகிகள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தல் அடுத்த மாதம் 6ம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி அரசியல் கட்சியினர், கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீடு, வேட்பாளர்கள் அறிவிப்பு, பிரசாரம் என தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதில் முக்கியமாக அதிமுக கூட்டணியில் வேட்பாளர் அறிவிப்புக்கு எதிர்ப்பு மற்றும் கூட்டணி கட்சிக்கு தொகுதி ஒதுக்கியதில் அதிருப்தி போன்ற காரணங்களால் பல இடங்களில் ஆர்ப்பாட்டம், மறியல் நடந்து வருகிறது. செங்கல்பட்டு தொகுதியில் அதிமுக வேட்பாளராக கஜா (எ) கஜேந்திரன் அறிவிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அதிமுக நிர்வாகிகள் சிங்க பெருமாள் கோவிலில் நேற்று முன்தினம் சாலை மறியலில் ஈடுபட்டனர். நேற்று சிங்கபெருமாள்கோவில் எம்ஜிஆர் சிலை அருகே சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அதிமுக நிர்வாகி அன்சாரி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து மறைமலைநகர் இன்ஸ்பெக்டர் நந்தகோபால் தலைமையில் பொலிசார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களிடம் பொலிசார் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கஜேந்திரன், நேற்று முதல் அதிமுக முக்கிய நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி பிரமுகர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார். இதனால் செங்கல்பட்டில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

## மக்கள் நீதி மய்யம் கட்சியின் 2ஆம் கட்ட வேட்பாளர்கள் பட்டியல்



சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் போட்டியிடும் 2ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று வெளியிட்டார்.

கோவை தெற்கு தொகுதியில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் போட்டியிடுகிறார்.

சிங்காநல்லூர் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் துணைத் தலைவர் மகேந்திரன், தி.நகரில் பழ.கருப்பையா, மயிலாப்பூரில் ஸ்ரீபிரியா போட்டியிடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


கமல் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட சென்னை ஆலந்தூர் தொகுதியில் நடிகர் ஆனந்த் பாபு களமிறக்கப்பட்டுள்ளார்.

எடப்பாடி தொகுதியில் முதல்வர் பழனிசாமிக்கு எதிராக தாசப்பராஜ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் சார்பில் சுபா சார்ல்ஸ் போட்டியிடுகிறார்.


## வேட்பாளர் பட்டியல் வெளியிடாமலேயே வேட்புமனு தாக்கல் செய்த பாஜக வேட்பாளர்

பாஜக வேட்பாளர் பட்டியல் இதுவரை வெளியாகாத நிலையில் அதற்கு முன்பாகவே நயினார் நாகேந்திரன் நெல்லையில் நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதிமுக கூட்டணியில் பாஜக 20 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதற்கான பட்டியல் 10ம் தேதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதன்படி, 1. திருவண்ணாமலை, 2. நாகர்கோவில், 3. குளச்சல், 4. விளவங்கோடு, 5. ராமநாதபுரம், 6. மொடக்குறிச்சி, 7. துறைமுகம், 8. ஆயிரம் விளக்கு, 9. திருக்கோவிலூர், 10. திட்டக்குடி (தனி), 11. கோவை தெற்கு, 12. விருதுநகர், 13. அரவக்குறிச்சி, 14. திருவையாறு, 15. உதகமண்டலம், 16. திருநெல்வேலி, 17. தளி, 18. காரைக்குடி, 19. தாராபுரம் (தனி), 20. மதுரை வடக்கு ஆகிய 20 தொகுதிகளில் பாஜக போட்டியிடுகிறது. எனினும் பாஜக வேட்பாளர் பட்டியல் இதுவரை வெளியாகவில்லை.

பாஜக வேட்பாளர் பட்டியலை இறுதி செய்ய அக்கட்சியின் மாநிலத் தலைவர் எல்.முருகன், மாநில பொதுச் செயலாளர் கேசவ விநாயகம், முன்னாள் மத்திய அமைச்சரும் கன்னியாகுமரி மக்களவை தொகுதி வேட்பாளருமான பொன்.ராதாகிருஷ்ணன் அடங்கிய குழுவினர் நேற்று டெல்லி சென்றனர். இதில், வேட்பாளர்களின் சாதக, பாதகங்களை அறிந்து இறுதிப் பட்டியலை பாஜக மத்தியத் தேர்தல் குழு வெளியிடும். இந்நிலையில், முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாஜக மாநிலத் துணைத் தலைவருமான நயினார் நாகேந்திரன் நெல்லையில் போட்டியிட நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்தார். பாஜக வேட்பாளர் பட்டியல் இதுவரை வெளியாகாத நிலையில், நயினார் நாகேந்திரன் பாஜக சார்பில் வேட்பு மனுத்தாக்கல் செய்தது நெல்லையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## யானை கட்டி போரடித்த பட்டதாரி



மதுரை அருகே யானையை வைத்து விவசாயி போரடித்த காட்சி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மாவட்டம், மேலூர் அருகே புலிப்பட்டியை சேர்ந்தவர் மதன் பாபு (26) பி.டெக் பட்டதாரி. சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தவர், விவசாய ஆர்வத்தில் வேலையை இராஜினாமா செய்தார். மதுரை மேலமாசி வீதியில், இன்ஸ்டிடியூட் நடத்தி வருகிறார். இவர் அரசு அனுமதியுடன் சுமதி என்ற 40 வயது பெண் யானையை தனது தோட்டத்தில் வளர்த்து வருகிறார்.

திருவிழா மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு இந்த யானையை வாடகைக்கு விடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். இவர் சில நாட்களுக்கு முன்பு தனது வயலில் அறுவடை செய்த நெல்லை, யானையை வைத்து போரடித்து, அதை வீடியோவாக பதிவு செய்தார். அந்த வீடியோ காட்சியை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார். மதன்பாபு கூறுகையில், ‘‘4 தலைமுறையாக யானை வளர்க்கிறோம். தாயும் விவசாயிதான். ஆகையால் எனக்கும் விவசாயம் மீது ஆர்வம் ஏற்பட்டது. மாட்டின் சாணம், யானையின் சாணம் ஆகியவற்றை உரமாக பயன்படுத்தி, இயற்கை விவசாயமும் செய்து வருகிறோம். டிராக்டர் வைத்து போர் அடிக்கிறோமே, யானையை வைத்து அடித்தால் என்னவென்று தோன்றியது. எங்களது 13 ஏக்கர் விவசாய நிலத்தில், 5 ஏக்கர் நெல் பயிரிட்டுள்ளோம். அந்த 5 ஏக்கரில் விளைந்த நெல்லை, ஒரே நாளில் யானையை வைத்து போர் அடித்தோம்” என்றார்.

## புதுச்சேரி காங்கிரஸ் அலுவலகம் பாஜக மகளிரணியினரால் முற்றுகை

ஹரியானா முன்னாள் முதலமைச்சர் பூபிந்தர்சிங் ஹூடா கடந்த 8ஆம் திகதி மகளிர் தினவிழாவில், பெண்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டதாக கூறி, நேற்று புதுச்சேரி காங்கிரஸ் அலுவலகத்தை, பாஜக மகளிரணியினர் திடீரென முற்றுகையிட்டனர்.

அப்போது காங்கிரசுக்கு எதிராக மகளிர் அணியினர் கோஷமிட்டபோது, காங்கிரஸ் நிர்வாகிகளும் எதிர் கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது குப்பைத்தொட்டி எடுத்து வீசி இரு தரப்பினரும் தாக்கிக் கொண்டனர்.

இரண்டு கட்சி நிர்வாகிகளிடம் மோதல் ஏற்படும் பரபரப்பான சூழலில், பெரிய கடை பொலிஸார் தடுத்து அவர்களை வெளியேற்றும் போது சிறிது நேரம் பரபரப்பு நீடித்தது.



## தேர்தலில் போட்டியிடுவதாக நான் எப்போதும் கூறவில்லை



**குஷ்பு**

தேர்தலில் போட்டியிடுவதாக நான் எப்போதும் கூறவில்லை. தேர்தல் பொறுப்பாளராக நான் என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் சேப்பாக்கம்/ திருவல்லிக்கேணி தொகுதியில் செய்திருக்கிறேன். எனக்குத் தேர்தலில் போட்டியிட சீட் என்ற நம்பிக்கையில் நான் கட்சிக்கு வரவில்லை. கட்சி மீது நம்பிக்கை வைத்துத்தான் பாஜகவுக்கு வந்திருக்கிறேன். இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி நிச்சயம் வெல்லும் என தெரிவித்தார். ஊடவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிலையில்...

தேர்தலில் போட்டியிட யாருக்கு வாய்ப்பு என்பதை கட்சி மேலிடம் முடிவு செய்யும் என பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் கூறியுள்ளார். தேர்தலில் போட்டியிடுவது குறித்து குஷ்பூவிடம் கேள்வி எழுப்பும் போது வானதி சீனிவாசன் இந்த கருத்தை தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியில் இருந்து பாஜக பக்கம் தாவிய குஷ்பு சில நிபந்தனைகளுடன் தான் இணைந்ததாக பேச்சு அடிபட்டது. முக்கிய பொறுப்பு அல்லது தேர்தலில் போட்டியிட வாய்ப்பு என்பது தான் அந்த நிபந்தனையாம். அதற்கான உத்தரவாதம் கிடைத்த பின்பே பாஜவில் இணைந்தார் என்ற தகவல்கள் வந்தன. அவரது கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக பாஜ தலைமையும் உறுதி அளித்திருந்தது.

இதை எதிர்பார்த்து, சேப்பாக்கம் திருவல்லிக்கேனி தொகுதியை குறிவைத்து களம் இறங்கினார். கடந்த 10 நாட்களாக இந்த தொகுதியில் தெரு தெருவாக பிரசாரத்திலும் ஈடுபட்டார். தொகுதியே ஒதுக்காத நிலையில் குஷ்புவின் அலப்பறையை கண்டு பாஜவினரே அதிர்ச்சி அடைந்தனராம். கண்டெய்னரில் தேர்தல் அலுவலகம் என்றும் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகள் என்றும் பல இலட்சங்களை வாரி இறைத்து வந்தாராம். பாஜவில் குஷ்புக்கு முக்கிய பொறுப்புகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் வரப்போகும் தேர்தலில் குஷ்புக்கு சீட் தரப்படும் என்றும், சேப்பாக்கம் திருவல்லிக்கேனி தொகுதி ஒதுக்க வாய்ப்புள்ளது என்ற தகவலும் வெளியானது. இந்த உற்சாகத்தில் தான் குஷ்பு தேர்தல் களத்தில் குதித்திருப்பது தெரியவந்தது. இந்நிலையில் பாஜவுக்கான தொகுதிகளை நேற்று அதிமுக வெளியிட்டது. அதில் குஷ்பு ஆவலோடு காத்திருந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியே இல்லை. அதை பாமகவுக்கு ஒதுக்கி விட்டனர். பாஜ தலைவர் எல்.முருகன் அவருக்காக முட்டி மோதியும் இந்த தொகுதியை கேட்டு பெற முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கு மாற்றாக மயிலாப்பூர் தொகுதியை கேட்டுள்ளனர். அதையும் அதிமுக தர முடியாது என்று கூறிவிட்டதாக தெரகிறது. இதனால் குஷ்பு மிகவும் ஏமாந்து போயிருப்பதாக கூறப்படுகிறது.

சீட் கிடைத்து விட்டதாகவே நினைத்து தொகுதி முழுவதும் சுற்றி வந்த அவருக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்துள்ளது. இதனால் பாஜ தலைமை மீது குஷ்பு கடும் அதிருப்தியில் உள்ளதாக கூறப்பட்டது.

## கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிப்பு

**மத்திய அரசு மக்களுக்கு எச்சரிக்கை**

நாட்டில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருவதால், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்கும்படி மக்களுக்கு மத்திய அரசு அறிவுரை கூறியுள்ளது. இந்தியாவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. அதிலும், குறிப்பாக நாட்டின் மொத்த வைரஸ் பாதிப்பில் 85 சதவீதம் மகாராஷ்டிரா, தமிழகம், கேரளா உட்பட 8 மாநிலங்களில் இருப்பதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், நிதி ஆயோக் குழு உறுப்பினர் டாக்டர். விகே. பால் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாடு முழுவதும் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இதை கட்டுப்படுத்த மீண்டும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. மகாராஷ்டிராவில் தொற்று பரவல் அதிகரிப்பது கவலை அளிக்கிறது.

இதனால்தான், நாக்பூரில் வரும் 15ம் திகதி முதல் 21ம் திகதி வரை, ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளது. வைரஸ் தொற்றை சாதாரணமாக எடுத்து கொள்ளக் கூடாது. தொற்றில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள, தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும். கொரோனா தொற்றின் காலம் இன்னும் முடியவில்லை. எனவே, மக்கள் பாதுகாப்புடனும், கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளை கழுவுதல் போன்ற பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்




# என் வானம் தூரமில்லை

வானுக்கு உயர்த்தப்பட்ட உயரிய சொல்லொன்று பற்றி
இன்றிரவு நான் எழுதலாம்.
அந்தச் சொல்லின் பிரதியென
கொண்டாடப்பட்ட நானெழுதும் வரிகளில்
அந்தச் சொல் உயர்மிகு வாசத்தினை
பூசிச் சென்றிருக்கும்.
துயர் பற்றிய ஞாபகங்களில்
எல்லாயிடங்களிலும் அந்தச் சொல்
பனிக்காடாய் செழித்து வளர்ந்து
நிற்கும்.
என்னை விரல் பிடித்து
ஆராதித்த சொல்லது
என்னை வீண் ஆசைகளுக்கப்பால்
நடாத்திச் சென்ற சொல்லது.
தர்மத்தை குருதியிலிட்டு
பேரன்பை பழக்கப்படுத்திய சொல்லது.
பிறர் துன்புறு நிலையில்
பின் தொடர
ப்ரியம் தந்த சொல்லது.
யாரோடும் பகைபாராட்டாது
பண்பை ஊற்றிய சொல்லது.
அழுகையே தராத அந்தச் சொல்
ஆகாயத்திலேறி போனது
ஆறாக்காயங்களில் எனை
ஆழப்புதைய வைத்து.
போறது பற்றி அறிவிப்பேதுமில்லாமல்
உடலை மட்டும் தந்து போன
சொல்லே
ஆயிரம் இரவுகள் ஆனாலும்
ஈராயிரம் பகலில் புதையுண்டாலும்
உனை மறக்காத ஞாபகங்களை
உடல் பச்சை சதைகளில்
பச்சை குத்தி
ஆகாசம் கடந்த சொல்லே
துயர் பற்றிய வரிகளில்
உனை எப்போதும் எழுதித்தீர்க்க
பேனா தந்து சென்றது ஏனோ.
ஒவ்வொரு கணமும்
உனை யாசிக்கும்
என்னான்மாவை
நாற்திசையெங்கும் அநாதைப்
பறவையென அலைய வைத்து
என் வானம் கடந்தாயே.
தொழுகை விரிப்பில்
கண்ணீர் மழை பொழிய
விரல் வரிகளில் தஷ்பீஹ்
முழங்க ஒவ்வொரு வேளையும்
சொல்லே உனை விசாலப்படுத்த
அவனை தொழுதுவேன்.
உனக்காய் மன்றாட எனை
விட்டுச் சென்றாய்
என் பாக்கியமென நானழுது வடிப்பேன்
உன் மண்ணறையில் இறை வார்த்தை துதிப்பேன்.
நீ கற்பித்த நற்குணங்களில்
நதியாகி ஓடுவேன்.
நீ விட்டுச் சென்ற கடமைகளில்
நான் பனியாகி உழைப்பேன்.
துயர் மறந்து துயில்
துன்பம் கொடுக்காது
உன் துணைச்சொல்லை
நான் தூக்குவேன்
உன் ஆகாசம் வரும் வரை.
அதுவரை நீ தூங்கு
கவலை வேண்டாம்
அவகாசமிருக்கு
என் வானம் தூரமில்லை.


**ஜே.பிரோஸ்கான்**
2021.03.03
எனது வாப்பாவின் மரணத்தை ஞாபகித்து எழுதப்பட்ட கவிதை.2021.03.03 திகதி.(எம்.ஏ.ஜமால்தீன்)

# ஏழை வாழ்வு



*கொட்டிக் கிடக்குது மாளிகையில் கொத்துக் கணக்கில் உணவு*
*பட்டு தெறிக்குது அவை ஏழை வயிற்றில் பசியாய் நாளும்*
*தட்டில் உணவளிக்கத் தயக்கம் தன்மானம் ஒரு கேடு*
*எட்டி நின்று பார்த்து இரசித்து ஏளனமும் கூடுது பணத்திமிரில்*
*விட்டுக் கொடுத்து உண்ணும் எண்ணம் உண்டு ஏழைகளுக்கு*
*கட்டிப் போட்டது அனாதைகள் எனும் உறவின் பந்தம்*
*தட்டிக் கொடுக்கிறது தயவாய் அணைக்கிறது சுயநலமற்ற உயிர்கள்*
*தொட்டில் இல்லா குழந்தைகளாயினும் தொடருது ஏழைகளின் வாழ்வு*

**சுஜந்தினி யுவராஜா**
(சம்பூரணி)
சம்பூர், மூதூர்.



# புரூஸ்லீ

*உங்கள் மனதைக்*
*காலி செய்யுங்கள்!*
*உருவமற்றவராக இருங்கள்!*
*நீர் போன்று வடிவமற்றிருங்கள்!*
*நீங்கள் ஒரு கோப்பையில்*
*தண்ணீர் வைத்தால்,*
*அது கோப்பையாகிறது.*
*நீங்கள் ஒரு போத்தல்*
*தண்ணீரை வைக்கிறீர்கள்!*
*அது போத்தல் ஆகிறது!*
*நீங்கள் அதை ஒரு தேனீர் கூஜாவில்*
*ஊற்றி வைக்கிறீர்கள்!*
*அது தேனீர் கூஜாவாக மாறுகிறது!*
*இப்போது தண்ணீரானது பாயலாம்!*
*அல்லது அது செயலிழக்கக்கூடும்!*
*தண்ணீர் போல் இரு நண்பா!*
*தமிழில் மொழிபெயர்ப்பு*

கவியரசி
**எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா**

***(காலஞ் சென்ற புரூஸ் லீயின் மகள் ஷான் லீ எழுதிய தந்தையின் சுயசரிதை நூலில் இருந்து காலஞ்சென்ற 'புரூஸ் லீ' அன்று எழுதிய கவிதை ஆங்கில கவிதை 'Be water my friend')***




# ஒன்றிப் போதல்

*நேற்று உதித்த சூரியனும்*
*இன்று உதித்திருக்கும் சூரியனும்*
*வேறு வேறானதல்ல*
*நேற்று விரிந்த வானமும்*
*இன்று விரிந்திருக்கும் வானமும்*
*வேறு வேறானதல்ல*
*நேற்று பறந்து திரிந்த காற்றும்*
*இன்று பறந்து கொண்டிருக்கும் காற்றும்*
*வேறு வேறானதல்ல*
*ஆனால் அலையும் நம் மனசுதான்*
*புதிது பழசென*
*அதனை பிரித்துப் பார்க்கிறது*
*நேற்றென்பது*
*நேற்றோடு தீர்ந்து போனாலும்*
*நேற்றய சூரியனும்*
*நேற்றய வானமும்*
*நேற்றய காற்றும்தான்*
*இன்றைக்குள் விழுந்திருக்கிறது*
*நாம் அதனை*
*நிராகரிக்கிறோமா என்ன*
*அது போலத்தான்*
*நமக்கு வாய்த்த நேற்றய வாழ்வும்*
*ஒன்றிப் பயணித்தால்*
*இன்றில் இருளிருக்க வாய்ப்பில்லை*

**ஜமீல்**

# வாழ்த்துக்களால் அலங்கரிக்கப்பட்ட மகளிர் தினம்!



மனமுள்ளவர்கள் மனதிலும்
உணர்வுள்ளவர்கள் உணர்வு
மீது சத்தியம்
செய்து கூறுங்கள்
இன்று மட்டும்
மகளிரை வாழ்த்தினேன்
என்று.
புகைப்படம் எடுக்கவும்,
ஒரு தொகைப் பணம்
பெறவமாய் நகர்ந்து
செல்கின்றது இன்றைய
நாள்!
இன்றாவது சிறுது
நேரம் சிரமம்
இல்லாது சிறகை
விருத்தி இருந்திருப்பார்கள்
என்பதில் மகிழ்ந்து
கொள்ள வேண்டும்தான்.
நாளை பிறக்க
காலை கூட
பிடிக்க யாருமில்லாது
வேலை என
சிறகடித்துப் பறப்பார்கள்.
இருந்தும் நான்
வாழத்தாவிட்டாலும்
வாழ்ந்தினாலும்
அதனுள் அடங்காதவன்
என்பதில் பெருமிதம்
கொண்டு கூறிப்
போகின்றேன்.....
இனிய மகளிர் தின
நல் வாழ்த்துக்கள்.

**பொத்துவில் அஜ்மல்கான்**

# ஈழத்து நூனின் தட்டுத் தாவாரம் நூல் வெளியீட்டு விழா

*1966 ஆம் ஆண்டு இஸ்லாமிய பாரம்பரியமிக்க குடும்பம் ஒன்றில் இரண்டாவது மகனாக பிறந்த ஏ.எம்.ஏ நிலாம் நீர்கொழும்பு போலவத்த றோமன் கத்தோலிக்க பாடசாலயில் தனது ஆரம்பக்கல்வியையும், மினுவான்கொட அரசினர் பாடசாலையில் தனது உயர்கல்வியையும் கற்றார்.*

*சிரேஷ்ட எழுத்தாளர் மு.பசீரின் தொடர்பும், பழக்கமும் ஏ.எம்.ஏ நிலாமை ஈழத்து நூன் என்ற புனைப்பெயரில் இலக்கிய உலகிற்கு அடையாளப் படுத்தியது.*

*1977 ஆம் ஆண்டு தினகரன் கொழும்பு நிருபராகவும்இ குருநாகல் மாவட்ட வீரகேசரி நிருபராகவும் ஏக காலத்தில் செயற்பட்டதன் மூலம் தனது எழுத்துலக வாழ்க்கையை ஆரம்பித்தார் ஈழத்து நூன் நிலாம். 1983 ஆம் ஆண்டு கலவர காலத்தில் வீரகேசரியின் அலுவலக நிருபராக செயற்பட்டார். சுமார் 10 வருடங்கள் மிகவும் நேர்த்தியான மற்றும் உண்மைச் செய்திகளை தெரிந்தெடுத்து அவற்றை மிகசுவைபட தொகுத்து வழங்குவதில் வல்லவராக திகழ்ந்தார்.*

*புறன்னர் 1990 ஆண்டு தினக்குரல் பத்திரிகையில் இணைந்து கொண்ட ஈழத்து நூன் நிலாம் உதவி ஆசிரியர், பிரதம உதவி ஆசிரியர் என சுமார் 19 வருடங்கள் பணிபுரிந்தார். பின்னர் லேக் ஹவுஸின் தமிழ் தமிழ் பிரசுரங்களின் ஆலோசகராக பணியாற்றி ஓய்வு பெற்றார். பவளவிழா நாயகனான ஈழத்து நூன் நிலாம் இத்தனை வருடங்கள் பத்திரிகைத்துறையில் ஓயாமல் எழுதிக்கொண்டிருந்தார். வெறுமனே செய்தி ஆசிரியராக மட்டுமல்லாது காத்திரமான இலக்கியச் செயற்பாட்டாளராகவும் அவர் செயற்பட்டது தமிழ் இலக்கிய உலகம் நன்கறியும்.*

*இவரின் இலக்கிய செயற்பாடுகளுக்காக 2009 ஆம் ஆண்டு கலாச்சார அமைச்சு கலாபூசணம் விருதினை வழங்கி கௌரவித்தது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கியது அத்தோடு இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த பத்திரிகையாளருக்கான விருது மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர் விருது போன்றவை இவரது திறமைக்கும் இடைவிடாத எழுத்துப்பணிக்கும் கிடைத்த அங்கீகாரமாகும்.*

*ஊடகவியலாளராக அமெரிக்கா, இந்தியா, மலேசியா, சிங்கபூர், பாகிஸ்தான், ஈரான், நேபாளம், சவூதி அரேபியா போன்ற சர்வதேச நாடுகளுக்கு ஊடகப்பயணம் மேற்கொண்டு ஆழமான அனுபவத்தை பெற்றுள்ளார்.*

*ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக உருப்பினரான ஈழத்து நூன் நிலாம் போரத்தின் பொதுச்செயலாளராக, உபதலைவராகஇதேசிய அமைப்பாளராக பல்வேறு பதவிகளை அலங்கரித்து சேவையாற்றியுள்ளார்.*

*அவ்வாறே நீர்கொழும்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும்இஇலங்கை தமிழ் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் மினுவாங்கொட கலை இலக்கிய வட்டத்தின் பொதுச்செயலாளராகவும்இதெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் நிறைவேற்றுக்குழு உருப்பினராகஇ இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் உருப்பினர்இ சித்;திலெப்பை ஆய்வு மையத்தின் உருப்பினர் என்று பல்வேறு அமைப்புக்களில் இணைந்து தீவிர இலக்கிய செயற்பாட்டாளராக செயற்பட்டார்.*

*அரசியல், இலக்கிய கட்டுரைகள் மற்றும் கவிதைகள் என்று தமிழ் இலக்கியப்பரப்பின் எல்லா இயங்குதளங்களிலும் காலூன்றி வெற்றி நடை போடுகிறார் பவழவிழா நாயகன் ஈழத்து நூன் நிலாம். மிகச்சிறியளவிலான கவிதை நூலென்றை “நூன் கவிதைகள்” என்ற தலைப்பில் வெளியிட்டாலும் எதிர்வரும் 20 ஆம் திகதி அவரது பிறந்த மண்ணில் வெளியிடவுள்ள தட்டுத் தாவாரம் என்ற கவிதை நூலே முதன்மையாக கொள்ளத்தக்கது.*

*மனித அவலங்களையும் அவர்தம் வாழ்வியலையும் பாடுகின்ற மனிதநேயமிக்க ஒரு பக்குவப்பட்ட கவிஞன் ஈழத்து நூன் நிலாம் என்ற இந்த தனித்துவமிக்க எழுத்தாளனுக்குள் இருக்கிறான்.*

*இவரது கட்டுரைகளும்நேர்காணல்களும் மனிதபிமானம் எனும் மையப்புள்ளியில் இருந்து எழுதப்பட்டவையாகும்.*

*இலக்கியத்தையும் எழுத்தையும் முழுநேர தொழிலாக அதீத நேசிப்புடன் செய்து வந்த ஈழத்து நூன் நிலாமின் பவளவிழா நிகழ்வும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.*

*ஒரு எழுத்தாளனுக்கு உச்சபட்ச அங்கீகாரமே அவன் பிறந்து வளர்ந்து வாழுகின்ற ஊரில் கிடைக்கின்ற அங்கீகாரமாகும்.*

*அந்த அங்கீகாரம் ஈழத்து நூன் நிலாம் என்ற மக்கள் எழுத்தாளனுக்கு கிடைக்கின்ற இந்த சந்தோ~மான சந்தர்ப்பத்தில் அவரை வாழ்த்துவதோடு விழா வெற்றிபெற இதயத்து பிரார்த்தனைகளை அவருக்காக காணிக்கையாக்குவோம். கலை இலக்கிய வட்டத்தின் பொதுச்செயலாளராகவும் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக, இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் உறுப்பினர், சித்திலெப்பை ஆய்வு மையத்தின் உருப்பினர் என்று பல்வேறு அமைப்புக்களில் இணைந்து தீவிர இலக்கிய செயற்பாட்டாளராக செயற்பட்டார்.*




**நாச்சியாதீவு பர்வீன்**

சேனையூர் பிரீமியர் லீக்

## ஆரம்ப நிகழ்வு கோலாகலமாக ஆரம்பம்



*தோப்பூர் குறூப் நிருபர்*

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சேனையூர் பகுதியில் ஆரம்பமாகவுள்ள சேனையூர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான அங்குரார்ப்பன நிகழ்வு வியாழக்கிழமை (11) காலை சேனையூர் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக ஆரம்பமானது. இப்போட்டித் தொடரில் ஐந்து அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வின்போது தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. விழா ஆரம்பத்தின்போது போட்டித் தொடரில் பங்குபற்றும் அணிகளின் சீருடை அறிமுகம், வெற்றிக் கிண்ணம் அறிமுகம் போன்றனவும் இடம்பெற்றது. அத்தோடு அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜே.ஜனார்த்தன், ஏனைய அதிதிகளாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், மூதூர் பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி ஜெயமாலா, திருவாளர் ஜெகன் மற்றும் ஊர்பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யு.இ.எ.ஃப்.ஏ. சம்பியன்ஸ் லீக்:

# லிவர்பூல்-பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணிகள் காலிறுதிக்கு முன்னேற்றம்

யு.இ.எஃப்.ஏ. சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின், ரவுண்ட்16 இரண்டாவது சுற்று போட்டிகளில், லிவர்பூல் மற்றும் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணிகள் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

புஸ்கஸ் அரினா – புடாபெஸ்ட் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியொன்றில், லிவர்பூல் அணியும் லெய்ப்ஸிக் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், லிவர்பூல் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

இதில் லிவர்பூல் அணி சார்பில், மொஹமட் சாலா 70ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், செடியோ மெனே 74ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

முதல் சுற்று போட்டியில், லிவர்பூல் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றதால், தற்போது ஒட்டுமொத்தமாக 4-0 என்ற கோல்கள் கணக்கில் காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

பார்க் டெஸ் பிரின்சஸ் – பரிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இன்னொரு போட்டியொன்றில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும் பார்சிலோனா அணியும் மோதின.

விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற இப்போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

எனினும், முதல் சுற்று போட்டியில் 4-1 என்ற கோல்கள் கணக்கில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி வெற்றிபெற்றதால், தற்போது 5-2 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலைப் பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

இப்போட்டியில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி சார்பில், கிளியன் எம்பாப்வே 31ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஒரு கோலும், பார்சிலோனா அணி சார்பில், 37ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி ஒரு கோலும் அடித்தனர்.




# மைலோ நிறுவனம் இணை அனுசரணையில் கிண்ணியாவில் அக்செரியன் சூப்பர் லீக்

*கிண்ணியா மத்திய நிருபர்*



கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் கல்வி கற்று கடந்த காலங்களில் விளையாட்டு துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து கல்லூரிக்கு பெருமை தேடிக் கொடுத்த வீரர்களை உள்ளடக்கிய அணிகளுக்கிடையிலான அக்செரியன் சூப்பர் லீக் உதைபந்தாட்ட போட்டியின் ஆரம்ப வைபவமும் முதலாவது போட்டியும் (11) கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த வைபவம் அக்செரியன் சுப்பர் லீக்கின் ஸ்தாபகரும் கிண்ணியா மாகாண பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் இணைப்பாளருமான ஏ.எல்.முகமட் நபில் தலைமையில் நடைபெற்றது.

எட்டு கால்பந்தாட்ட அணிகள் மோதவுள்ள இந்த தொடரின் இன்றைய முதன் நாள் ஆட்டத்தில் அக்செரியன் புளூ ஈக்கிள் அணியும் அக்செரியன் ப்ளெக் பெண்தர்ஸ் அணியும் மோதியது.

இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், எந்த அணியும் கோல் எதனையும் போடவில்லை. இதன் காரணமாக போட்டி சமநிலையில் முடிந்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிளெக் பெண்தர்ஸ் அணி வீரர் முகம்மது நஹ்திர் தெரிவு செய்யப்பட்டார்.



இந் நிகழ்வில், போட்டியின் பிரதான அனுசரணையாளரான பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். மேலும் கிண்ணியா பிரதேச செயலாளர், கிண்ணியா பொலிஸ் பொறுப்பதிகாரி, கிண்ணியா நகர சபைத் தலைவர், பொதுசன பெரமுன மூதூர் தொகுதி இணைப்பாளர், கிண்ணியா உலமா சபைத் தலைவர், திருகோணமலை உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர், கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர் மற்றும் இணை அனுசரணை வழங்கிய மைலோ நிறுவன அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த தொடரில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறும் அணிகளுக்கு முறையே தலா 50,000 40,000, 30,000 ஆயிரம் ரூபா பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

நான்காம் இடத்தைப் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் போட்டியில் பங்கு கொண்ட ஏனைய அணிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

தொடரின் சிறப்பாட்டக்காரருக்கு மௌண்டன் பைசிக்கள் ஒன்றும் கேடயமும் வழங்கப்படவுள்ளதோடு, தொடரின் சிறந்த கோல் காப்பாளராக தெரிவு செய்யப்படுபவருக்கு 5,000 பணப் பரிசும் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

**இதில் பங்குகொள்ளும் அணிகள் மற்றும் தலைவர்களின் விபரங்கள்**

| | |
|---|---|
| வொரீஸ் | என்.எம்.சிபான் |
| ஜுபிடர்ஸ் | எம்.எம்.றோசான் |
| சுப்பர் கிங் | ரீ.எம்.றோஹறான் |
| சுப்பர் போய்ஸ் | எஸ்.எஸ்.இம்பாஸ் |
| சுப்பர் பைட்டர் | என்.எம்.றிபாஸ் |
| புளு ஈக்கிள் | ரீ.எம்.ரோசான் |
| ப்ளெக் பெண்தர்ஸ் | ஐ.எம்.றிம்சான் |
| றேசின் ஸ்டார்ஸ் | எம்.ஆர்.ஆர்.எம்.ஹிசாம் |

ரபேல் மஹாராஜா வெற்றிக் கிண்ணம்:

## கூடைப்பந்தாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி அணி வெற்றி

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் வருடாந்தம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தும் 2020/21ஆண்டுக்கான ரபேல் மஹாராஜா வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத்தொடரில் ஆண்கள் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. பழைய பூங்காவில் அமைத்துள்ள யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டதிடலில் (10) திகதி புதன் கிழமை மின் ஒளியில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 72 : 64 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.



## மூதூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன 2021 இற்கான புதிய நிருவாகிகள் தெரிவு

*மூதூர் தினகரன் நிருபர்*

மூதூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கான (2021) புதிய நிருவாக சபைக்கான தெரிவு அண்மையில் மூதூர் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது. மூதூர் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.ரி. முபாரிஸின் ஆலோசனைக்கமைய முன்னாள் மூதூர் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் மிப்தாஜின் பங்களிப்புடன் மாவட்ட இளைஞர் சேவை திட்டமிடல் அதிகாரி எஸ்.ரவிகுமார் தலைமையில் இதன் தெரிவுகள் இடம்பெற்றது.

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 44 இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் இத் தெரிவில் கலந்து கொண்டனர். இதன்படி 2021 இற்கான புதிய தலைவராக இனாஸ் மரைக்கார், உப தலைவராக புர்க்கான் மிம், செயலாளராக இளைஞர் சேவை அதிகாரி எம்.ரி.முபாரிஸ், பொருளாளராக ரி.கீர்த்திராஜன், உப செயலாளராக முகம்மட் றிபாத் ஆகியோர் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

## செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன்

*ஏறாவூர் குறூப் நிருபர்*

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மகளிருக்கான எல்லே தொடர் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவிருந்த போதிலும் அம்பாறை மாவட்ட அணி சமுகமளிக்காத நிலையில் நேரடியாக இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட அணிகள் பங்கேற்றன.

இரண்டு இன்னிங்ஸ் கொண்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருகோணமலை மாவட்ட அணி களத்தடுப்பினை தெரிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 30 பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி மூன்று ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதல் இன்னிங்ஸில் அரைவாசிக்கு அதிகமான ஓட்டங்கள் பெறாத காரணத்தினால் பின் தொடர் முறையில் மீண்டும் இரண்டாம் இன்னிங்ஸினை தொடர்ந்த திருகோணமலை அணி நான்கு ஓட்டங்களைப் பெற்றது.

இதனடிப்பளடையில் இரண்டு ஓட்டங்கள் வெற்றி இலக்காக தீர்மானிக்கப்பட்டது. இரண்டாது இன்னிங்ஸில் இரண்டு ஓட்டங்களை பெற்று மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனானது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நூர்தீன் முஹமட் நௌபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பதக்கங்களை வழங்கி வைத்தார்.





மென்பந்து தொடர் 2021:

# இலவன் ஹீரோஸ் லெஜண்ட் அணி சம்பியன்



*யூ.கே. காலித்தீன்*

இலவன் ஹீரோஸ் கழக வீரர்களை உள்ளடக்கிய மென்பந்து சுற்றுத்தொடர் அண்மையில் பௌஸி கடற்கரை மைதானத்தில் இடம்பெற்றது.

இலவன் ஹீரோஸ் லெஜண்ட், இலவன் ஹீரோஸ் ஸ்டார்ஸ், இலவன் ஹீரோஸ் சிக்சர்ஸ் என பெயரிடப்பட்டு அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக இச்சுற்றுப் போட்டி இடம் பெற்றது.

இச் சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டிக்கு சல்வி தலைமையிலான "இலவன் ஹீரோஸ் லெஜண்ட்" அணியினரை எதிர்த்து அப்லால் காரியப்பர் தலைமையிலான "இலவன் ஹீரோஸ் சிக்ஸர்" அணியினர் மோதிக்கொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலவன் ஹீரோஸ் லெஜண்ட் அணியினர் முதல் களத்தடுப்பினை ஏற்படுத்தி ஐந்து ஓவர்கள் முடிவில் இலவன் ஹீரோஸ் சிக்ஸர் அணியினர் சகல விக்கட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தினர்.

நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 36 ஓட்டங்களை இலக்காக வைத்து துடுப்பெடுத்தாடி 4 ஓவர்கள் முடிவில் 4 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து இலவன் ஹீரோஸ் லெஜண்ட் அணியினர் கிண்ணத்தை கைப்பற்றினர். இச்சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்ட அம்ஜத் வுரோவும், சிறந்த பந்து வீச்சாளராக விதாத் ஜீஸனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக றமீஸ் வாயும், இச்சுற்றுத்தொடரின் தொடர் ஆட்டநாயகனாக அப்லால் காரியப்பரும் தெரிவு செய்யப்பட்டனர்.



இத்தொடருக்கு நடுவர்களாக ஏ.எம். பயாஸ் மற்றும் ஏ.எம். சியாட் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 13ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.